44



# சக்தி

## மாத வெளியீடு

சாரத் திரள்

●


| | | |
|---|---|---|
| ஞாபகம் இருக்கட்டும்! ... | தலையங்கம் | 1 |
| காலச் சுழல் ... | குறிப்புகள் | 2 |
| தேசியம் ... | ராஷ்டிரபதி ஜவாஹர் | 3 |
| தற்கால இந்தியா ... | சுவாமி விவேகானந்தர் | 5 |
| காதலும் சாதலும் ... | வில்லியம் சரோயன் | 10 |
| மகிமை தங்கிய மருந்து ... | கரமி | 15 |
| சிற்றின்பம் போதுமா? ... | சுப. நாராயணன் | 16 |
| வீரசிங்கம் ... | வல்லிக்கண்ணன் | 21 |
| பாத்துவாசர் விருந்து ... | வால்மிகஞ்சி | 26 |
| ஆசிரியர் அவதி! ... | ஆர். பங்காருஸ்வாமி | 29 |
| கோடைக் காலம் ... | வி. ஞானி | 32 |
| சோள மகாத்மியம் ... | அன்னதாசன் | 35 |
| தமிழர் பிரதிநிதியுடன் ... | படக்காரன | 37-44 |
| கதர் எதற்கு? ... | மகாத்மா காந்தி | 45 |
| கதம்பம் ... | எஸ். ராமநாதன் | 47 |
| சொந்த ரிக்ஷா ... | லாஉ ஷா | 52 |
| போர் ஒழியுமா? ... | ஜூலியன் ஹக்ஸ்லி | 56 |
| அமைதி குலைவது ஏன்? ... | ஞானிகள் குழு | 61 |
| மார்க்ஸியப் பொருளா ... | ரா. ஹாலாஸ்யநாதன் | 65 |
| கலைப் படிப்பு ... | ருத் லாபட் ஹட்டன் | 69 |
| நட்சத்திர பூஜை ... | கொனஷ்டை | 71 |
| புத்தக உலகம் ... | க. சு. அறிவோன | 78 |


முதலியவை

✻


விய ஆடி

மலர் 13 இதழ் 4

8


ASOKA
அசோகா
சுகந்த
பாக்குத் தூள்
M. K. கிருஷ்ண செட்டி
அசோகா பாக்டரி : கோயமுத்தூர்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

**(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)**

*தலைமை ஆபீஸ்:* **மதுரை**

சிறந்த சேவை செய்து வருகிறது.

# நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

**சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்**

## மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

கிளைகள் : பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

*பிரதம ஏஜெண்டுகள்:*

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்**

**மதுரை Etc.**

# இண்டோ - கமர்ஷியல்

## ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாயவரம்

## 1946ளு ஜூன்மீ 30-ந் தேதிய

### பொறுப்புகள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கோரப்பட்டுச் செலுத்தப்பட்ட மூலதனம் | 18,75,000 | 0 | 0 |
| க்ஷேம நிதிகள் | 5,66,662 | 2 | 6 |
| வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது | 1,77,905 | 15 | 0 |
| **டிபாஸிட்டுகள்:** | | | |
| பிக்ஸட், கரண்ட், சேவிங்க்ஸ் பாங்க், மாதவாரி டிபாஸிட், கியாஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன், மற்றும் இதர பொறுப்புகள் | 4,47,47,339 | 2 | 7 |
| பாங்குகளுக்குக் கொடுபட வேண்டியவை (சர்க்கார் கடன் பத்திரங்களின் ஈட்டின் பேரில்) | 20,00,000 | 0 | 0 |
| பெற்றுக் கொள்ளாத டிவிடெண்டுகள் | 6,116 | 2 | 0 |
| வசூல் பில்கள் | 17,38,260 | 6 | 6 |
| கமிர்ஷியல் கிரெடிட்கள் | 1,59,400 | 0 | 0 |
| பிராஞ்ச் அட்ஜஸ்ட்மெண்டுகள் | 7,79,775 | 9 | 4 |
| கொடுபட வேண்டிய டிராப்டுகள் தந்திகள் | 4,06,380 | 6 | 10 |
| சில்லரை இனங்கள் | 87,673 | 4 | 9 |
| 31-12-45 கணக்கு விவரப்படி பாக்கி 3,588 7 1 | | | |
| **இவ்வரை வருஷத்திய நிகர லாபம்: 4,70,159 10 0** | | | |
| | 4,73,748 | 1 | 1 |
| ஆக மொத்தம் ரூ. | 5,30,18,261 | 2 | 7 |

P. S. சுப்ரமணிய ஐயர் அன்ட் கம்பெனி
ரிஜிஸ்டர்ட் அக்கௌன்டன்ட் அன்ட் ஆடிட்டர்ஸ்

K. லக்ஷ்மணன்
அக்கௌன்டன்ட்

மதராஸ், ஜூலை 24, 1946

# பாங்க் லிமிடெட்

## செண்ட்ரல் ஆபீஸ்: சென்னை

## சுருக்கமான கணக்கு விபரம்

### ஆஸ்திகள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள், டிராப்டுகள், புரோநோட்டுகள், இதர அட்வான்சுகள் முதலியன | 2,36,92,918 | 3 | 2 |
| தற்சமயமாவது, எப்பொழுதாவது, டைரக்டர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்சுகள் | Nil | | |
| பாங்கிக் கட்டிடங்கள் | 2,08,179 | 6 | 0 |
| இரும்பு பெட்டிகள், மரதளவாடங்கள் | 84,540 | 7 | 5 |
| கைவசமுள்ள புத்தகம் ஸ்டேஷனரி சாமான்கள் | 49,340 | 10 | 1 |
| வசூல் பில்கள் | 17,38,260 | 6 | 6 |
| கஸ்டமர்களின் பொறுப்புகள் | 1,59,400 | 0 | 0 |
| சில்லரை இனங்கள் | 4,89,639 | 9 | 9 |
| **முதலீடுகள்** | | | |
| சர்க்கார் பத்திரங்கள், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி பங்குகள், ஷெட்யூல் பாங்கியிலுள்ள சிப்பந்திகள் ஜாமீன் | 1,55,48,723 | 14 | 3 |
| முதலீடுகளில் சேர்ந்துள்ள வட்டி | 2,05,771 | 6 | 0 |
| கைவசமுள்ள ரொக்கமும், பாங்கிகளிடம் இருப்பும் | 1,08,41,487 | 3 | 5 |
| ஆக மொத்தம் ரூ. | 5,30,18,261 | 2 | 7 |

T. R. வெங்கடராம சாஸ்திரி, C. I. E.
சேர்மன்

S. N. N. சங்கரலிங்க ஐயர்
மானேஜிங் டைரக்டர்

டைரக்டர்கள்

R. விஸ்வநாதன் K. சிவஸ்வாமி
R. S. A. சங்கர ஐயர் V. வெங்கடராமன்

உங்கள் விருப்பத்திற்கேற்ற

நேர்த்தியான பர்னிச்சர்களுக்கு

# ரென் கம்பெனியே



## ரென் பென்னட் அண்ட் கம்பெனி

(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

விய
மலர் 13

# சக்தி

ஆடி
இதழ் 4

மெய்ப்பொருள் காண்பது அறிவு

## ஞாபகம் இருக்கட்டும்!

நமது பிரகாசம் சர்க்கார் பதவிக்கு வந்ததைப் பலர் பலமாக ஆட்சேபித்தார்கள். அரசியலில் அதிகமான சிரத்தை யில்லாதவர்கள்கூட மௌனமாக முகத்தைச் சுளித்துக்கொண்டார்கள். பின்னல், காரியங்கள் எப்படியோ ஒருவழியாக முடிந்தன. பிரகாசம் மந்திரிசபை நாடாளத் தொடங்கி மூன்று மாதம் ஆகிறது. நாமும் நம்பிக்கையோடு தான் இருந்துவந்தோம். பிரிட்டிஷாரிடம் ஏமாறுவது போதாதென்று, நமது உடன் பிறப்பாளர்களிடம் கூட ஏமாற்றத்தின்பின் ஏமாற்றமாகப் பெற்று வரவேண்டிய நிலைமையை நெடுநாள் சகிக்க முடியாது.

உணவு நிலை இன்னும் சரிப்படவில்லை. சரிப்படுத்துவதற்கான உருவான முயற்சிகளையும் காணேம். கள்ளச் சந்தை ஒழிந்த பாடா யில்லை. கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொடுத்தாலும், நடவடிக்கை எடுக்கத் தயங்குகிருர்கள். பதுக்கல் வியாபாரம் பகிரங்கமாய் நடக்கிறது. தடுக்க முயற்சி யில்லை. மறியல் நிர்த்தூளிப்படுகிறது. பக்கிம்ஹாம் கர்னட்டிக் ஆலை வேலை நிறுத்தம் நாற்பது நாள் நடந்தும், ஏழைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் தேட அக்கறை காட்ட வில்லை. 14,000 ஏழைக் குடும்பங்கள் பட்டினியால் வாடின. இந்தத் துணிப் பஞ்சக் காலத்தில், நாளுக்கு இரண்டரை லட்சம் கஜம் வீதம், ஒரு கோடி கஜம் துணி உற்பத்தி நாட்டுக்கு நஷ்டமாய்விட்டது. எப்படியோ, கடவுள் புண்ணியத்தால் சமரசம் ஏற்பட்டுத் தொழிலாளர் வேலை தொடங்கியிருக்கிருர்கள்.

பாட்டாளி மக்கள் பேரைச் சொல்லிக்கொண்டு பதவிக்கு வந்தவர்கள், பாட்டாளி மக்களின் ஜீவாதாரமான உரிமைகளை நிலைநாட்டி, அவர்களுடைய பஞ்சை நிலைமையைச் சீர்படுத்துவதில் இவ்வளவு தூரம், 'யாருக்கோ வந்த விருந்து' என்பதுபோல், அசட்டையாய் இருப்பது அடுக்காது. மதுவிலக்குச் செய்வது மட்டும் போதாது. சகிக்க முடியாத துன்ப வாழ்வைச் சகிப்பதற்குக் கள்ளையே நம்பி நிற்பவர்கள் கள்ளில்லாமலும் திடமாக வாழலாம் என்று துணிவு கொள்வதற்கு வழி செய்ய வேண்டும். சம்பளம் உயர வேண்டும். வாழ்க்கை வசதி பெருக வேண்டும். ஓய்வு வேண்டும். தங்கள் உழைப்பால் வரும் பணத்தில் தங்களுக்கும் பங்கு உண்டு என்ற நிலைமை வரவேண்டும். ஆசாரப் பேச்சுக் காரியத்தைச் சாதிக்காது. கல்வி முறையில், தாய்மொழியைக் கற்பிக்கும் கருவியாக ஆக்கிவிடுவ

தால் மட்டும் நாட்டில் எழுத்தறிவு உண்டாகிவிடாது. அபத்தக் களஞ்சியங்களான பாடபுத்தகங்களை, உளுத்துப்போன சங்கர ஜாதித் தமிழில், வேண்டியவர்களுக்காக, வேண்டியவர்களைக் கொண்டு, வேண்டியபடி எழுதித் தீர்த்து, இளம் பிள்ளைகளின் தலையில் சுமத்தி வைக்கும் அடாத செயல் ஒழிய வேண்டும். நாட்டுக்குத் தேவையான முறையில் பாட புத்தகங்களைத் தக்காரைக் கொண்டு எழுதச் செய்ய வேண்டும்.

இவை யெல்லாம் நமது மந்திரிகள் அறியாத விஷயங்க ளல்ல. வேலை நெருக்கடியில் மறந்திருக்கலாம். பொது ஜன ஊழியர்களுக்கு, தமது பொதுஜனக் கடமையைப் பொறுத்தமட்டில், மறதி உதவாது. ஞாபகப்படுத்துகிறோம்.

*

## காலச் சுழல்

●

பெரிய கடன்: கடமையைத் தட்டிக் கழிப்பதில் தனக்குள்ள அபார சாமார்த்தியத்தை விடக் கடன் வாங்குவதில் பிரிட்டனுக்குள்ள திறமை உலகப் பிரசித்தம். ஏராளமான எதிர்ப்புக்களுக் கிடையே, பிரிட்டனுடைய கர்மவீர முயற்சி காரிய சித்தியை அளித்திருக்கிறது. 375 கோடி டாலர் பிரிட்டனுக்கு அமெரிக்கா கடன் கொடுக்கச் சம்மதித்து விட்டது. இதனால் இந்தியாவுக்கும் லாபம். பிரிட்டன் நமக்குத் தரவேண்டிய கடன் நல்லபடியாய் விரைவில் வசூலாக இனி வழி பிறக்கலாம். நம்முடைய கடனை யெல்லாம் ஸ்டெர்லிங் கடன் பத்திரங்களாகிய வெற்றுச் சீட்டுகளாகவே தந்து தீர்க்காமல், டாலர்களாகவே பெரும்பகுதிக்கடனைத்தரப் பிரிட்டனுக்கு இப்போது வசதி ஏற்பட் டிருக்கிறது. பிரிட்டன் மனம் வைத்தால், அமெரிக்காவிட மிருந்தும் பிற இடங்களிலிருந்தும் இந்தியாவின் உடனடியான சீரமைப்புக்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் அத்தியாவசியமான சரக்குச் சாமான்களை நாம் வாங்கிக் கொள்ள முடியும்படி செய்யலாம்.

ஏழை சொல்: அம்பலம் ஏறுமா என்று கேட்க வேண்டியதில்லை. அம்பலம் ஏறிவிட்ட செய்தியை நாடு அடங்கலும் அறியும். இன்று நாடாளும் அதிகார சர்க்காரும், நம்மை ஆளும் பிரகாச சர்க்காரும் அறியும். சென்னை மாகாண வாசிகள் அனைவரும் தபால்காரரின் இன்றியமையாமையை ஜுலை 23, 25 தேதிகளில் நன்கு அறிந்துகொண்டார்கள். ஆனால், தபால் சிப்பந்திகள் எதிர்பார்த்த பலன் மட்டும் இன்னும் கிட்டவில்லை. இணங்குவது போல் பாசாங்கு செய்த அதிகாரிகளின் ஆசை வார்த்தைகளை அப்பாவிகளான தபால்காரர்கள் கூட நம்ப மறுத்து விட்டார்கள். சர்க்காரின் மத்தியஸ்தத் தீர்ப்பு யாதாஸ்தும் மறியல்காரர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முற்பட வில்லை. இந்தப் பிரச்னையை நன்றாய் ஆராய்ந்து, நடுநிலையான ஒரு முடிபு ஏற்படுத்துவதற்கு ஒரு மத்தியஸ்தரை நியமிக்கவும் சர்க்கார் இணங்கவில்லை. ஆனால், உலகம் மாறுகிறது. இன்று நிகழ்ந்து வரும் மாற்றங்களை யாராலும் தடுக்க முடியாது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் அறிய வேண்டும்; தமது கடமையை உணர்ந்து, உடனே செயலில் இறங்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

*

# தேசியம்

●

ராஷ்டிரபதி ஜவாஹர்

இந்தியா விஷயமாய் என்னுள் எழும் கிளர்ச்சி பெரும்பாலும் உணர்ச்சிப் பூர்வமானதாகவே இருந்திருக்கிறது. ஆனல், பல வழிகளில் அது கட்டுப்பட்டிருப்பதோடு, பல நியதிகளை ஒட்டியும் நிற்கிறது. இதே கிளர்ச்சி தான் தேசியம் என்ற உருக் கொள்ளுகிறது. பலர் விஷயத்தில் இந்த உணர்வு எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருப்ப தில்லை. என் காலத்திய இந்தியாவில் தேசியம் தழைத் தோங்குவது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகும். அதன் வளர்ச்சி இயற்கையானது. ஆரோக்கிய மானதும்கூட.

அடிமையா யிருக்கும் எந்த நாட்டிற்கும் தேசிய சுதந்தரம் முதன்மையான, பிரதான தேவை ஆகும். தனித்தன்மை உணர்வில் ஊறிப்போன இந்தியாவுக்கு, செழுமை கொழிக்கும் இறந்த காலத்தைப் படைத்த இந்தியாவுக்கு, இந்தத் தேசிய சுதந்தரம் எவ்வளவு அத்தியாவசியமானது என்று சொல்ல வேண்டுவ தில்லை.

சர்வ தேசியம், பாட்டாளி மக்களுடைய இயக்கங்கள் இவைகளின் மோதுதலில் தேசியம் மறைந்து வருகிறது என்ற கூற்றில் உண்மை கிடையாது. உலகமெங்கிலும் சமீபக் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் இதைத் தெளிவுபடுத்தி விட்டன. ஒரு மக்களைச் செயலுக்கு உந்தும் வலிய சக்திகளில் தேசியமும் ஒன்ருகும். மக்களுடைய எண்ணங்கள், சம்பிரதாயங்கள், பொது வாழ்வு உணர்வு, பொதுக் குறிக்கோள் உணர்வு, எல்லாம் அதைச் சுற்றிக் குழுமி நிற்கின்றன. நடுத்தர வகுப்பாரில் அறிவு நிலையில் மேம்பட்டவர்கள் சர்வ தேசியத்தை விட்டு வெகு தூரம் விலகிப் போய் விட்டார்கள், அல்லது அப்படித்தான் அவர்கள் நினைத்தார்கள். அதே சமயத்தில், சர்வ தேசியத்தில் தீர்மானமாக நிலைகொண்டு நிற்கும் பாட்டாளி மக்களுடைய இயக்கங்கள் தேசியத்தின் திசையில் நகர ஆரம்பித்துள்ளன. யுத்தம் வந்து, எங்கும், எல்லோரையும் தேசியத்தின் வலையில் வீழ்த்தியது. தேசியத்தின் புதுமலர்ச்சியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய அறிவு வளர்ச்சியும் பல புதிய பிரச்னைகளைக் கிளப்பி விட்டுள்ளன. பழைய பிரச்னைகளின் அமைப்பையே மாற்றி விட்டுள்ளன. வேரூன்றிப் போய் நிற்கும் பழைய சம்பிரதாயங்களைத் தகர்த்து விடுவதோ, அவற்றை அடியோடு கைவிட்டு விடுவதோ சுலபமான காரியமல்ல. நெருக்கடிக் காலங்களில் அவை கிளர்ந்தெழுந்து மக்கள் மனத்தில் ஆட்சி செலுத்துகின்றன. தீவிர முயற்சிக்கும், தியாகத்துக்கும் மக்களைத் தூண்ட இந்தச் சம்பிரதாயங்களைப் பலர் பயன் படுத்திக் கொள்வதை நாம் பார்த்துள்ளோம்.

கூடியவரை, சம்பிரதாயங்களை ஏற்றுப் புதுமாதிரியான சந்தர்ப்பங்கள், புதுமாதிரிச் சிந்தனைப் போக்குகள் இவைகளுக்கு

தேசிய உணர்வும் சர்வ தேசிய உணர்வு நம்மிடையே நல்லபடியாகப் பண்பட்டுள்ளன, நாம் பிற்போக்காளர்கள் அல்ல— என்று நமது தலைவர் கூறுவது கூர்ந்து நோக்கத் தக்கது. டிஸ்கவரி ஆஃப் இந்தியாவிலிருந்து எடுத்தது.

ஏற்பத் தழுவியும், மாற்றி அமைத்துக் கொண்டும் நிலைமையைச் சமாளிக்க வேண்டும். அதே சமயத்தில், புதிய சம்பிரதாயங்களை உருவாக்கவும் வேண்டும். தேசிய லட்சியம் நிலையூன்றி நிற்பதோடு வன்மையோடும் இருக்கிறது. அது, எதிர்கால முக்கியத்துவம் பெறாத இறந்தகாலத்தின் சாயல் அல்ல.

மறுக்க முடியாத இன்றைய உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு நிற்கும் இரண்டு லட்சியங்கள் சர்வ தேசியமும், பாட்டாளி மக்களின் லட்சியமும் ஆகும். வேறுபட்ட இந்த லட்சியங்களிடையே இணைப்பு ஏற்பட வேண்டும். உலகச் சமநிலை, சண்டைக் குறைவு, எல்லாம் அப்போது தான் சாத்தியமாகும். மனித உள்ளத்தில் தேசியத்துக்கு இருக்கும் செல்வாக்கை ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் விஷயமாய்த் தக்க ஏற்பாடும் செய்யவேண்டும். ஆனால், அதன் ஆட்சி எல்லையைக் குறுக்கி விடுவது மிகவும் அவசியம்.

புதுக் கருத்துக்களும், சர்வதேச சக்திகளும் ஆதிக்கம் பெற்றுள்ள நாடுகளிலேயே தேசியத்திற்கு இன்னும் வியாபகமான செல்வாக்கு இருக்கிறதென்றால், இந்திய மனத்தின் மீது அது செலுத்தும் ஆதிக்கம் எவ்வளவு தீவிரமாகவும் வலிவாகவும் இருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

தேசியம் நம்முடைய பிற்போக்கின் அறிகுறி, நாம் சுதந்தரம் கேட்பதுகூட நம் குறுகிய நோக்கத்தையே காட்டுகிறது என்றெல்லாம் சில சமயம் சொல்லப்படுகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலோ, காமன்வெல்த் நாடுகளின் தொகுதியிலோ ஓர் இளைய கூட்டாளியாகச் சேர்ந்து கொள்ள நாம் சம்மதித்து விட்டால், உண்மையான சர்வதேசியம் வெற்றி பெறும் என்று தான் நம்மைக் குறைகூறுகிறவர்கள் கருதுவதாகத் தோன்றுகிறது. சர்வ தேசியம் என்று சொல்லப்படுவதன் குறிப்பிட்ட இந்தப் பகுதியும் குறுகிய பிரிட்டிஷ் தேசியத்தினுடைய விரிவே ஆகும். நம் மனத்தை அது கவர முடியாது.

ஆங்கிலோ-இந்திய சரித்திர நிகழ்ச்சிகள் நம் உள்ளத்தில் பாதகமான சூழ்நிலை எதையும் ஏற்படுத்தா விட்டாலும்கூட, அந்த மாதிரிக் கருத்து நம் மனத்தில் நிச்சயமாக இடம்பெற முடியாது. இந்தியாவினுடைய தேசிய வேகம் தீவிரமானதாக இருக்கலாம். ஆனால், உலக ஸ்தாபனத்தோடு தொடர்பு கொண்ட ஒரு சுதந்தர நாட்டுக்கு இருக்க வேண்டிய பண்புகளான சுத்த சர்வதேசிய உணர்வு, ஒன்றிப்பு உணர்வு, அவசியமான இடங்களில் தணிந்துபோகும் மனப்பான்மை இவற்றை ஏற்றிருப்பதில் இந்தியா உலகத்தின் இதர நாடுகளைப் பார்க்கிலும் வெகு தூரம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

*

### துறவு மனம்

ஞானம் புருஷனுக்கும், பக்தி ஸ்திரீக்கும் சமானமாகும். ஞானமோ ஈசுவர மாளிகையின் முன் மண்டபம் வரையில்தான் செல்லும்; பக்தி அவரது அந்தப்புரத்தினுள்ளும் போகும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்



# குடும்பத்தில் அழகைப்பாதுகாத்தல்

"நீ பார்க்கிற படத்தைப்போலவே அவ்வளவு அழகாக இருந்தாள் என் தாய். ஆனால், அவள் சருமம் எவ்வளவு மிருதுவாயும் அழகாயுமிருந்த தென்பதைப் படம் காட்டமுடியாது" என்று தாய் கூறுகிறாள். தாய் தன் சருமத்தை அதிக ஆச்சரியகரமாகக் காப்பாற்றியிருக்கிறாள். தன் மகளும் அவ்வாறே செய்யவேண்டுமென்று விரும்புகிறாள். சுத்த நீரில் பியர்ஸ் சோப்பை உபயோகித்து அழகைப் பாதுகாத்துக்கொள்ளும் ரகசியத்தை அவள் தன் மகளுக்குக் கற்பித்திருக்கிறாள். இந்த புத்திமதி அழகைத் தலைமுறை தத்துவமாக நிலைத்திருக்கச் செய்யும்.




# பியர்ஸ் சோப்

TG. 40-50 TM A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND.



தாயின் மகிழ்ச்சி

பலவருஷங்கள் தனிமை
யிலும் அசௌக்யத்
திலும் உழன்ற பின்னர்
ஒரு புஷ்டியான குழந்
தைக்குத் தாயாக விருப்
பதில் அவள் பெருமைப்
படுகிறாள்.

கர்ப்பக் கோளாறுகளுக்குச்
சிறந்த ஔஷதம்.

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்பாசயரோக நிவாரணி.



ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ்



நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

# தற்கால இந்தியா

●

**சுவாமி விவேகாநந்தர்**

ஆளப்படுவார்க்குத் தமது நாட்டின் ஆட்சியில் அதிகாரம் உண்டு என்பது தற்கால மேற்றிசை உலகினரின் கொள்கை; இக் கொள்கை பழைய இந்தியாவில் மக்களின் அறிவுக்குச் சற்றும் எட்டாதே போயிற்று என்று சொல்ல முடியுமா? கிரேக்க நாட்டுப் பிரயாணிகளும் பிறரும் இத் தேசமெங்கும் அங்கங்கே பிரிந்து கிடந்த பல சிறு சுதந்தர நாடுகளைக் கண்டுள்ளனர்.

இன்றைக்கும் இந்தியாவில் பல விடங்களிலும் 'கிராமப் பஞ்சாயத்து' என்ற முறை வழங்கி வருவதைக் காணலாம்; இம்முறையின் வடிவத்திலேனும் சுய ஆட்சியின் முளை இருந்ததென்பதைப் பற்றி ஐயங்கொள்ள இடமில்லை. ஆனல், அம்முளை என்றைக்கும் முளையாகவே இருந்தது; விதை நிலத்தில் இருந்ததெனினும், அது மரமாக வளர்ந்தது எந் நாளும் இல்லை. சுய ஆட்சி என்னும் கருத்துக் கிராமப் பஞ்சாயத்து முறை யாகிய முளை நிலையைக் கடந்து அப்பாற் சென்றது ஒரு காலும் இல்லை.

புத்தமத வெள்ளம் நாட்டின் மீது பாய்ந்தோடியபின், குருமாரது அதிகாரம் அழியலாயிற்று. அரசரது அதிகாரம் ஓங்கலாயிற்று. புத்த மதக் குருக்கள் உலகத்தைத் துறப்பவர்; உலகக் காரியங்களில் சிந்தனையற்ற, வீடற்ற முனிவராய் மடங்களில் வாழ்பவர். அரசரைத் தமது சாப வலிமையாலோ மாய அஸ்திர வலிமையாலோ பயமுறுத்தி, அவரது அதிகாரத்தைத் தமக்கு உட்படுத்தித் தமது ஆளுகைக்குள் வைத்திருக்கும் எண்ணமோ முயற்சியோ அம் முனிவரிடத்து இருப்ப தில்லை.

இக்காலத் தலைவர் விசுவாமித்திரரும் வசிஷ்டருமல்லர்; சந்திரகுப்தர், தர்ம அசோகர் முதலான பேரரசரே யாவர். புத்த மதம் நிலைபெற்ற இந் நாளில் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட பெரு மன்னரைப் போன்றவர், அதுவரை இந்தியாவில் முடிசூடியவரில் ஒருவரும் இலரானர்.

மிகப் பழமையான காலமுதலே, இந்தியாவின் பரந்தசெல்வத்தையும் பண்டம் நிறைந்த களஞ்சியங்களையும் பற்றிய புகழினைக் கேட்ட பல வலிய அன்னிய நாட்டினர் அந் நாட்டை வெல்லும் ஆசைத் தீ மூளப் பெற்றிருந்தனர். அன்னிய நாட்டினரால் அது மீண்டும் மீண்டும் வெல்லப்பட் டிருப்பதும் உண்மையே. அப்படி யிருக்க, இந்தியாவை இங்கிலாந்து கைப்பற்றியது இந்தியரது மனத்திற்குப் புதியதும் அன்னியமானதுமான ஒன்ருயிற்று என்று நாம் கூறுவதேன்?

வாழ்வு வளரும்போது, அதே சமயம் மரணத்தின் விதையும் விதைக்கப்படுகிறது. இருளும் ஒளியும் எப்போதும் ஒன்ருக இயங்குகின்றன.

தற்கால இந்தியா: சுவாமி விவேகாநந்தர் இயற்றியது. வெளியிட்டோர்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை. கிரௌன் 1X16. 111 பக்கம். விலை 10 அணு. சிந்தனையைக் கிளரும் இனிய நூல். இதன் சாரத் திரள் இங்கே தரப் பெற்றுள்ளது.

குருமார் வளர்ச்சி யடைந்து வந்த காலத்து அவரது துறவும் தன்னடக்கமும் தவமும் முழு மனத்தோடு மெய்ப்பொரு ளாராய்ச்சித் துறைக்கே பயன் படுத்தப்பட்டன; ஆனல், அவ ரது அழிவுக் காலத்துக்கு முன்பு அக் குணங்கள், சுக சாதனப் பொருள்களைத் தொகுத்தலிலும், தமது உரிமையாகக் கருதிய மேன்மையைப் பெருக்கி வருவதி லும் புதிதாகச் செலுத்தப்பட்டும் முழுதும் பயன்படுத்தப்பட்டும் வரலாயின. எந்தச் சக்தியைத் தம்மிடம் குவியச் செய்ததன் பயனாய் எல்லா மதிப்பையும் வணக்கத்தையும் பெற்றனரோ, அந்தச்சக்தி அதன் உயர்ந்த தெய் விகப் பதவியிலிருந்து நரகப் படு குழிக்கு இப்போது கீழ்நோக்கி இழுக்கப்படலாயிற்று. பிராம் மணய சக்தி தனது குறிக்கோளை மறந்து, கண்டமட்டும் திரிந்தது. அதன் பயனாகச் சிலந்தியைப் போல் தான் பின்னிய வலையி லேயே சிக்கிக்கொள்ளலாயிற்று. பிறரது கால்களைப் பிணிப்பதற் காகத் தலைமுறை தலைமுறை தோறும் மிக விழிப்பாகச் செய் யப்பட்டு வந்த சங்கிலி தனது கால்களைச் சுற்றியே ஆயிரம் முறை வளைத்து வளைத்து இப் போது இறுகக் கட்டப்பட்டுள் ளது. அதனல் தனது இயக்கத் தையே நூற்றுக் கணக்கான வழிகளில் தடுத்து வரலா யிற்று. முன்பு அது உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்து தற்குப் புறச் சாதனங்களாகக் கங்குகரை யற்ற கிரியைகளையும் கருமங்களையும் பழக்கங்களையும் ஏற்படுத்தி, அவ் வலையை எல்லாப் பக்கங்களிலும் பரப்பி வந்தது. ஜன சமூகத்தை அத்தகைய கணக்கற்ற விலங்குகளின் இரும் புப் பிடிப்புக்குள்ளே வைப்பதே அதன் நோக்கமாயிற்று. இப் போதோ, பிறர்க்கென விரித்து வைத்த வலையின் முடிவற்ற நூலிலே தானே அகப்பட்டுக் கொண்டு, அப் பிராம்மண்ய சக்தி இவ்வாறு உச்சிமுதல் உள் ளங்கால்வரை தப்ப வழியின்றிச் சிக்கிக்கொண்டு, இன்ன செய்வ தென அறியாது உறங்கிக்கொண் டிருக்கிறது! இப்போது அதை விட்டு வெளியேறுவது அதற்கு இயலாது. அவ் வலையை அறுக் கத் துணிந்தால் வைதிகக் குருமா ரின் பிராம்மண்யமும் அடிவரை அசைக்கப்படும்! ஒவ்வொரு மனிதனிடத்தும் இயல்பாகவே முன்னேற்றத்தில் பலமான ஆசை குடிகொண்டுள்ளது; பிராம் மண்ய விலங்குகளால் ஒருவன் பிணிக்கப்படும் வரை முன் னேற்ற ஆசையை நிறைவேற்று வது இயலாத காரியம் என்பதை உணர்ந்தோர் இவ்வலையை அறுத் தெறிந்து, பொருளீட்டுவதற் காகப் பிற வருணத்தாரின் தொழில்களைக் கைப்பற்றுகின்ற னர். உடனே சமூகம் அவரிட மிருந்து அவர்தம் பிராம்மண உரிமைகளைப் பறித்து விடுகிறது. பிராம்மணர் சிகையை வைத் திருப்பதற்குப் பதிலாகத் தலையை மொத்தமாக வளர்த்து இரு கூறு கப் பிரிக்கும்போதும், தமது பண்டைய பழக்கங்களையும் முன் னோரது வழக்கங்களையும் கை விட்டு, அரை ஐரோப்பிய உடையை அணிந்து மேலை நாட் டினராற் புதிதாகப் புகுத்தப் பட்ட முறைகளைக் கைப்பற்றிக் கலப்பினத்தாரைப் போல் நடிக்கும்போதும், பெயரளவால் பிராம்மணராகும் அன்னு ரது பிராம்மண்யத்தில் சமூகம் நம்பிக்கை கொள்ளாது போகி றது. மேலும், புதிதாகப் புகுந்த ஆங்கில அரசியல் எங்கெங் கெல்லாம் புதிய கல்வி வகை களைப் புகுத்தியும், பொருளைப்

பெருக்குதற்குப் புதிய வழிகளை ஏற்படுத்தியும் வந்தனரோ, இந்தியாவில் அவ்வப் பகுதிகளில் பிராம்மணச் சிறுவர் பெருங் கூட்டமாகத் தமது பரம்பரையான தொழிலைத் துறந்து, பிறவருணத்தாரின் தொழில்களைக் கையாண்டு தமது பிழைப்பை நடத்தவும், செல்வராகவும் முயன்று வருகின்றனர்; இதன் பயனாக, பிராம்மண வகுப்பினர்க்கு வெகு தொலைவிலுள்ள தமது முன்னோரிடமிருந்து வழி வழியாக வந்த பழக்க வழக்கங்கள் காற்றில் பறக்கவிடப் பட்டனவாகி, நாட்டினின்றும் விரைவில் மறைந்துகொண் டிருக்கின்றன.

தனி மனிதனது வாழ்வு சமூகத்தின் முழு வாழ்வில் அடங்குகிறது; தனி மனிதனது சுகம் சமூகத்தின் சுகத்தில் அடங்குகிறது; தொகுதி வாழ்க்கையினும் வேறாகப் பகுதியின்—தனி மனிதனின்—வாழ்க்கையைக் கருதுவதும் இயலாது—இதுவே ஓர் அழிவற்ற உண்மை; உலகக் கட்டடத்தைத் தாங்கும் அடிப்படைப் பாறை இதுவே. தனக்கு இடைவிடாது செய்யும் தீங்குகளையும்பொறுமையோடு,சகித்து வரும் பூமியைப் போன்றது சமூகம்; ஆனால் அஃது ஒருநாள் விழிப்பது உண்டு.

நாம் ஏமாற்ற முயல்கிறோம்; ஆனால் நாமே ஏமாற்றமடைவதை ஆயிரம் முறை காண்கிறோம்; பின்னும் நாம் விலகுவதில்லை! வியாபாரி செல்லாத தேசம் யாது? அவன் தனது தொழிலை நடத்தும்போதே தான் அறியாதே ஒரு நாட்டின் கல்வி, ஞானம், கலை, விஞ்ஞானம் என்பவற்றை இன்னொரு நாட்டில் நட்டு வைக்கிறான். பிராம்மண க்ஷத்திரிய சக்திகள் முதன்மை செலுத்தும் நாளில் சமூக உடலின் இரத்தப் பையிலே சேர்த்து வைக்கப்பட்ட ஞானமும், நாகரிகமும், கலைகளும் வியாபாரமென்னும் இரத்தக்குழாய்களின் வழியாக வைசியனது பற்பலச் சந்தைகளை நோக்கி எல்லாத் திசைகளிலும் பரப்பப் படுகின்றன.

இது கிடக்கட்டும்; யாருடைய உழைப்பினால் மட்டும் பிராம்மணனது சொற் சக்தியும், க்ஷத்திரியனுடைய வீரியமும், வைசியனது செல்வமும் இயலுவதாகுமோ, அவ் வகுப்பினர் எங்கே யுள்ளனர்? சமூகத்தின் உண்மையான முக்கியப் பகுதியா யிருந்தும், எல்லாக் காலத்தும் எல்லா நாடுகளிலும் "கீழான பிறப்புடையோராய அவர்" என்றே அழைக்கப்பட்டு வரும் அவ் வகுப்பினரின் வரலாறு யாது? 'அவனது நாக்கை அறுத்து விடுங்கள், அவனது உடலை அரிந்து விடுங்கள்" என்பதையும் இவை போன்ற பிறவற்றையும் மெல்லிய தண்டனைகளாக எண்ணி, அன்பார்ந்த இந்தியா யார்க்கு விதித்ததோ;—அதுவும் எதற்காக?—தம்முடைய உயர்ந்த வகுப்பினரால் தனி யுரிமைகளாகப் போற்றப்பட்ட அறிவு ஞானம் இவைகளில் தமக்கும் பங்கு பெறச் சிறிதாயினும் முயலுதல் என்னும் மிகப் பெரும் குற்றத்திற்காக விதித்ததோ? இந்தியாவின் "நடமாடும் பிணங்கள்," மற்ற நாடுகளின் "பாரம் சுமக்கும் விலங்குகள்," அதாவது சூத்திரர்கள் என்று வழங்கப்படும் அவ் வகுப்பினருக்கு வாழ்க்கையிலே கதி என்ன?

ஞான நூற் கல்வியை முன்பு உரிமையாகப் பெற்று வந்த இந்திய நாட்டின் பிராம்மணர் இந்நாளில் அந்நியநாட்டுப் போரா

சிரியரே; அதன் க்ஷத்திரியர் அதனையாளும் ஆங்கிலரே; அதன் வைசியரும் வியாபாரஞ் செய்யும் இயற்கை உடம்பிலே ஊறிக் கிடக்கும் ஆங்கிலரே; இந் நிலையில் சூத்திரத் தன்மையொன்றே, அதாவது, மூட்டை தூக்கும் விலங்குத் தன்மையே, இப்போது இந்தியரிடத்தே மிஞ்சி யிருக்கின்றது.

ஊடுருவிச் செல்லற்கரிய இருளென்னும் மேகம் இந்நாளில் நம்மனைவரையும் சம அளவு சூழ்ந்து கொண்டுள்ளது. இப்போது நம்மிடத்து, எண்ணியதை முடிக்கும் திண்மையோ, புது முயற்சியில் துணிவோ, நெஞ்சில் தீரமோ மன வலிமையோ, பிறர் நம்மிடம் முறைகெட ஒழுகும் போது வெறுப்போ, அடிமைத் தனத்தில் அருவருப்போ, நெஞ்சத்து அன்போ, ஆசையோ, ஆண்மையோ இல்லை. ஆனால் இந்தியாவில் நம்மிடம் உள்ளன வாவன: வேரூன்றிய பொறாமை, ஒருவர்மீ தொருவர்க்குப் பலமான வெறுப்பு, எவ்வாற்றானும் எளியாரை அழிப்பதிலும் வலியாரது காலை நாய்போல் நக்குவதிலும் உள்ள நோய்கொண்ட அவா என்பன மட்டுமே.

நாட்டின் ஜனத்தொகை முழுவதும் அனுபவத்திலே சூத்திரரது மட்டத்திற்கு இறங்கி விட்டபோது, வேறான சூத்திரரது வகுப்பைப் பற்றித் தனித்துக் கூற யாது உள்ளது? இந்தியா ஒழிந்த மற்றைய நாடுகளில் உள்ள சூத்திரர் ஒரு சிறிது விழித்திருப்பதாகத் தோன்றுகிறது. பத்து மனிதர்க்குப் பத்து லக்ஷம் மனிதரது பலத்தைச் சேகரித்துக் கொடுக்கும் அந்த ஒற்றுமை யுணர்ச்சி இன்னும் சூத்திரர்க்கு வெகுதொலைவிலுள்ளது.

ஆனால், அவர்க்கு நற்காலம் வரும் என்ற நம்பிக்கைக்கு இடமுண்டு. காலத்தின் பலம் வாய்ந்த போக்கிலே, பிராம்மணரும் மற்ற உயர் வகுப்பினரும் சூத்திரரது தாழ்ந்த நிலைக்குக் கீழ்க்கொணரப் படுகின்றனர்; சூத்திரரும் மேலான பதவிகட்கு உயர்த்தப் படுகின்றனர். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சூத்திரரும் தமது பிறவியிலே அமைந்த சூத்திர இயல்போடும் வழக்கங்களோடும், வைசியராகவோ க்ஷத்திரியராகவோ உள்ளியல்பில் மாறாது சூத்திரராகவே இருந்து, ஒவ்வொரு சமூகத்திலும் முழுத் தலைமை செலுத்தும் காலம் வரும். இப்புதுச் சக்தியின் அருணோதயம் மேலை யுலகத்தாரது வானத்திலே முன்னமே மெல்லத் தென்படத் தொடங்கிவிட்டது; இப்புதிய தோற்றத்தின் இறுதியான பயன் யாதாகுமோ எனச் சிந்தனையுடையாரும் அறியமாட்டாது திகைக்கின்றனர். சமூக நலவாதமும், ஆட்சி யொழிப்பு வாதமும், அனைத்து மறுப்பு வாதமும் இவை போன்ற பிறவும் இனிவர இருக்கும் சமூகப் புரட்சியின் முன்னணியிலே உள்ளன. [1835 கி. பி. இல் சமூக நலவாதமும், 1814-ல் பிறந்த ஒருவரால் ஆட்சி யொழிப்பு வாதமும், 1862-ல் ரஷியாவில் முதன் முதலாக அனைத்து மறுப்பு வாதமும் தோன்றின.]

பண்டைய நாளில் இந்தியாவில் வழங்கிய ஜாதி முறையே சூத்திர வகுப்பைக் காலையும் கையையும் கட்டிவைத்துக் கீழே அமுக்கி வந்தது. முதலாவதாக, பொருளைச் சேர்க்கவோ தக்க கல்வியையும் அறிவையும் தேடிப் பெறவோ சூத்திரர்க்கு ஓர் அமயமும் கிடையாது போயிற்று. சூத்திர வகுப்பிலே அசாதாரண



சக்

மான திறமைகளோடும் இயற்கையறிவோடும் ஒரு மனிதன் என்றேனும் பிறந்தானுயின், சமூகத்திலுள்ள சொற் சக்தி வாய்ந்த உயர் வகுப்பினர் அவன் மீது உடனே பட்டங்களையும் மதிப்பையும் சொரிந்து, அவனைத் தமது வகுப்பாகிய வட்டத்துக்கு உயர்த்தி வந்தனர். அவனது செல்வமும் அவனது ஞானத்தின் சக்தியும் அன்னிய ஜாதியின் நலத்திற்காகப் பயன்படுத்தப் பட்டன; அவனது சொந்த ஜாதி மக்கள் அவனுடைய பேறுகளின் பயனைப் பெருது போயினர்.

வசிஷ்டர், நாரதர், ஸத்யகாம ஜாபாலர், வியாசர், கிருபர், துரோணர், கர்ணர் முதலிய, சந்தேகத்திற் கிடமான பெற்ருேரை யுடையோர் அவர்தம் மேன்மையான படிப்பையோ கல்வியையோ கருதி, பிராம்மணரது பதவிக்கோ க்ஷத்திரியரது பதவிக்கோ உயர்த்தப்பட்டனர்; ஆனுல், இவ்வாறு உயர்த்தப்பட்டமையால் பரத்தை,பணிப்பெண், செம்படவன், தேர்ப்பாகன் என்னும் வகுப்புகள் எவ்வாறு பயன் பெற்றன என்பது இதுவரை அறியப்படவில்லை. மேலும், இதற்கு மாருக, பிராம்மண க்ஷத்திரிய வைசிய வகுப்பிலிருந்து வீழ்ந்தோர் சூத்திரரது வகுப்பிற்கே எப்போதும் தள்ளப்பட்டு அதை நிரப்பலாயினர்.

பொதுவான ஓர் ஆபத்தோ, சில வேளைகளில் வெறுப்புக்கோ அன்புக்கோ உண்டாகும் ஒரு பொதுக் காரணமோ, மக்களை ஒன்ருகப் பிணைக்கும் சக்தியாகின்றது. தமது சொந்த மக்களின் மீதும் நாட்டின் மீதும் கொள்ளும் ஊக்கமான அபிமானம் பிற மக்களின் மீதும் நாட்டின் மீதும் காட்டும் வெம்பகையாக உருக் கொள்ளுகின்றது; ஒரு நாடு மற்ருென்றின் மீது கொள்ளும் பகைமையால் தனக்குள் ஒற்றுமையை விளைத்தல் மூலமாகத் தான் அதனினும் முன்னேற்ற மடைகிறது.

இந்தியாவின் வருங்கால க்ஷேமத்திற்கு நிச்சயமான அறிகுறி எழுவது காணப்படுகின்றது. அது யாதெனில், அந்நாட்டிற்குச் சொந்தமான பழைய தேசிய லட்சியங்கள் ஒரு பக்கமும் அன்னிய நாட்டினர்க்குரிய புதிதாகப் புகுத்தப்பட்ட விந்தையான லட்சியங்கள் மற்ருெரு பக்கமும் மாறிமாறி ஒன்றையொன்று தாக்க, அப்போது நிகழும் செயல் எதிர்ச்செயல்களின் முடிவாக அந்நாடு, தனது நீண்ட ஆழ்ந்த உறக்கத்தினின்றும் மெல்ல மெதுவாகக் கண் விழித்து வருகின்றது.

✲

### பால் கணக்கு

உலகத்திலேயே, இந்தியாவில்—அதுவும் தமிழ் நாட்டில்—பசுக்களின் கறவை மிக மிகக் குறைவானது. இந்தியாவில் ஒரு பசு ஆண்டொன்றுக்கு 890 பவுண்டு பால் தருகிறது. ஒரு நாளைக்கு இது 2½ பவுண்டு ஆகிறது. கிராமத்துச்சேர்க் கணக்குப்படி தினம் 4 சேர் பாலுக்குச் சமம். இவ்வளவு குறைந்த கறவை வேறெந்த நாட்டிலும் இல்லை. இங்கிலாந்திலே நாளொன்றுக்குச் சராசரிக் கறவை வீதம் 14 சேர்; ஜெர்மனியில் 20 சேர்; அமெரிக்காவில் 19 சேர்; நியூஜீலந்தில் 25 சேர்; டென்மார்க்கில் 31 சேர்.

# காதலும் சாதலும்

●

வில்லியம் சரோயன்

சான் பிரான்ஸிஸ்கோ மீது மூடு பனி கவிந்திருக்கிறது. பனித் திரையாலும் உயரத்தில் அமைந்த மின்சார விளக்குகள் சிதறியடிக்கும் ஒளி வெள்ளத்தாலும் வானம் பைத்தியம் பிடித்து விட்டதுபோல் காண்கிறது. காலத்தோடு ஒட்டி நிற்கவில்லையே என்ற ஓர் உணர்வு,—செயலற்ற வெறுமை உணர்வு. இத்தகைய உணர்வுடன் கேலிக் கெக்கலிப்பும் கலந்து புரளுகிறது. நனைந்து போன நடை பாதைகள். மாமூல் ஜனங்கள் நடந்து திரிகிறார்கள். நிலைமை இப்படியிருக்கும் பொழுதுதான் இரவுக் காலத் தொழில் சுறுசுறுப் படையத் தொடங்குகிறது. சாக வேண்டுமென்கிற ஆசை மனிதனது உள்ளத்தில் தெளிவில்லாமல் ஆழப் பதிந்து கிடக்கிறது. விபசாரிகள் இந்தச் சாவினை எவனுக்கும் அவன் விரும்பினால் வழங்கி விடுகிறார்கள். வேண்டிய மட்டும் இதை அவனுக்குக் கொடுத்து, மோசமான காலநிலையை அவன் சமாளித்து, சற்று நேரமாவது உயிர்ப்புப் பெற்றிருக்க இவர்கள் அவனுக்குக் கை கொடுக்கிறார்கள். சிறுமிகளுக்கோ, இந்தக் காலம் மிகவும் ரம்மியமானது. நகரமெங்கணும் உள்ள சிறு சிறு விடுதிகள் எல்லாவற்றிலும் செழிப்பு என்ற கனவு நனவாக மாறுகிறது. நள்ளிரவுக்குப் பிறகு, இந்தச் செழிப்பானது நடன ரூபம் எடுத்து விடுகிறது. கதவுகள் 'சடக், சடக்' கென மூடித் திறக்கின்றன. கூடத்து நடை பாதைகளில் ஜனங்கள் அங்குமிங்குமாய் ஓடிய வண்ணம் இருக்கிறார்கள். புராதனமானதும் இயற்கை உணர்வால் தானாக நிகழ்வதுமான ஒரு செயலைப்பற்றி அச்சில் எழுத முடியாத சுகமான பாஷையில் எங்கணும் பேச்சாரவாரம் நடக்கிறது. இங்கும் அங்கும் கிழவர்களும் இளம் பிள்ளைகளும் தென்படுகிறார்கள். பெரிய பெரிய வியாபார விஷயங்கள் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. அடிபட்டுத் தேறிய இளம் பெண்கள் இவைகளையெல்லாம் சட்டை செய்யாமல், புனிதமான கருமங்களை நடத்திவரும் குருமாரைப் போல், கண்ணியமாகவும், லாகவமாகவும் ஒன்றன் பின் ஒன்றாக ஒரு வேலையை முடித்து அடுத்த வேலையைச் செய்து கொண்டே போகிறார்கள்.

காலத்தோடு ஒட்டாத இந்த உணர்வு ஆயிரமாயிரம் பேர்களைத் தங்களுடைய வீடுவாசல்களிலிருந்து விரட்டியடித்துப் படக்காட்சிக் கொட்டகைகளுள் தள்ளிவிட்டது. இங்கே, இவர்கள் முன்னர் புதிது புதிதான பிரபஞ்சங்கள் தோன்றுகின்றன. மனிதனைப் பற்றியும், அவனது பெரிய பிரச்னையைப் பற்றியும் இந்தப் புது உலகங்களில் அழுத்தமான வர்ணனை நடைபெறுகிறது.

*பித்துப் பிடித்து அலையும் மனிதன், அலுப்புத் தட்டும் வரை அழி லீலை புரிகிறான். பெண்ணின் தாய்மையும், பொறுப்பு உணர்ச்சியும் இவனைக் காக்கின்றன.— எப்படி என்பதை, நெஞ்சை உருக்கும் வண்ணம், மிக உயர்ந்த கவிதா ரூபத்தில், அகண்டாகாரமான பரிவுடன், "அமெரிக்கஷா" இங்கே ஒவியம்—கதையல்ல—தீட்டுகிறார்.*

மனிதனுடைய இந்தப் பெரிய பிரச்னையை, சௌகரியத்தை உத்தேசித்து இந்தப் புது உலகத்தார் காதல் என்று சொல்லி விடுகிறார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கும் நள்ளிரவுக் காட்சிகளுக்கு ஏராளமான பணம் கிடைக்கிறது. தத்தம் வீடுகளுக்குப் போகும் மக்கள், செயலற்ற தோல்வி என்ற நோயால் பீடிக்கப்பட்டு நைந்து செல்லுகிறார்கள். இரவு நேரத்தில் நகரத்தை இவ்வளவு கவர்ச்சிகரமாக ஆக்குவது இந்தமாதிரியான செயலற்ற ஏக்கம்தான். கொட்டகைகளி லிருந்து, சிகரெட்டுக்களை ஊதிக்கொண்டு, விரக்தி படிந்த தோற்றத்துடன் வெளிப்படும்மக்கள்என்னென்ன வெல்லாமோ பெற்றுவிட ஆசைப்படுகிறார்கள். வாழ்க்கையின் எழில் நலம் அனைத்தையும்—கச்சிதம், புகழ் அனைத்தையும்—அவர்கள் பெற அவாவுகிறார்கள். மிக்க நேர்த்தியானவற்றை விரும்பும் அவர்கள், வாழ்க்கையில் ஒன்றும் பெற முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களைப் பார்க்கப் பார்க்கத் துயரமாய்த்தான் இருக்கிறது. ஆனால், உள்ளத்தி லிருப்பது என்னவோ கேலியும் நையாண்டியும் தான். அவர்களூடே நடந்து செல்லும் போது, அவர்களைப் பார்த்தும் நம்மைப் பார்த்தும் நாம் சிரித்துக்கொண்டே தான் செல்ல வேண்டும். நடுநிசி நேரத்தில் அவர்கள் வீசும் வெறித்த பார்வையைக் காணும் நாம் அவர்களையும் நம்மையும் பற்றிச் சிரிக்கத்தான் வேண்டும்.

சிற்றுண்டி விடுதிகளுக்கும் நல்ல வியாபாரம். சாப்பிடுகிற விஷயம் சுவாரஸ்யமானது. சாப்பிட முடிய வேண்டும்; சாப்பாட்டுக்குப் பணம் கொடுக்க முடிய வேண்டும். நள்ளிரவுக்குப் பிறகும் சாப்பாட்டு மேஜையருகே அமர்ந்திருக்க முடிய வேண்டும். அந்த நேரத்தில் நமக்கு முன்னே உணவை வைத்துக் கொண்டு, தூங்கி வழியாமல், விழித்திருக்க முடிய வேண்டும். மூடுபனி ஒரு பக்கம், மின்சார விளக்குகள் ஒரு பக்கம். இரவில், துயரம் படிந்த நொடி நேரத்தைத் துய்க்க முடிய வேண்டும்—உணவை உண்பதில் இந்த மாதிரி விஷயங்களெல்லாம் சேர்ந்திருப்பது சோகமும் கவர்ச்சியும் படிந்த ஒரு தனி நிலை. செய்வதற்கு வேறு வேலையொன்றும் இல்லை. உண்ணலாம், உயிரோடு இருக்கலாம், போகலாம், வரலாம், இப்படியப்படி என்னென்னவோ செய்துகொண்டே போகலாம். உண்டியறையில் இருக்கும் போது நம்மிடம் உயிர்ப்பு உந்து நடை போடுகிறது. நகரத்தில் இன்னும் நடந்து கொண்டேயிருக்கிறோம். இந்த வருஷம் தான். நாம் அனைவரும், காட்சி வட்டத்தினுள்ளேயே செயலற்று, நோயால் பீடிக்கப்பட்டு இன்னும் உண்டுகொண்டே இருக்கிறோம்.

வேறு இடங்களும் உண்டு. விரக்தி உணர்வோடு கிடந்து புரளுவதற்கு வேறு வழிகளும் உண்டு. இதெல்லாம் என்ன? சுபிட்ச நிலைக்குத் திரும்புகிறது என்பதெல்லாம் அமோகமாகத் தொழில் பெருகுவது என்பது தானே? சின்னச் சின்ன பீர்க் கடைகளைப் பாருங்கள். இரண்டிரண்டு, மூன்று மூன்றாய்ச் சேர்ந்து இசை எழுப்பும் வாத்தியக் கோஷ்டிகள் நிறைய ரொக்கப் பணம் சேர்த்துக் கொண்டு லேசாய்ப் போதை ஏறிய மக்களை ஏராளமாக அவரவர்கள்

வீடுகளுக்கு அனுப்பி வருகிறார்கள். எங்கே பார்த்தாலும் அவர்களுடைய வாத்திய கீதங்கள்தான. 'கடைசி வேட்டை', 'அதிசய உலகத்தில் அலிஸ்'—இப்படிப் பட்ட சோக கீதங்களைப் பாடித்தீர்க்கிறார்கள். 'எல் பட்டியோ' என்ற விடுதியில், ஏராளமான மக்கள்—ஆண்களும் பெண்களும், இளைஞர்களும் முதியவர்களும்—நடனமாடிக்கொண் டிருக்கிறார்கள். ஆனால், பனிப்பாறைக் கோதாவின் வட்டத்துள் புகுந்த பிறகே நகரமானது மெய்யாகவே எவ்வளவு துயரம் படிந்த நிலையில் இருந்து வருகிற தென்பதை நாம் சரிவரத் தெரிந்து கொள்ள முடிகிறது. சறுக்கும் மிதியடிகள் அணிந்து, பனித் தரை மீது வழுக்கி வழுக்கி ஓடியாடித் திரியும் சிறுவர்களையும் சிறுமிகளையும் பார்த்தால்தான் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறதென்பது புலப்படும். செயலற்ற வெறுமையானது மனத்தை அரித்து அரித்துப் படுத்துகிற பாட்டால், அத்தனை பேரும் எவ்வளவு கொடுமையான துன்பத்துக்கு ஆளாகியிருக்கிறார்களென்பது அப்போதுதான் புலப்படும். சுழன்றடிக்கும் பைத்தியமே உருவெடுத்தது போலத் தரை மீது அவர்கள் இயங்கிச் செல்லுகிறார்கள். பயனில்லாத் தன்மைக்கு ஒரு விதமான லாகவத் தோற்றத்தை அவர்கள் தமது குருட்டாட்டத்தின் மூலம் அளித்து விடுகிறார்கள். வேக கதியில் அமைந்த அவர்களது பரபரப்பான இயக்கம் கலப்பற்ற இணை விழைவு எழுச்சியின் பாற் பட்டது. அவர்கள் முகங்களிற் காணும் கடுமையான தோற்றத்தைக் கண்டவுடன், தடுக்க முடியாத ஓர் எளனக் கவர்ச்சியை நம்மிடம் உண்டு பண்ணுவதும் இந்த இன எழுச்சி தான். சறுக்கி உருளும் செருப்புகள் மீது ஏறி நின்று, கடினமான மரத்தா லமைந்த தரை மீது சுற்றிச் சுற்றி இயங்கிய போதிலும், விடாமல் அவர்களுடன் கூடவே, அவர்களைப் பிடித்துக் கொண்டே செல்லும் சோகப் படலத்திற்குக் காரணமும் இதுதான். இந்தக் காட்சியைப் பார்க்கப் பார்க்க நமக்கு வேடிக்கையாகத் தோன்றினாலும், நமக்கு நிஜமான சிரிப்பு வருவ தில்லை; நம்மால் சிரிக்க முடியாது. நாம் பெறும் உணர்ச்சி, ஒரு வெறும் அனுபவம்தான். மனிதனிடத்து நமக்கு ஏற்படும் சோக உணர்வைச் சிரிப்பா லல்லது வேறு எந்த வழியால் நாம் வெளிப்படுத்த முடியும்?

ஒரு மணிக்குப் பிறகு நிலைமை அமைதி பெறுகிறது. மூலையில் பத்திரிகை விற்கும் பையன்கள்—அவர்களிற் சிலர் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள்—குதிரைகளைப் பற்றித் துயரத்துடன் பேசுகிறார்கள். தம்முடைய அந்தரங்கமான நண்பர்கள் சதா நச்சுப் படுத்திக் கொண்டே கூறிய யோசனைகளைக் கேட்காமல், தமக்குத் தோன்றிய குருட்டு யோசனைகளின் படியே காரியங்களைச் செய்திருந்தால், இதுவரை ஏதோ நல்ல படியாய் வேண்டிய பணம் சேர்த்திருக்கலாமே என்றெல்லாம் அவர்கள் அங்கலாய்த்துக்கொண் டிருக்கிறார்கள். திங்கட் கிழமைப் பத்திரிகைகளில் க்யூபாவைப் பற்றி ஒரு செய்தியும், எங்கோ நடந்த ஒரு கொலையைப் பற்றி ஒரு செய்தியும் வெளி வந்திருக்கின்றன. அன்றையப் பத்திரிகையின் செய்தி இவைதான். நிஜமான செய்தி திங்கட்கிழமைப் பத்திரி

# மிதமிஞ்சி போஷிப்பது கெடுதலை விளைவிக்கும்



இது மிகவும் மெல்லிய தன்மை வாய்த்த, அங்க அமைப்புள்ள குழந்தைகள் விஷயத்தில் மிகவும் பொருத்தமாகும்.

அளவுக்கு மீறி உணவு அளிப்பதாலும், வேளை தப்பிய வேளையில் உணவு கொடுத்தாலும் ஈரலுக்கு அதிக வேலை உண்டாகி சொற்ப காலத்தில் ஈரல் பெருக்கம் ஏற்பட காரணம் ஆகிறது. இந் நிலைமையை அறியாமல் நீடிக்க விட்டாலும், சரியான சிகிச்சைசெய்யா விட்டாலும் அது அபாயகரமான நிலைமைக்குக் கொண்டுவிடும்.

## ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்



அடிக்கடி, ஜுரம் ஏற்படுதல், மலசிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக சோர்ந்திருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

## அபாயத்தை ஆரம்பத்திலேயே அகற்றுங்கள்

வியாதி குறிகள் கண்ட உடனே ஜம்மியின் லிவர் க்யூர் கொடுங்கள். அப்படிச் செய்வது உங்கள் கவலையை நீக்கி பணச்சிலவைக் குறைத்து, வியாதியை முற்ற விடாமல் செய்து பின்னிட்டு ஏற்படக்கூடிய அபாயத்தை தவிர்க்கும்.

ஜம்மியின்

# லிவர்க்யூர்

உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன

**ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்**

மைலாப்பூர்—மதராஸ்.

பிராஞ்சுகள்:— பம்பாய், கல்கத்தா, டில்லி, திருச்சிராப்பள்ளி, பெங்களூர், [illegible]

J. 52

---

# வாழையடி வாழையாக வந்த நம் கூந்தல் வளர்ப்புக் கலையின் பொக்கிஷம்




# ஜாப்கோ

## ஹேர் குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கி, உதிரும் கேசத்தை நிறுத்தி கூந்தலை நீண்டு வளரச் — செய்யும் —

**ஜயபாரதம் கம்பெனி**

மல்லேஸ்வரம் ● பெங்களூர்

THE UNITED COMMERCIAL BANK LIMITED

# யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

| | |
|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 4-கோடி |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 2-கோடி |
| ரிசர்வு நிதி | ரூ. 17½-லட்சம் |

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

ஸ்ரீ. எம். ஏ. இஸ்பஹானி
(வைஸ்-சேர்மன்)

ஸ்ரீ. ரமன்லால் ஜி. ஸரய்யா
(வைஸ்-சேர்மன்)

எல்லாவிதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன

பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளன

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

சென்னை கிளைகள் :

| | |
|---|---|
| 310-311, லிங்க செட்டி தெரு | சௌகார்பேட்டை |
| கே. ஆர். கே. ஐயங்கார் | ஆர். வேணுகோபால் |
| கிளை மானேஜர் | கிளை மானேஜர் |

UCB 2

கையில் இல்லை. செவ்வாய்க் கிழமைப் பத்திரிகையிலும் அது வெளி வராது. எந்தப் பத்திரிகையிலும் அது வெளிவரப் போவதில்லை. எவ்வளவோ காலமாக அது நடந்து வருகிறது. அதனால், இப்போதெல்லாம் அதை யாரும் கவனிப்பதில்லை. அதைச் சர்ச்சைக்குரிய விஷயமாகக்கூட ஒருவரும் கொள்வதில்லை. அது தான் நடை முறையில் வந்து விட்ட உண்மை நிகழ்ச்சியாகி விட்டதே! இந்தத் தொழிலின் சார மனைத்தும் அன்றாட உண்மையாகி விட்டது. இதைப் பற்றிப் பேசுவது மகா எரிச்சமூட்டும் கட்டத்துக்கு வந்ததும், இதை மறந்து விட்டோம். அந்தக் கட்டம் யாது? மனித உள்ளத்தில் கிறுக்கடிக்கும் ஓர் ஆசை குமுறி எழுந்தது. கச்சிதமாக வகுத்துக் கொண்ட வாழ்வு பெற வேண்டும் அல்லது இறந்து பட வேண்டும்; எழில் கனிந்த இனிமை யனைத்தையும் பெற வேண்டும் அல்லது அறவே அக்கு விட்டுச் சிதைந்து ஒழிந்து போக வேண்டும்.

இந்த விஷயத்தைப் பற்றிப் புத்தித் தெளிவோடு பேசக் கூடியவர்கள் பெண்கள் மட்டுமே. காலை இரண்டு மணிக்குப் பெண்களால் மட்டுமே என் கண்ணியமாய் நடமாட முடிகிறது என்ற விஷயத்தைப் பெண்கள் தான் புரிந்துகொண்டதாகத் தெரிகிறது. அவர்கள் பேசும் விதம், அச்சில் எழுத முடியாத பாஷையை உபயோகிப்பதில் அவர்கள் காட்டும் கச்சிதம் எல்லாம் பெருமிதமும் வன்மையும் பெறத் தொடங்கி விடுகின்றன. அதோடு, உலக முற்றும் பரவியுள்ளதாகிய எழில் நலத்தை அவர்களே பெற்று விடுகிறார்கள். சிறிய விடுதிகளின் படிக்கட்டுகளில் கிழவர்களும் பையன்களும் ஏறி இறங்கிக் கொண்டேயிருக்கிறார்கள். பணம் புழங்குகிறது. ஆனால், அதற்குக் காரணம் என்ன? முதலாளித்துவச் சமூக அமைப்பில் பணம் புழங்காமல் முடியுமா? காதல், காமம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கூட பரிவர்த்தனைச் சாதனம் பணம் தானே? அதனாலேயே நோட்டு, நாணயம் ஆகியவைகளின் உலகாயதத் தன்மையைச் சமூகத்தின் பரிவர்த்தனைச் சாதனம் சௌகரியமாக ஏற்றுக் கொண்டு விட்டது. குமாஸ்தாக்களுக்கும், கணக்கர்களுக்கும் காதலையும் சாதலையும் இந்தப் பெண்கள் எந்தத் தினுசில் கொண்டு சேர்த்து வருகிறார்கள் என்பதைக் கவனமாய் ஆராய்ந்து பார்த்தாலொழிய முதலாளித்துவம் அடைந்துள்ள படு மோசமான தோல்வியை நாம் புரிந்து கொள்ள முடியாது.

காலை மூன்று மணி. வாழ்க்கையின் விநோதமான ஜீவ ராசிகளை நாம் காண நேருகிறது. முதலாளித்துவத்தால் கோர ரூபம் பெற்றுவிட்ட மனிதர்கள் நம் முன் எதிர்ப்படுகிறார்கள். அவர்களைப் பார்த்தால் ராட்சச மிருகங்களைப் போல் இருப்பார்கள். அவர்களுடன் கூட இருப்பதே குலை நடுக்கத்தை உண்டு பண்ணி விடும். இருந்தும், அவர்கள் ஆங்கிலம்தான் பேசுகிறார்கள். பெண்கள் தான் அவர்களைப் பெற்றார்கள். அவர்களுக்குப் பெயர்கள் உண்டு. அவர்களும் மனித குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களுடன் பேச முடியும். நானும் ஒருவருடன் பேசிக்கொண் டிருந்தேன். அவருக்கு வயது முப்பத்தைந்து. தன் பெயர் 'ஜோன்ஸ்' என்று அவர் சொன்னார். இரவில் நடப்பா

ராம்; பகலில் நின்றுகொண்டே ஓய்வு பெறுவாராம். இது சுலபமாகவே இருந்ததென்று அவர் எனக்குச் சொன்னார்; வருஷக் கணக்காய் அவர் இப்படியே செய்துகொண்டு வந்திருக்கிறாராம். அவர் பொதுவுடைமைவாதியல்ல. நான்தான் கேட்டேன். அவர் இல்லையென்று சொன்னார். அவரைக்கண்டு நான் பயந்ததைவிட என்னைக் கண்டே அவர் மிகவும் பயந்துவிட்டார். அவர் பெயர் 'ஜோன்ஸ்' அல்ல. வேறு பெயர் அந்தச் சமயத்தில் அவருக்குப் படவில்லை. நான் போட்ட கேள்வி அவரைத் திடுக்கிடச் செய்துவிட்டது. திறந்த வாயை மூட மறந்துவிட்டார். இது, முகத்தின் விகாரத்தை இன்னும் அதிக மாக்கியது. அழுக்கேறிய தாடி, பேயடித்த கண்கள், ஆபாசம், அளவு மீறி நீண்டுவிட்ட கீழ் வரிசைப் பற்கள்— அப்பா, என்ன கோரம்! அவர் குரூபி. மனிதனுடைய அவலட்சணத்தி லெல்லாம் படு மோசமான அவலட்சணம், பேயடித்த மாதிரி தோன்றும் காமக் குரூபமாகிய அகோரம் அவரிடத்தில் பூரணமாக அப்பிக்கொண் டிருந்தது. அவர் கண்களில் கோபம், ஆச்சரியம் எல்லாம் கொதித்தன. கொலை செய்யவேண்டும் அல்லது கற்பழிக்க வேண்டும் என்ற ஆசை அந்தக் கண்களில் எரிந்து கொண்டிருந்தது. இருந்தாலும், அவரிடத்துப் பேரளவான அன்பு உணர்ச்சிதான் எனக்கு உண்டாயிற்று.

பெண்கள் விஷயம் இப்படியல்ல. அவர்களில் ஒருத்திகூட அற்பத்தனமானவள் அல்ல. இது உண்மை. இதை நாம் உணர்ந்தாக வேண்டும். மனிதனுடைய ரகசியத்தை இவ்வளவு நெருக்கமாய்த் தெரிந்துகொண் டிருக்கிற யாரும் அற்பத் தனமாயிருக்க முடியாது. மூன்று மணிக்கெல்லாம் பெண்களுக்கு வேலை முடிந்து விடுகிறது. தேசியச் சீரமைப்புச் சட்டத்தின் விதிகள் எல்லாம் அவர்களுக்கு இல்லை. மூன்று மணிக்குப் பிறகு அவர்கள் படுக்கப் போகிறார்கள் — இப்போது, தூங்குவதற்காகவே. தாங்கள் நன்றாய்த் தூங்கிவிடுவதாகச் சொல்லுகிறார்கள். மனிதன் ஆக்கிய காலம், ஓசைப்படாமல், நின்ற நிலையில் தேங்கித் தேய்ந்தது. இதிலிருந்து உண்டான அமைதி, உம்பர் உலகத்தின் நயம் சற்றுமில்லாத, வெறுமையின்பாற்பட்ட அமைதி தான்.

✲

## ரகசியம்!

அட்மிரல் நிமிட்ஸும் ஜெனரல் மக் ஆர்தரும் ஒரு சமயம் மீன் பிடிக்கும் படகில் ஏறிச்சென்றார்கள். திடீரென ஒரு புயலடித்து படகு கவிழ்ந்துவிடவே, இருவரும் ஜலத்தில் விழுந்து தத்தளித்தார்கள்.

எப்படியோ சமாளித்துக் கொண்டு முதலில் நிமிட்ஸ் படகில் ஏறிக் கொண்டார். பிறகு, ஒரு துடுப்பின் உதவியைக் கொண்டு மக் ஆர்தரையும் ஏற்றி விட்டார். படகில் ஏறியதும் மக் ஆர்தரிடம் நிமிட்ஸ் "இந்த சம்பவத்தை யாரிடமும் சொல்லாதீர்கள். எனக்கு நீந்தத் தெரியாது என்பது கடற்படையினருக்குத் தெரியக் கூடாது" என்று கேட்டுக் கொண்டார்.

மக் ஆர்தர் பதிலளித்தார்:—"கவலைப்படாதீர்கள். உங்கள் ரகசியம் பத்திரமாக விருக்கும். என்னால் தண்ணீரின் மேல் நடக்க முடியாதென்பது என் மனிதர்களுக்கு மட்டும் தெரியலாமா?"

—ஏஷியாட்டிக் டைஜெஸ்ட்

# மகிமை தங்கிய மருந்து

சுரபி

மகிமை தங்கிய மருந்தொன் றிருக்குதாம்—அதை உண்டபேர்க்கு
மண்ணும் விண்ணாய் மாறிச் சிறக்குதாம்

கல்லுங் கனியாய்க் கனிந்துருகுமாம்—ஒருதுளி உண்டபோது
கசடர் தாமும் கண்யம் பெறுவராம்

சாதி சமய பேதம் மறக்குமாம்—மருந் துண்டபேர்க்குச்
சமர சமெனும் ஞானம் பிறக்குமாம்

ஆண்டை அடிமையென் றெண்ணம் போகுமாம்—இந்த
[அவனியதனின்
ஆரும் நிகரென் றென்றெண்ண மாகுமாம்

ஆண்கள் பெண்களை ஆள நினையரர்ம்—இருபேருங்கூடி
அமர வாழ்வில் ஆழ நினைவராம்

ஏழை கோழை என்ப தில்லையாம்—சுவை தேர்ந்தபேர்கள்
ஏற்ற மான தெதற்கு மெல்லையாம்

வேலை கூலியென் றேங்கி நில்லராம்—மருந் துண்டோர் யாரும்
வேந்த ரின்பம் மாந்த வல்லராம்

சுதந்தர மென்று சொல்லு வார்களாம்—திரு நாமமதனைச்
சொல்லு வார்துயர் வெல்லு வார்களாம்

கர்ம வீரன் கடையில் கிடக்குதாம்—கருத் துள்ளபேர்க்குக்
காசு பணமொன் றின்றிக் கிடைக்குதாம்

தந்தை தாயரே ஓடி வாரீரோ—மருந் துண்டுகளித்துத்
தருக்கி நடனம் ஆட வாரீரோ (மகிமை)



# சிற்றின்பம் போதுமா?

சுப. நாராயணன்

"மறுவிலா வாண் மதி முக மடந்தையர் புணர்ப்பைச் சிறிய இன்பம் என்று உரை செய்வர், அன்னதன் சிறப்பை அறிவரே எனில், ஆங்கு அதே பேரின்பம் ஆகும்–" என்று பூரிப்புக்கொள்கிறது கந்த புராணப் பாடல் ஒன்று. "பெண்ணாகி வந்த ஒரு மாயப் பிசாசம் பிடித்திட்டு என்னை–" இந்த வாட்டு வாட்டுகிறதே என்று நெஞ்சம் புழுங்குகிருர் பட்டினத்து அடிகள்.

சிற்றின்பத்தில் பேரின்பத்தைக் காணுபவர்கள் கண்ட முடிபு முதலிற் சொல்லியது. பேரின்பத்தை யடைவதற்குச் சிற்றின்பத்தை ஒரு பெருந் தடையாகக் கொண்டவர்கள் கண்ட முடிபு பின்னல் சொல்லியது. எதிர்மறைப் போக்கில் அமைந்த இந்த இரண்டு மனப்போக்கும் உண்மையை அடிப்படையாகக் கொண்டவைதான். இரண்டிலும் உண்மை இருப்பினும், உண்மையை உள்ளவாறு அறிவதற்கு நாம் இவை யிரண்டிற்கு மிடையே உள்ள பலதிறப்பட்ட படிகளைக் கடந்து சென்றுவிட வேண்டும். இவை யிரண்டுக்கும் அப்பாற்பட்ட, விருப்பு வெறுப் பற்ற ஒரு நிலை உண்டு. அந்த நிலையை அடையும்போது நாம் காணும் உண்மை வேறு; அந்த உண்மையின் அழகு உருவம் வேறு; அந்த அழகால் நாம் அடையும் பயன் வேறு; அந்தப் பயனல் நமக்குக் கிட்டும் இன்ப நிலை வேறு.

எல்லா உயிர்களுமே இன்பத்தைத் தேடி யலைகின்றன. எல்லா உயிர்களும் தத்தம் முயற்சிக் கேற்ப ஓரளவு இன்பத்தைப் பெறவும் செய்கின்றன. ஆனல், மனிதனைத் தவிர, ஏனைய உயிர்கள் எல்லாம் தமது இன்பத்தின் எல்லையைத் தம்முடைய உடல் தேவையைப் பூர்த்தி செய்கிற குறுகிய வரம்புக்குள்ளேயே வைத்துக்கொண்டு விட்டன. எப்படியாவது உயிரோடு இருந்தால் போதும். உண்பது, உறங்குவது, புணர்வது, இனத்தைப் பெருக்குவது, சாவது—இந்தச் சிறு வட்டத்துள் அடங்கி விடுகின்றன ஏனைய ஜீவராசிகளின் வாழ்க்கைப் போரும், அந்தப் போரி லிருந்து கிடைக்கும் வெற்றிப் பரிசாகிய இன்பமும்.

மனிதனும் மிருகம் தான். ஆனல், அவனுக் குள்ள பகுத்தறிவு என்ற மகத்தான ஆயுதத்தின் மூலம், சிந்தனை என்ற பட்டரையில் அதைத் தீட்டித் தீட்டிக் கருக் கேற்றிக்கொண்டு, தன் இன மனிதர்கள் உள்ளிட்ட உயிர்கள் அனைத்தையும் ஒவ்வொரு தனி மனிதனும் தனக்குக் கீழே அடிப்படுத்திக் கொண்டுவர அரும்பாடு பட்டு, அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிருன். அறிவின் துணையால், அறிவற்ற, உணர்ச்சியை மட்டும் கொண்ட, இதர பிராணிகளை அடிப்படுத்திக் கொண்ட அவனிடத்துத் தெய்வப் பண்பும், பைசாசப் பண்பும், தனித்தனியே பிரித்தெடுக்க ஒட்டாதபடி, பின்னிக் கலந்து கிடக்கின்றன. இயற்கையோடு

---

**இன்றைய மனிதன் அன்றுடம் விதவிதமாய் அடையப் போராடி வரும் மாடி, மனைவி, ரேடியோ, கார் ஆகிய 'நாலு சுதந்தரங்கள்' மட்டும்தானு இன்பத்தின் அச்சாணிகள்?**

போராடிப் போராடி முன்னேறுவதோடு, தன் மனத்துள்ளே சதா நிகழ்ந்துகொண்டிருக்கும் பேய்க் குமுறலுடனும் அவன் போராடித் தீர்க்க வேண்டி யிருக்கிறது. மனிதப் போராட்டத்தின் தளகர்த்தன் அறிவு. போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டுக் காரியங்களைச் சாதிக்கும் போர்வீரன் உணர்ச்சி. உணர்ச்சியும் அறிவும் கைகோத்து வழி நடந்தா லொழிய வாழ்க்கைப் பிரயாணம் கழுதை புரண்ட களமேயாகும். குறிக்கோளை அடைவது குதிரைக் கொம்புதான். அனேக சமயம், குறிக்கோளென்று ஒன்று இருப்பதையே நாம் மறந்து விடுகிறோம். கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதைதான் இன்றைய நாகரிக மனிதனின் அணுக் குண்டு யுகத்தின் நிலை.

எல்லாருக்கும் எல்லா விஷயமும் விளங்கிவிடாது; அப்படி விளங்க வேண்டிய தேவையுமில்லை. ஒவ்வொருவரும் அவரவருடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு வேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொண்டால் போதும். படிப்படியாக முன்னேறி, படிப்படியாக விஷயங்களைத் தெரிந்துகொண்டு வந்தால், காலப்போக்கில் பூரண அறிவு கிட்டும். வாழ்க்கைப் பிரயாணத்தில், குறிக்கோளை நெருங்கிப் பேரின்பத்தை அடைவதற்கும் வழி யேற்படும்.

வாழ்க்கை என்பது முடிவில்லாத ஓர் அனுபவக் களஞ்சியம். அனுபவம் என்பது உடல், மனம் என்ற இரண்டையும் பொறுத்தது. உடல் அனுபவம் மன அனுபவமாகவும், மன அனுபவம் உடல் அனுபவமாகவும் ஒன்றுக்கு மற்றது உறுதுணையாயிருந்து, பின்னிக் கொண்டே செல்லும். வரம்புள்ள உடலின் அனுபவம் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நின்று விடுகிறது. அதற்கு மேலே போக அதற்குச் சக்தி யில்லை. வரம்பில்லாத மன அனுபவம் எல்லை யின்றிப் பரந்து விரிந்து செல்லக்கூடியது. உடல் அழியும் என்பது நமக்குத் தெரியும். மனம் அழிகிறதா என்பது நமக்குச் சரியாய்த் தெரியவில்லை. ஆனால், கேவலம் உடலைப்போல் அது கட்டுப்பட் டிருப்ப தில்லை யென்பது மட்டும் நமக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. எல்லை யின்றிச் சிந்திக்கக் கூடிய ஆற்றல் படைத்த மனம் முதிர்ந்து வளர்ந்தவுடன், ஆத்மா என்ற நுண்மையான நிலையை எய்திவிடுகிறது. ஆனால், அகண்டாகாரமான பிரபஞ்சத்தில் துள்ளிக் குதித்து ஆடுவதற்கு உடலானது மனத்துக்கு ஒரு பெரும் சிறைக் கூடமாக ஆகிவிடுகிறது. லௌகிக வாழ்வில் சுதந்தரம் பெற வேண்டியது எவ்வளவு முக்கியமோ, அதேபோல, ஆத்மீக வாழ்வில் சுதந்தரம் பெற வேண்டுவதும் முக்கியமானதே என்பதை நாம் அறிந்தும், அறியாதவர்கள் போலவே இருந்து விடுகிறோம்.

மனிதனது தீவிரமான சிந்தனையால் நாம் எத்தனையோ அரிய விஷயங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால், ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்வது வேறு, அதைப்பற்றி யொழுகி வருவது என்பதுவேறு. நன்மை, உண்மை, இன்பம் இவை மூன்றும்தான் வாழ்வின் அச்சாணி. கேவலம் உடல் சிறைக்குள் நெஞ்சழிந்து கிடக்கும் நமக்கு இந்த மூன்றையும் பற்றி இன்னும் தெளிவேற்பட வில்லை; எல்லார்க்கும் பொதுவான ஒரு முடிபு ஏற்பட வில்லை. அவ

ரவர்க்கு உகந்தபடியே இவைகளை நாம் அர்த்தம் செய்து கொள்ளுகிறோம். ஏக சமயத்தில் எல்லாரும் இன்புற்றிருக்க முடிவதில்லை. துன்பம் நிறைந்த வாழ்வில், துன்பத்தைப் பகிர்ந்து கொள்ள யாரும் முன் வருவதில்லை. இன்பம் பெறுவதற்கு மட்டும் முந்திக்கொள்கிறோம். நாம் அறிந்த இன்பம் அனுபவம் என்கிறதில் அடங்கி விடுகிறது: அனுபவம் என்பது ஒரு துய்ப்பு நிலை. துய்ப்புக்கு எல்லை யுண்டு. எல்லை யுள்ளதை எல்லையற்றதாக ஆக்க முயல்வதே சிற்றின்பத்தைப் பேரின்பமாக ஆக்கச் செய்யும் முயற்சி. இன்பம் இருவகைப் படும்: துன்பசதி லிருந்து விடுதலை பெறுகிற இன்பம் ஒன்று; துன்பக் கலப்பற்ற தனி இன்பம் மற்றொன்று. தலை வலியால் வரும் துன்பத்தைப் போக்கிக் கொள்ள மருந் துண்கிறோம். இந்த மருந்தால், உள்ள துன்பம் போகிறதே யல்லாமல், இல்லாத இன்பம் ஒன்று புதிதாக வந்து விடுவதில்லை. உடல் உபாதை யில்லாத போது, ரோஜாப் பூவின் நறுமணத்தால் நாம் பெறுவது கலப்பற்ற இன்ப அனுபவமாகும். ஜடிமன் பிடித்திருக்கும்போது, ரோஜாப் பூவின் நறுமணத்தை நாம் நுகர முடிவ தில்லை. இதே போல, பசியால், உழைப்பால், சோகத்தால் நாம் பெறுகிற துன்பம் உணவால், ஓய்வால், மகிழ்ச்சியால் துடைக்கப்படுகின்றது. அதோடு சரி. புதிய இன்ப அனுபவம் ஒன்றையும் நாம் பெற்று விடவில்லை. காரணம்: சுயநலம், அழுக்காறு, பேராசை ஆகிய தீய குணங்கள் நம் ஒவ்வொருவரையும் இடையறாது வாட்டிக் கொண்டே யிருக்கின்றன. இவற்றினின்றும் விடுதலை பெறுவதிலேயே நமது வாழ்க்கைப் போராட்டம் முடிந்துவிடுகிறது. இந்தக் குழப்படியான நிலைமையில், விஷயங்களின் தாரதரங்கள் தடுமாறிக் கெட்டழிந்து போகின்றன. அவரவர் கண்டது தான் உண்மை யென்று ஒவ்வொருவரும் சாதிக்கிறோம். நாளாவட்டத்தில், கட்சி திரண்டு விடுகிறது. அறிவும் உணர்ச்சியுமாகிய ஆணும் பெண்ணும், சக்தியும் சிவனும் போல, ஒரே உடலின் இரு கூறுகள் என்பதை மறந்து விடுகிறோம. இருவரும் கலந்து கூடி வாழ்க்கைப் போரை நடத்துவதற்குப் பதிலாக, ஒருவரை மற்றவர் புகழ்ந்து கூத்தாடுவதிலும், இகழ்ந்து வெறுப்பதிலும் அற்பத்தனயாக ஈடுபட்டு விடுகிறோம். பார்க்கப் போனால், ஆத்மாவுக்கு ஆண் பெண் தன்மை கிடையாது. மனித எலும்புருவத்திற்கும் ஆண்பெண் தன்மை கிடையாது. மனிதனை ஆணாகவோ பெண்ணாகவோ ஆக்குவன, கேவலம் கொழுப்புப் பிண்டத்தாலும் நரம்பு முறுக்காலும் ஏற்பட்ட தற்காலிகமான புறச் சின்னங்களே. நமது சுருங்கிய சில வருஷ வாழ்விலும், ஒரு சில வருஷங்களுக்கு மட்டுமே இந்த வேற்றுமைச் சின்னங்கள் விம்மிப் புடைத்து விறைத்து நின்று, நம்முடைய கவனத்தை இழுத்து, மனத்தை அலைக்கழிக்கின்றன. முதிராக் குழந்தைக ளிடத்தும், முதிர்ந்து உதிர்ந்த முதியவரிடத்தும் ஆண் பெண் வேற்றுமை கதித்தெழுந்து நிற்ப தில்லை.

பேரின்பத்தை யடைவதற்கான சிற்றின்பச் சாதனங்களையே பேரின்பமாகக் கொண்டு விட முயல்வது சுத்தஅபத்தமான முயற்சி. இதை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால், நமது அறிவைச் சதா காலமும் உணர்ச்சி அடக்கி ஒடுக்கி விடு

கிறது. அதனாலேயே நெஞ்சறிந்து பொய் வாழ்க்கை நடத்துவதில் நாம் மான மில்லாமல் முனைந்து நிற்கிறோம். இருக்க ஒரு வீடு, பசித்தபோது சாப்பிட உணவு, வாழ்க்கைத் துணைவியாக ஒரு மனைவி, அவளிடத்துப் பெற்ற இன்ப அனுபவத்தின் பயனாக இரண்டொரு குழந்தை, ஆத்ம வளர்ச்சிக்கான கலை, இலக்கியம், தத்துவம் ஆகியவற்றின் இன்ப அனுபவம் இவையிருந்தால், சிற்றின்ப வாழ்க்கை நிறைவு பெற்று விடுகிறது. இவைகளைப் பெற்ற வுடன் திருப்தி யடைந்து, இவற்றுக்கு மேற்பட்ட பேரின்பத்தை அடைவதற்கு நாம் முயன்றால், பேரின்பம் கிட்டாதா, என்ன? கிட்டத்தான் செய்யும். இது நமக்குத் தெரியும். ஆனாலும், ஒரு தரம் அனுபவித்த இன்பத்தையே மீண்டும் மீண்டும் அனுபவிக்க நாம் ஒவ்வொருவரும் துடிதுடிக்கிறோம். போதும் என்று நின்று விடுவதேயில்லை. இருக்கும் சில சிற்றின்பச் சாதனங்களையே எண்ணற்ற முறையில் பெருக்கி வகுத்துத் தொகுத்துக் கழித்துக் கூட்டிக் கணக்குப் போடத் தொடங்கிவிடுகிறோம். நாம் இன்பம் என்று கொள்வன வெல்லாம் வெறும் அனுபவ நினைவுகளாகவே நம் மனத்தில் பதிகின்றன. நம்முடைய அனுபவத்தைப் பிறர்க்கு நாம் அப்படியே பிய்த்தெடுத்துக் கொடுத்துவிட முடிவதில்லை. முடிவில்லாமல் அனுபவங்களை உள்ளத்தில் போட்டு அடைப்பதால் இன்பத்தைப் பெருக்கிக் கொண்டதாக நாம் கனவு காண்கிறோம். அதனாலேயே சுரண்டல், விபசாரம், கொலை, களவு, பித்தலாட்டம், ஏமாற்றம், பொருந்தா வாழ்வு எல்லாம் கொடிய பாம்புகளைப்போலச்சீறி எழுந்து, நம்முடைய உடலையும் உள்ளத்தையும் நஞ்சாக்கி விடுகின்றன.

லௌகீக வாழ்வில் நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். ஆனால், எல்லாரும் சரியாய்ப் பங்கு வாரியாக உழைப்ப தில்லை. உழைப்புக்கு நாம் வைத்த அளவுகோல் பணம். பணத்தைச் சேர்ப்பதில் நாம் எல்லோரும் நியாயமாய் நடந்து கொள்ளுகிறோமா? அவரவர் தகுதிக்கும் திறமைக்கும் தக்கபடி மனப் பூர்வமாய் உழைக்கிறோமா? நம் வரைக்கும் உண்மை யென்று தெரிந்ததை, நம் வரையிலாவது கடைப்பிடித்து ஒழுகி வருகிறோமா? எவன் கழுத்தை யறுத்தாவது பணம் சேர்க்க வேண்டும். எவளைக் கெடுத்தாவது காம விழைவைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். எவன் காலை வருடியாவது 'முன்னுக்கு' வர வேண்டும். தலையை விற்றாவது வயிற்றுக்கு உணவு தேட வேண்டும். என்ன பித்தலாட்டம் செய்தாவது புகழும், பணமும், செல்வமும், செல்வாக்கும் பெற்றாக வேண்டும். அதனால்தான், தர்ப்பைப் புல் பிடிக்க வேண்டியவர்கள் நாடாளும் செங்கோலைக் கையில் ஏந்துகிறார்கள். வட்டிக் கடை வைக்கவேண்டியவர்கள் இலக்கிய சேவையில் ஈடுபடுகிறார்கள். கணக்கு வேலை பார்க்க வேண்டியவர்கள் எழுத்தாளர்களாகி விடுகிறார்கள். உழவுத்தொழில் செய்ய வேண்டியவர்கள் கவிஞர்களாகி விடுகிறார்கள். பித்தலாட்டக்காரர்கள் வியாபாரிகளாகி விடுகிறார்கள். அயோக்கியர்கள் குபேரர்களாகிவிடுகிறார்கள். யோக்கியர்கள் மன மிடிந்து பைத்தியக்காரர்களாகிறார்கள். நாட்டுக்கு

உணவளிக்கிறவர்கள் வீடின்றிக் கூழின்றிப் பஞ்சைக ளாகிறார்கள். காமுகர்களும், பதடிகளும் கற்பு, ஒழுக்கம், தர்மம் என்றெல்லாம் ஆசாரப் பேச்சுப் பேசித்திரிகிறார்கள். சிற்றின்பத்தைத் திட்டிக்கொண்டே சிற்றின்பத்தைப் பெரும் துன்பக் கேணியாகக் குட்டை கிளப்பிய மாயாவிப் பேர்வழிகள் சராசரி மனிதனின் அறிவுத் தெளிவை ஒரே குழப்பாகக் குழப்பி, அவனுடைய வாழ்வை நித்திய கண்டம் பூரணாயுசாக அடித்து விடுகிறார்கள். ஆனால், சராசரி மனிதனுக்கும் மனம் உண்டு; ஆத்மா உண்டு; மனச் சாட்சி உண்டு; அறிவு உண்டு; உணர்ச்சி உண்டு; கெட்டதிலிருந்து நல்லதைப் பிரித்தறிந்து கொள்ளும் பகுத்தறிவு உண்டு. துன்பத்திலிருந்து விடுதலை பெற முயலுகிறவர்கள் எண்ணற்றோர். துன்பத்தினிடையே சிறு சிறு இன்ப அனுபவங்களைப் பெற முடிந்தவர் பெரும் பலர். தாம் இன்புறப் பிறர்க்குத் துன்பம் சூழ்வார் பெரும் பலர். தாம் துன்புற்றுப் பிறர் இன்புறச் செய்வார் எண்ணற்றோர். தாமும் இன்புற்றுப் பிறரும் இன்புற முயல்வார் பலர். சராசரி மனிதர்களாகிய நீங்களும் நானும் சிற்றின்பத்தைப் போற்றவு மில்லை, தூற்றவு மில்லை. முடிந்த மட்டும் அனுபவிப்போம்: முடிந்த மட்டும் நம்முடைய பங்குக்கு உரிய சிற்றின்பங்களை நிறைய அனுபவிப்போம். பேரின்பத்தை அடையும் சாதனமே சிற்றின்பம் என்பதையும் நாம் அறிவோம். ஆனால், இன்று நமக்குக் கிடைத்துவரும் சிற்றின்பப் பொசிவு மட்டும் நம்முடைய நியாயமான தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்யப் போதுமா?

✲

## சொல்லுக்குப் பஞ்சமா?

கப்பல் தொழில், ஆலைத் தொழில், இரும்புத் தொழில், சுரங்கத் தொழில், வேளாண்மை, பனைச் சிற்பம், ஓவியம் முதலிய எண்ணற்ற தொழில்களுக்குத் தாயகமான தமிழ் நாட்டில், இன்றும் இவற்றில் அன்றாடம் ஈடுபட்டு வருகிறவர்கள் நிறைய உண்டு. பரதேசிகளாய், நெடுநாள் நகரங்களில் இருப்பவர்களைத் தவிர, நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் இன்றும் பொருத்தமான நல்ல தமிழ்ச் சொற்களையே அன்றாட வாழ்வில் கையாண்டு வருகிறார்கள். இதை யறியாத—அறிய மனமில்லாத—ஆசிரியர்களும், பேராசிரியர்களும் எழுதும் போதும், மொழிபெயர்க்கும் போதும் இங்கிலீஷ்காரருடைய நட்டுகள், போல்ட்டுகள், ஸ்க்ருக்கள், கர்டர்கள், டம்ளாகள், டிபன்கள், ஆகிய எண்ணற்ற 'கள்' களை அப்படியே தமிழில் வாந்தி யெடுக்க வேண்டிய பரிதாப நிலைக்கு வந்து விட்டோம். போதாக் குறைக்கு, வடநாட்டு 'ஜீ' க்கள் வேறே கிளம்பி விட்டன. தொழில், கலை இவை சம்பந்தமான தமிழ்ச் சொற்களை, எங்கள் மேல் கருணைவைத்து, வழங்குமாறு உங்களை வேண்டுகிறோம். இதற்குப் பரிசு கிடையாது!

—ஆசிரியர், சக்தி

## அயோக்கியப் பட்டம்

புது வருஷத்தில் அளிக்கப்பட்ட பட்டங்களைப்பற்றி மத்திய சட்ட சபையில் பிரஸ்தாபம் வந்தது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ ஸ்ரீப்ரகாசா என்பவர் சர்க்காரைக் கேட்ட ஒரு கேள்வி:—

"நிரம்ப உபயோககரமான அயோக்கியனாக இருக்கிறார் என்ற காரணத்தினால் ஒரு கனவானுக்கு ராய் பகதூர் பட்டம் அளிக்க வேண்டுமென ஒரு மாஜிஸ்ட்ரேட் சிபாரிசு செய்தது வாஸ்தவமா?" —தினமணி

# ரெக்ஸோனா

## சருமஅழகை உண்டாக்குகிறது

### ...சருமசுகத்தை பாதுகாப்பதன் மூலம்






சரும சௌந்தரியத்திற்கு சரும ஆரோக்கியமே உண்மையான அடிப்படை. ரெக்ஸோனா, சரும ஆரோக்கிய மேற்படும்படிச் செய்வதனாலும் சரும சுகத்தைப் பாதுகாப்பதனாலும், சரும அழகை உண்டுபண்ணுகிறதென்றே சொல்லலாம்.

இதை ரெக்ஸோனா எப்படிச் செய்கிறது? முதலாவதாக, ரெக்ஸோனாவில் கிருமி நாசினியாகிய "கேடில்" என்னும் கியாதிபெற்ற கலப்பு மருந்து இருக்கிறது. இம்மருந்து சருமத்திற்கு குணமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்தது. இரண்டாவதாக, இச் சோப்பின் தாராளமாக விரைவிலுண்டாகும் நுரை, சுகமளிக்கும் "கேடில்" மருந்தை சரும உபத்திரவங்கள் அடிக்கடி ஏற்படும் சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்க்கிறது.

உங்கள் குடும்பத்தில் எல்லோரும் இந்த அழகான பசுமை வாய்ந்த ரெக்ஸோனா சோப்பைத் தினந்தோறும் உபயோகியுங்கள். மேலும், குழந்தைக்கு இச் சோப்பைப்போல குணமளித்துப் பாதுகாக்கும் மற்றொரு சோப் இல்லை என்பதை மறவாதீர்கள். ரெக்ஸோனா குழந்தையின் மெல்லிய சருமத்தைக் குளுமையாகவும், சுகமுடையதாகவும் செய்து காப்பாற்றுகிறது.

R.P. 29-50-40 TM

**REXONA PROPRIETARY LIMITED**

# ஹிந்து பாங்கு கரூர் லிமிடெட்

ஹெட்டாபீஸ்: கரூர் (S. I. Ry.) ஸ்தாபிதம்: 1932

பிராஞ்சுகள்: திண்டுக்கல், உடுமலைப்பேட்டை, ஈரோடு, மைசூர், திருச்சி, மாண்டியா, தேவக்கோட்டை, திருப்பத்தூர் (N. A.) & பெங்களூர் சிடி

சப் ஆபீஸ்: நாகல் நகர் (திண்டுக்கல்)

## 30-6-46-ந் தேதியில் பாங்கியின் நிலைமையைக் காட்டும் ஸ்டேட்மெண்ட்

| பொறுப்புகள் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வும் | 2,06,546 | 10 | 2 |
| பாங்கு ஓவர் டிராப்டுகள் | 2,93,442 | 7 | 2 |
| டிபாசிட்டுகள் | 25,11,478 | 6 | 11 |
| இதர வகைகள் | 91,386 | 12 | 0 |
| மொத்தம் ரூ. | 31,02,854 | 4 | 3 |

| ஐவேஜுகள் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கையிருப்பிலும் இதர பாங்கிகளிலுமுள்ள ரொக்கம் | 4,17,864 | 4 | 4 |
| சர்க்கார் பத்திரங்களும் இதர இன்வெஸ்டுமெண்டுகளும் | 8,15,564 | 13 | 0 |
| லோன்களும் அட்வான்சுகளும் | 17,51,403 | 13 | 6 |
| இதர வகைகள் | 1,18,021 | 5 | 5 |
| மொத்தம் ரூ. | 31,02,854 | 4 | 3 |

கரண்டு கணக்குகளுக்கு வட்டி 1%

ஸேவிங்ஸ் கணக்குகளுக்கு வட்டி 2½% (ஒரு வாரத்திற்கு ரூ. 300 'டிரா' செய்யலாம்)

பிக்சட் டிபாசிட்டுகளுக்கு 6 மாத தவணை 3% 12 மாத தவணை 3½% 24 மாத தவணை 4%

K. S. அனந்த ராவ் B. A., மானேஜர்

# சோனல்

படை, சொறி, சிரங்கு, முகப்பரு, சேற்றுப் புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங்களுக்கும் சிறந்த களிம்பு

# க்யூரோசால்

இருமல், காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

டிஸ்டிரிபியூடர்கள்

**T. N. C. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்,**

மருந்து ஷாப் : : மதுரை

சென்னை நகர் ஏஜண்டுகள்:

**A.S. நாயகர் & கோ.,**

2, சுப்பிரமணியம் சந்து, ராட்டன் பஜார், சென்னை

கோவை, சேலம் ஜில்லா ஏஜண்டு:

**K. வீராசாமி**

83-B. M.N.G. தெரு, கோயம்புத்தூர்

ஆந்திரா & நிஜாம் சமஸ்தான ஏஜண்டுகள்:

**காரிஸன் காமர்ஸ்,**

கவர்னர்ஸ்பேட், பெஜவாடா

# வீரசிங்கம்

●

வல்லிக்கண்ணன்

எங்கள் வீட்டில் சமையற்காரனுக இருந்த வீரசிங்கத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன சொன்னுலும் சரி, என்னைப் பொறுத்தவரையில், நான் மறக்க முடியாத பேர்வழிகளில் அவனும் ஒருவன்.

'ஐயா யாரு தெரியுமா? வீரசிங்கமாக்கும்!' என்று அவன் சொல்கிற அழகுக்கே அவனுக்குச் சம்பளம் கொடுக்கலாம். இன்றையத் தமிழ்ச் சினிமாக்களில் விளக்கெண்ணெய் மூஞ்சிகளோடு அழுதுவழியும் கட்டைகளுக்கு எவ்விதத்திலும் வற்காத 'நட்சத்திரம்,' 'நடிகர் திலகம்' என்ற பெயர்கள் எல்லாம் அவன் ஒருவனுக்கே பொருந்தும். அடடா, எப்படிப்பட்ட ஆசாமி! அவனை நான் எவ்விதம் மறக்க முடியும்?

அவனைப் பார்த்ததும், அவன் அடுப்பங்கரையையும் கரிச்சட்டிகளையும் கட்டி மாரடிக்கக் கூடியவன் என்று யாரும் சொல்லமுடியாது. நாடகமேடை இளவரசு, சிலிர்த்து நிற்கும் 'டோப்பா மயிரை' கழற்றி எறிய மறந்து விட்டு, ஏதோ ஒரு வேலை பார்க்க வந்திருக்கிருர் என்றே தோன்றும்! உருளைக்கிழங்கு உருளைக்கிழங்காய்த் திரண்டு உடலில் அங்கங்கே குதிக்கும் சதைகளைக் கண்டதும், குஸ்தி போட்டுக் கொண்டிருந்த 'சண்டியன்' வேறு ஆள் எதிர்ப்படாததினுல் வேலைதேடி முண்டாத் தட்டுவது போல் படும்.

'ஆளைப் பார்த்தால் ராஜா போலே' என்பார்கள் அல்லவா, அதற்குச் சரியான உதாரணம் வீரசிங்கம். அப்பொழுது நான் நாலாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் 'செந்தமிழ் வாசகம்—புத்தகம் மூன்று' என்பதில், ஐந்தாவது பாடத்தில், நளச் சக்கரவர்த்திக் கதை இருந்தது. நளமகாராஜா சமையல் வேலை பார்த்தார் என்று அது அச்சு அச்சாக எடுத்துச் சொல்லியது. என்றுலும், அதை நம்ப எனக்குக் கஷ்டமாகத்தானிருந்தது! ஆனுல், வீரசிங்கத்தைப் பார்த்த உடனேயே, 'நளமகாராஜா கூட மடத் தொழில் செய்திருப்பார்' என்றே எனக்கு உறுதி விழுந்தது. ஏனென்ருல், ராஜா போல இருக்கும் வீரசிங்கம் சமையல் வேலை பார்க்கும் போது, ராஜாவாக இருந்த நளன் ஏன் பாகத் தொழில் பண்ணியிருக்கக் கூடாது? இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்பதைப் பற்றி எட்டு வயதுப் பையனின் மனம் ஆராய்ச்சியில் இறங்கவில்லை.

நான் பள்ளிக் கூடத்திலிருந்து வீடு திரும்பிய போதுதான் முதன் முதலில் அவனைச் சந்தித்தேன். 'இவன் தான் புதிய சமையற்காரன்' என்று அறிமுகமானதும், எனக்கு ஒருவிதத் திகைப்பு ஏற்படத்தான் செய்தது. அப்பா, சிரித்தபடியே, 'இவன் வீரசிங்கமாக்கும்!' என்று கூறியதும், இன்னும் அதிகமாகத் திகைத்தேன்.

அந்தத் திகைப்பும் மிரட்சியும், தண்ணீர்ப் பாம்பைக் கண்டு சிறு

'பயம் இங்கே வருமா! ஐயா இருக்கிறது தெரியாது அதுக்கு? ஐயா யாரு, வீரசிங்கமாக்கும்!'. ஆனுல், அன்றொரு நாள் இரவில்......

பையன் பயப்படுவது போல் தான். அப்படிப் பயப்படுவது அர்த்தமற்றது; பயப்படவே வேண்டியதில்லை! இதை இரண்டு மூன்று தினங்களிலேயே உணர்ந்து விட்டோம் நானும் என் சகோதரர்களும். பெட்டிக் குள்—மூடியிருக்கும் போது—அடங்கி ஒடுங்கிச் சாதுவாகக் கிடக்கிற பாம்பு, மூடியைத் தள்ளி விட்டால் சீறி எழுந்து ஆடிக் களிக்கிற மாதிரி, அவனும் நடந்து கொண்டான். தந்தை வீட்டிலிருந்த போது அப்பாவி போல, 'ரொம்ப நல்ல பிள்ளை' மாதிரி நடந்த அவன், தந்தை வீட்டில் இல்லாதபோது கும்மாளி யிட்டான். இஷ்டம் போல் அலைந்தான்,—தும்பு தெறிக்கப் பட்டதும் துள்ளி ஆடி ஓடி அமர்க்களப்படுத்துகிற கன்றுக் குட்டி போல.

உத்தியோகம் காரணமாக எனது தந்தை அடிக்கடி வெளியூர் போகவேண்டியவர். எனது அன்னையும் ஊரில் இல்லை. சாகக் கிடந்த தனது சகோதரிக்கு 'சிக்குப் பார்க்க'ப் போயிருந்தாள். எனது அண்ணவும் நானும்தான். 'பயப்படாமலிருங்கள், பயப்படாமலிருங்கள்' என்று பலமுறை கூறிவிட்டு அப்பா அவசரமாக வெளியேறியதும், 'பயம் இங்கே வருமா! ஐயா இருக்கிறது தெரியாது அதுக்கு? ஐயா யாரு, வீரசிங்கமாக்கும்!' என்று கிராப்பை 'ஒரு உலுப்பு' உலுப்பிவிட்டான் சமையற்காரன். எங்களுக்கு வந்த சிரிப்புக்கு அளவே இல்லை.

அவன் பார்வைக்கு வேடிக்கையாக இருந்தான். தனியனானதும் அவன் பேச ஆரம்பித்தது அதை விட வேடிக்கையாக இருந்தது. 'தம்பிமார்களே!' என்று கத்தினன் அவன், நாடக மேடை ராஜா 'அஹோ மந்திரி பிரதானிகளே!' என்று கூவுவது போல. நாங்கள் சிரித்தோம்.

'உங்களுக்குக் கதை சொல்லட்டுமா?' என்று கேட்கவும், ஆவலுடன் 'ஊம்' போட்டோம் நாங்கள்.

அப்போது இரவு நேரம். நாங்கள் சாப்பிட உட்கார்ந்திருந்தோம். 'அரிக்கன் விளக்கு' மங்கலாக எரிந்தது. சிம்னியைச் சரியாகப் 'பொருத்தி வைக்காத' காரணத்தாலோ, அல்லது மண்ணெண்ணெய் ஊற்றுகிற வாயின் மூடியை நன்றாகத் திருகாததினலோ, சுடர் அடிக்கடி 'டபக், டபக்' கென்று குதித்துக்கொண்டிருந்தது, உபாத்தியாயரின் கிள்ளுதல்களை வாங்கியதும் 'ஸ்... இஸ்' என்று துள்ளுகிற சிறுவன் போல. மெதுவாக நெளியும் காற்று, 'கிச்சுக் கிச்சு'க் காட்டிக் குழந்தையை அழும் நிலைக்குப் பக்குவப்படுத்தி விளையாடும் பண்பு பெற்ற சிலரைப் போல், விளக்குச் சுடரை ஆடவிட்டு ஆடவிட்டுக் 'கபக்' கென அணைத்து விடுமோ என்று எண்ணச் செய்தது.

அதையே கவனித்த என்னை நோக்கி 'என்ன தம்பி, பயமாக இருக்கிறதா? சும்மா சாப்பிடு, நான் கதை சொல்லுகிறேன்' என்று அவன் சொன்னன். பிறகு தொடர்ந்தான்:

"திருநெல்வேலி நயினர்குளம் இருக்கு பாரு—அங்கேதான் நடந்தது இது. நானும் என் சிநேகிதன் ஒருத்தனும் அந்தக் குளத்தங்கரைச் சாலை மீது ஹாய்யா நடந்து கொண்டிருந்தோம். அப்போ ராத்திரி நேரம் தான். இதை விட இருட்டு ஜாஸ்தி. தனியாக சுருட்டுப்

பிடித்துக் கொண்டு நிற்கிறவன் மாதிரி அங்கே இங்கே ஒரு முனிசிபல் லாந்தர் மினுக்கும். இப்போதானே எலெக்ட்ரிக் லைட் வந்தது! அந்தக் காலத்திலே இதெல்லாம் ஏது!

"ராத்திரி நேரத்திலே நயினார் குளத்துப் பக்கம் போக ரொம்பத் துணிச்சல் வேணும். இருட்டு, அது ஒரு பக்கம் இருக்கு. அதோடு, குடிகாரப் பயல்கள் நடமாடுகிற இடம். போக, பேய்கள் அங்கே குடியிருப்பதாகவும் சொல்லுவதுண்டு. என் சிநேகிதன் 'நான் வரலே' என்று இழுத்தான். 'அடே! ஐயா வீரசிங்கம் கூட வரும்போது உனக்கு என்னடா பயம்!' என்று அவனைத் தட்டிக் கொடுத்து, மிரளுகிற மாட்டைத் தட்டிக்கிட்டி நைஸ் பண்ணி வண்டிக்காரன் ஓட்டிச் செல்வது போல, இழுத்துப் போனேன்.

"இருந்தாலும், அவனுக்கு உள்ளுக்குள்ளே உதைப்புத் தான். 'ஏ, இந்த நேரத்திலே அங்கே எதுக்குடே? வேண்டாம்' என்று அடிக்கடி கெஞ்சியபடி வந்தான்......"

கதை கேட்கும் சுவையில் சாப்பாட்டை மறந்து விட்டோம் நாங்கள். விளக்கைக் காற்று வழியிலிருந்து தள்ளிச் சுவரோரமாக வைக்க முயன்ற வீரசிங்கம் எங்களைக் கவனித்தான். "என்ன, சாப்பிடாமலிருந்தால் என்ன அர்த்தம்? ஊம்... சாப்பிடுங்கள். சீக்கிரம்!" என்று அவசரப் படுத்தினான். உபாத்தியாயர் 'சத்தம்!' எனக் கூவிப் பிரம்பால் மேஜையில் அடித்ததும் அமைதியாயிருந்து, பிறகு 'சள புள' வென்ற பேச்சில் மீண்டும் இறங்குகிற பிள்ளைகள் மாதிரி, நாங்களும் கொஞ்ச நேரம் சிரத்தையாகச் சாப்பிட்டு விட்டுத் திரும்பவும் கதையில் கவனத்தை ஓடவிட்டோம்.

வீரசிங்கம் சொல்லிக் கொண்டிருந்தான்: "அது ஆடி மாசம். ஆடிக் காற்றுத்தான் தெரியுமே, அடங்காப் பிடாரி மாதிரி 'ஊய்ய்...வூய்ய்...... வோய்'னு கத்திக் கொண்டு அங்கும் இங்கும் ஓடி, மண்ணையும் மட்டையையும் மரங்களையும் படாத பாடு படுத்தி......இல்லையா! அப்படித்தான் பெருங்காற்று அடித்தது. ரோட்டு மண்ணெல்லாம் போய்ச் சரளைக் கற்கள் காலைக் குத்தின. இருட்டில் ஒன்றும் தெரியாததால், வழியில் தறுதலைத் தனமாய் நிற்கும் சில கற்கள் விரலைப் பதம் பார்த்தன. ஓரத்திலே ஒதுங்கிக் கிடக்கும் மண்ணை 'இஷ்ஷ்' என்ற இரைச்சலுடன் காதுக்குள்ளும் கண்களிலும் ஏற்றுமதி செய்ய அள்ளி வரும் காற்று.

"நான், தலையையும் காதுகளையும் சேர்த்து இறுக்கிப் பலமா ஒரு முண்டாசு கட்டிக் கொண்டேன். என் தோழன் சும்மா துண்டை முக்காடு போட்டுக் கொண்டான். நாங்கள் நடக்கும் போது, எங்களுக்கு முன்னால் சிறிது தூரத்தில் யாரோ நடப்பது போல் தோன்றியது. 'சர்... சர்ர்...சரட்' என்று தேய்த்துத் தேய்த்து நடக்கிற ஒலி காதில் விழுந்தது. 'யாரையா அது?' என்றேன். சத்தமே இல்லை. கொஞ்ச நேரமானதும், திரும்பவும் சத்தம் கேட்டது. இருட்டில் ஒருவருமே தெரியவில்லை. என் நண்பன் என்னுடன் ஒட்டிக் கொண்டு 'பிசாசு போலிருக்கடா' என்றான். 'போடா முட்டாள்!' என்றேன். நான் அவனைத்தான் சொன்னேன். ஆனால், அந்த அருவமோ, உருவமோ,

ஆளோ, தேளோ, பூதமோ, பிரேதமோ எதுவோ என்றே புரியாப் பரம் பொருள் தன்னைத்தான் நான் ஏசுகிறேன் என எண்ணி விட்டது போலும்! 'பெடலை' ஒரு மிதிமிதித்ததும் 'ஸ்டார்ட்' ஆகாமல் எடக்குப் பண்ணுகிற மோட்டார் ஸைக்கிள் உறுமிக் கர்ஜிக்குமே, அப்படி ஒரு கனைப்புச் சத்தம் எழுந்தது.

"என் நண்பன் அலறியே விட்டான்! 'ஏய்! ஐயா வீரசிங்கம் கூட வாறது தெரியலே!' என்றேன். 'ஏ மண்டுகம்! முன்னாலே போறது யாரடா அது! காது செவிடா?' என்று சப்தம் போட்டேன்."

யாரோ நின்று திரும்பிப் பார்ப்பது போலிருந்தது. அந்த இடத்தில் திடீரென ஒரு சுடர் கனன்றது. கொஞ்சம் பிரகாசமாய் மின்னியது பிறகு. 'அடடே, கொள்ளிவாய்ப் பேய்டா!' என்று ஓலமிட்டுக் கொண்டே ஓடத் தொடங்கினன்,—என் கூட வந்தவன்.—வந்த வழியே திரும்பி, ஊரைப் பார்த்துத்தான்! திரும்பிப் பார்த்தால் பேய் அடித்து விடுமோ என்று பயம் வேறு உந்த ஓட்டத்தின் வேகம் எவ்வியது!

"எனக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லை. எப்படியோ முன் சென்றேன். 'யாரடா அது, அயோக்கிய நாயே!' என்று கோபக் குரல் வெடித்ததும் எனக்குத் திக் திக் கென்றது. அடிக்கடி கேட்ட குரல் போலவும் இருந்தது. 'யாரடா அது?' என்ற உறுமல் மீண்டும். ஓடிப்போக முயலும் துணிச்சலைச் சிண்டைப் பிடித்து இழுத்து நிறுத்திக் கொண்டே 'ஐயா வீரசிங்கமாக்கும்!' என்றேன்.

சுடர் மீண்டும் பிரகாசித்தது. பிறகு தணிந்தது. 'நீவிர் யாரோ? திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளோ? அன்றி, நக்கீரனைக் காய வந்த நெற்றிக் கண் முதல்வனே? அல்லது, காமனைக் கடிந்த கடவுளேயோ?...' எல்லாம் ஒரே பேர்வழியைத் தான் குறிக்கும். ஆனாலும் நாடகங்களிலே பிராசம், சொல்லடுக்கு அது இது என்று உருள வேண்டுமென்று ஒருவர் இப்படி எழுதி யிருந்தார். அதை நான் மக்குஉருத் தட்டி வைத்தேன், சமயத்திலே உதவு மென்று. சரியான சந்தர்ப்பம் என்று இப்போ உதிர்த்து விட்டேன், நெருப்புப் பட்டதும் வெடித்துச் சிதறும் சீனிப் பட்டாஸ் போல!

"நான் எதிர்பாராதது நடந்தது. 'எலே திருட்டுக் கழுதை!' என்ற வசையுடன் வேகமாக விழுந்தது ஒரு அறை, பொறி கலங்கிப் போகும்படியாக. நல்லவேளை! சுற்றிவளைத்து முண்டாசு கட்டி யிருந்தேன்! அப்படி யிருந்தும், செவிட்டில் பட்ட அறையினலே காதுக்கிட்டே 'கிண்ண்'என்ற ரீங்காரமிருந்தது. அப்படி நான் செயலற்று நின்றது ஒரு கணம் தான். அடுத்த நிமிஷம், 'ஙிய்ய'ன்னு விட்டேன் பார்க்கணும் ஒரு அறை! அந்த ஆசாமியின் காதருகே பட்டது. ஏதோ தொப்பிமாதிரி கையிலே படவே, இன்னொரு அறை அதைக் காற்றிலே பறக்கும்படியாகத் தட்டிவிட்டது.

"டேடே ராஸ்கல்! இரு உன்னை..." என்று கூவியபடியே தொப்பியைப் பிடிக்க ஓடினர் அந்த ஆசாமி. நெருப்புத் துண்டு கீழே விழுந்தது. அது அவர் வாய்க்கும் கைக்குமாக ஊசலிட்ட சுருட்டுத்தான்! அவர் கனமான ஆசாமி என்பதையும்,

ஓட முடியாமல் ஓடுகிறார் என் பதையும் செருப்புக் காலோசை எடுத்துச் சொன்னது. அப்பொழுதுகூட 'நில்லுடா! ஓடிவிடாதே, இந்தா வாறேன்' என்று கத்தினார். அவர் எனக்காகத் தான் சொன்னார். என்றாலும் ஓடுகிற தொப்பிக்கு உபதேசிப்பது போலிருந்தது, அவர் ஓடிக்கொண்டே சொல்லுதிர்த்தது.

"இதற்குள் எதிரே வந்த யாரோ 'பேட்ரிலைட்'டை அழுத்தி வெளிச்சம் போட்டார். அந்த விளக்கு உமிழ்ந்த ஒளிப் பிரவாகத்திலே, குனிந்தெடுத்துச் சிவப்புத் தொப்பியைத் தட்டி நின்ற ஆசாமி யாரென்று புலப்பட்டது. 'ஐயோ! ஏட்டய்யா அல்லவா!' என்று கூச்சலிட்டு, விழுந்தடித்து ஓடினேன். டவுனைப் பார்த்து அல்ல. அந்தப் பக்கம் தானே 'ஏட்டு நாயனு நின்றார். நான் தச்சநல்லூர் பக்கம் போற பாதையாக ஓட்டம் எடுத்தேன்......"

நாங்கள் சிரித்தோம். 'இவ்வளவு தானு, வீரசிங்கம் பாச்சா எல்லாம்! விழுந்தடித்து ஓடிவிட்டு வீரசிங்கம் என்ன வாழுது!' என்றேன்.

அவன் சட்டென்று பதில் சொன்னான்: "தம்பி, உனக்குத் தெரியாது! எதிரி கையில் அகப்படாமல் அப்படி வெற்றிகரமாக வாபஸ் வாங்குவதுதான் திறமையான காரியம். போலா யுத்தத்திலே இப்படிப் பின்வாங்கின வீரர்கள்தான் மௌஸடைந்தார்கள். அது உனக்கு எங்கே தெரியும்! சின்னப் பையன்!"

"ஆமாமா, உனக்குத்தான் ரொம்பத் தெரியும்" என்றேன்.

"பின்னே! இவரு யாரு? வீரசிங்கமில்லே?" என்று எக்களித்தான் அவன்.

'கபக்' கென்ற சிறு ஒலியுடன் உயிரை விட்டது விளக்கு. அவன் அலறிப் புடைத்துத் திடீரென்று—கனவு கண்டுவிட்டு தெளிவில்லாக் குரலில் கத்துகிறவன் போல—'ஊ வூ வூ...ஓய்' என்று ஊளையிட்டான். எங்களுக்குக் கூடப் பயமாகத்தா னிருந்தது. ஏதோ 'உய்ய்...உய்ய்' எனச் சிறகடித்துத் திரிந்தது.

'ஏ வீரசிங்கம்! ஏ, ஏ!' என்று கத்தினோம். அந்த இடம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி மாதிரி மாறிவிட்டது! திடீரென என் . காதருகிலும் 'நொய்ய்' என்று ஓசை பட்டு, பின் மூஞ்சியில் ஏதோ அடிப்பது போல் வந்து விழுவதும் தெரிந்தது. 'ஓ' எனக் கதறிவிட்டேன் நான்.

அதற்குள் தீக்குச்சி கிழித்து விளக் கேற்றினன் அவன். கோவில் பாச்சைப் பூச்சி ஒன்று 'விர்' ரென்று சிறகடித்து அங்குமிங்கும் ஓடி சுவரில் அமர்ந்தது.

"சே! சுத்தப் பயந்தாங் கொள்ளியாக இருக்கியே நீ! இதுக்கா இப்படி அலறினே! போ... என்ன இருந்தாலும், ஐயா வீரசிங்கம் கூட இல்லாமலே போய் விட்டேன்" என்று மீசையில்—மீசை இல்லாததால், மீசை இருக்க வேண்டிய இடத்தில்—கை போட்டுத் தடவினன் அந்தச் சூரப்புலி!

✻

துயர்கள், என் சட்டை மாற்றங்களில் ஒன்று. காயம் பட்டவனை, எப்படியிருக்கிற தென்று நான் கேட்பதில்லை, நானே காயம்பட்டவனுகி விடுகிறேன்.

—வால்ட் விட்மன்

# பரத்துவாசர் விருந்து

●

வால்மீகஞ்சி

"ஹாஹா, ஹூஹூ, விச்வாவசு முதலிய தேவ கந்தர்வர்களையும், தேவ ஜாதியில் பிறந்த அப்சரஸ்களையும், கந்தர்வ ஜாதியில் பிறந்த அப்சரஸ்களையும் அழைக்கிறேன். தேவப் பெண்களே பழங்களாக உருவம் எடுத்து இங்கே வரும்படி அழைக்கிறேன். பலவிதக் குடி வகைகளையும், மாமிசங்களையும் சந்திரன் ஏராளமாகச் சித்தஞ் செய்யட்டும்" என்று பரத்துவாசர் மந்திரங்களைச் சபித்தார்.

ஐந்து யோசனை தூரம் வரையில், பூமி மேடு பள்ளம் இல்லாமல் சமமாகச் செய்யப்பட்டு, இந்திர நீலம், வைடூரியம் முதலிய ரத்தினங்களால் இழைக்கப்பட்டதுபோல் மிருதுவான இளம் புற்களால் மூடப்பட்டிருந்தது. அங்கே பில்வம், பலா, மா, நெல்லி முதலிய மரங்களும் தோன்றின. உத்தரகுரு தேசத்திலிருந்து, தேவதைகள் அனுபவிக்கத் தகுந்த பதார்த்தங்களுடன் சைத்திர ரதம் என்ற வனம் வந்தது. கரையில் அழகான மரங்களுடன் நதிகள் வந்தன. நான்கு பக்கத்திலும் தாழ்வாரம் போட்டு நடுவில் திறந்த இடமுள்ள வீடுகளும், யானை குதிரைகளைக் கட்டும் இடங்களும், சகல அலங்காரங்களுமுள்ள உப்பரிகைகளும், வீடுகளும், அரண்மனைகளும் உண்டாயின. அவை தோரணங்களாலும், நேர்த்தியான மாலைகளாலும், திவ்யமான பரிமளங்களாலும், படுக்கைகள், கட்டில்கள், ஆசனங்கள் சிரேஷ்டமான விரிப்புகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பிறகு, பிரம்மாவால் அனுப்பப்பட்ட இருபது ஆயிரம் அப்சரஸ்கள் திவ்விய அலங்காரங்களுடன் அங்கே தோன்றினார்கள். தங்கம், முத்து, பவளம், ரத்தினம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட இருபதாயிரம் அப்சரஸ்கள் குபேரனால் அனுப்பப்பட்டு அங்கே வந்தார்கள். இந்தக் கந்தர்வ லோகத்து அப்சரஸ்களின் வசத்தில் ஒருவன் அகப்பட்டால், பைத்தியம் பிடித்தவனைப்போல் ஆவான் என்று வேதம் சொல்கிறது. இந்திரனுடைய தோட்டத்தில் இருக்கும் இருபதாயிரம் அப்சரஸ்கள் வந்தார்கள். கந்தர்வ ராஜாக்கள் வந்தார்கள். தேவலோகத்திலும், சைத்திர ரதம் என்ற வனத்திலுமுள்ள சகல பதார்த்தங்களும் பரத்துவாசருடைய மகிமையால் பிரயாகையில் வந்து தோன்றின. பில்வ மரங்கள் மிருதங்கம் வாசித்தன; தானி மரங்கள் தாளம்போட்டன; அரசமரங்கள் ஆடின; சரசம், மஞ்சாடி, பனை, புன்னை என்ற மரங்கள் கூனர்களாயும், குள்ளர்களாயும் ரூபம் எடுத்தன. சிம்சுபா, நெல்லி, நாவல் முதலிய காட்டு மரங்களும், ஜாதிமல்லிகை முதலிய காட்டுக் கொடிகளும் பெண்களின் ரூபம் எடுத்து, "இஷ்டப்படி எங்களை அனுபவியுங்கள்! மதுபானத்தில் பிரியம் உள்ளவர்களே! இந்தத் திவ்வியமான பானங்களை குடியுங்கள். பசியால் வருந்துகிறவர்

சாப்பாட்டுக் கஷ்டம் தீர வேண்டுமா? முந்தி ஒரு சமயம் சாப்பாட்டுக் கஷ்டம் எப்படித் தீர்ந்தது, தெரியுமா? இதைப் படித்துப் பல நாளைக்கு வயிற்றுக்கு உணவு தேடிக்கொள்ள இப்போதே மூந்துங்கள்!

களே! இந்தப் பாயசத்தையும், சுத்தமான மாமிசங்களையும் புசியுங்கள்' என்றன.

ஒவ்வொரு புருஷனையும் ஏழெட்டுப் பெண்கள் கைப்பற்றி, தைலங்களைத் தேய்த்து, நதிகளில் நீராட்டி, திவ்யமான வஸ்திராபரணங்களால் அலங்கரித்து, கால்களைப் பிடித்துவிட்டு, சுரா முதலிய பானங்களை ரகசியமாகக் குடிக்கச் செய்தார்கள். காலாட்களும், யானைக்காரர்களும், குதிரைக்காரர்களும் தலைவர்களுக்குக் கட்டுப்படாமல் அங்கே நடந்த வைபவங்களால் தலை தெரியாமல் கூச்சலிட்டார்கள். சிலர், இதைத் தவிர சொர்க்கம் என்பது வேறில்லை என்றார்கள். சிலர், காரண மில்லாமல் சிரித்துக் கொண்டே யிருந்தார்கள். சிலர் பாடினார்கள்; சிலர் கூத்தாடினார்கள்; சிலர் மாலைகளைத் தரித்துக்கொண்டு, அங்குமிங்கும் ஓடினார்கள்.

வெளுப்பு வஸ்திரம் இல்லாதவனும், பசித்தவனும், வாடினவனும் புழுதிபடிந்த தலைமயிரையுடையவனும் அங்கே ஒருவனும் இல்லை. எண்ணிறந்த மாலைகளால் அலங்கரிக்கப் பட்ட வெண்மையான அன்னக் குவியல்களும், ஆட்டு மாமிசங்களும், பன்றி மாமிசங்களும், சிரேஷ்டமான வெஞ்சனங்களும் (ஊறுகாய்கள்), சர்க்கரையிலும் தேனிலும் பக்குவம் செய்யப்பட்ட பழங்களும் (தற்காலத்தில் இவை மேலை நாட்டாரால் நமது தேசத்துக்கு அனுப்பப் பட்டு நவ நாகரிகப் பிரபுக்களிடத்திலிருந்து லட்சக் கணக்கான பணத்தைப் பறிக்கிறதைக் கவனிக்கவும்), விசித்திரமாகச் சமைக்கப் பட்ட துவரை உளுந்து, கடலை, பயறு முதலிய பருப்புகளும், வாசனை யுள்ள அனேக ரசங்களும் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து எல்லோரும் ஆச்சரிய மடைந்தார்கள். அந்த வனத்தின் பக்கங்களில் பாயசத்தால் நிரம்பிய பல கிணறுகள் இருந்தன. அங்கிருந்த பசுக்கள் வேண்டிய வரையில் பாலைக் கொடுத்தன. மரங்களிலிருந்து தேன் வெள்ளமாக ஓடிற்று.

ஓடைகள், மைரேயம் (ஒரு வகை மது) என்ற பானத்தால் தளும்பின. கரைகளில், விசித்திரமாகப் பக்குவம் செய்யப்பட்ட மான், மயில், கோழி முதலிய ஜந்துக்களின் மாமிசங்கள் பானைகளில் உஷ்ணமாகக் குன்றுகளைப்போல் வைக்கப்பட் டிருந்தன. (அக்காலத்திலும் மண் பாத்திரங்களே சுகாதாரத்திற்குச் சிரேஷ்ட மென்றும், செம்பு, பித்தளை முதலிய பாத்திரங்கள் அவ்வளவு சிலாக்கியம் இல்லை யென்றும் கருதப்பட்டிருக்க வேண்டும்.) அன்னப் பாத்திரங்களும் வெஞ்சனப் பாத்திரங்களும் போஜனப் பாத்திரங்களும் தங்கத்தால் செய்யப்பட்டுக் கணக்கில்லாமல் கிடந்தன. கோடி கோடி தாளிகளும், குடங்களும், கிண்டிகளும் தயிரால் நிறைந்திருந்தன. கடைந்து ஒரு ஜாமமானதும், விளாம்பழத்தின் வாசனையோடு கூடியதுமான மோரில், சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலக்காய், லவங்கம், தக்கோலம், சம்பகப்பூ, சர்க்கரை, இஞ்சி முதலியவைகளைக் கலந்து விசித்திரமாய்ப் பக்குவம் செய்த ரசாலம் என்ற பதார்த்தத்தால் பல மடுக்கள் நிறைந்திருந்தன (தற்காலத்தில் இதைப்போன்ற ஒரு பக்குவம் பாக சாஸ்திர நிபுணர்களால் செய்யப்படுகிறது.) பல மடுக்கள் தயிரால் நிறைந்திருந்தன;

பல மடுக்கள் பாயசத்தால் நிறைந்திருந்தன; பல மடுக்கள் கடைந்த மோரால் நிறைந்திருந்தன. அவைகளுக்குச் சமீபத்தில் சர்க்கரை கலந்த கோதுமைப் பயறு முதலியவைகளால் செய்யப்பட்ட அப்பங்கள் வெஞ்சனத்திற்காக வைக்கப்பட்டிருந்தன. நெல்லிக்காய் விழுதும், வாசனைப் பொடிகளும், கஷாயங்களும், தைலங்களும், பெரிய அண்டாக்களில் வெந்நீரும் குளிப்பதற்காக ஆறுகளின் துறைகளில் வைக்கப்பட்டிருந்தன. பல்தேய்ப்பதற்காகச் சுத்தமான மேர்மல்லிக் குச்சிகளும், குளித்த பிறகு அலங்கரித்துக் கொள்வதற்காகச் சம்புடங்களில் சந்தனக் குழம்பும், பிரகாசமுள்ள கண்ணடிகளும், விலையற்ற உடுப்புகளும், பாதக் குறடுகளும், செருப்புகளும், ஜோடுகளும், மைச் சிமிழ்களும், தலைமயிர், மீசை, தாடிகளை வாருவதற்குச் சீப்புகளும், யுத்த வீரர்கள் அலங்காரமாய்த் தரிக்கும் ஆயுதங்களும், வில்லுகளும், கவசங்களும், படுக்கைகளும், ஆசனங்களும்கணக்கின்றி வைக்கப்பட்டிருந்தன யானை குதிரை முதலிய மிருகங்கள், தின்னும் பொழுது தாகம் தீர்த்துக்கொள்வதற்குத் தூய நீரால் நிறைந்த பல மடுக்கள் எளிதாக இறங்கும்படி கட்டப்பட்ட துறைகளுடன் காணப்பட்டன. தாமரை ஓடைகளும் செங்கழுநீர் ஓடைகளும் வானத்தைப் போல் தெளிந்து, சுவை பெற்றுள்ள தண்ணீரால் நிறைந்து சுகமாகக் குளிக்கக் கூடியவைகளாயிருந்தன. மிருகங்களின் தீனிக்காக, வைடூரியங்களைப் போல் பிரகாசிக்கும் மென்மையாயும் சுவையாயுமுள்ள இளம் புல் தரைகள் அங்கே ஏற்பட்டிருந்தன.

கனவில் கண்ட பொருள்களைப் போல், அற்புதமாயும், ஆச்சரியகரமாயும், மனத்தால் நினைக்க முடியாததாயும், அவரவர்களுடைய இஷ்டத்துக்குத் தகுந்தபடியும் அமைக்கப்பட்ட இந்த அபூர்வச் சாமான்கள் பரதனுக்கு விருந்து செய்வதற்காகப் பரத்துவாசருடைய அளவற்ற தபோ மகிமையால் ஒரு கணத்தில் சம்பாதிக்கப்பட்டதைப் பார்த்து எல்லோரும் சொல்லமுடியாத ஆச்சரியத்தை அடைந்தார்கள். ஆனால், இந்த விருந்து இந்திரஜால வித்தையால் உண்டாக்கப்பட்ட வஸ்துக்களைப்போல் பிறகு மறைந்து போகவில்லை. அன்ன பானங்களால் திருப்தி யடைந்தவர்களும், மயங்கினவர்களும், திவ்விய சந்தனங்களாலும் வாசனைகளாலும் பூசப்பட்டவர்களும் அந்தச் சுகங்களை அனுபவித்த காலத்தில் உண்டான ஆனந்தத்தை விருந்து முடிந்த பிறகும் அனுபவித்தார்கள்.

## 'போட்டோ'ப் பரிசு

பரிசுக்குப் படம் அனுப்பிய அன்பர்களனைவருக்கும் வணக்கம். 83 படங்கள் அனுப்பிய கோவை அன்பருடைய படங்கள் பொருள் நயம் பெற்றிருக்கின்றன. பொருட் சேர்க்கை பொருந்த அமைந்துள்ளது. காட்சிக் கோணத்தின் கவர்ச்சியழுத்தம் இன்னும் சிறப்படையலாம். ஏனைய அன்பர்களும் நன்ருய் முயன்றிருக்கிருர்கள். நாம் எதிர்பார்ப்பதைவிடப் பேரளவில் அன்பர்கள் இந்த விஷயத்தில் சிரத்தை கொள்வார்கள் என்ற நம்பிக்கை உண்டாகிறது. அடுத்தடுத்த மாதங்களில் முதல் பரிசு வழங்க முடியும்படி செய்வது உங்கள் பொறுப்பு. —ஆசிரியர், சக்தி




ஒவ்வொரு உடையிலும் சீக்கிரம் மலினமாகும் பாகங்கள் உண்டு—அந்த பாகங்களே சொற்பமாக சோப்பைத் தேய்த்து, தண்ணீரில் நனைத்து அடித்துத் துவைப்பதால் அதிகமாகக் கெட்டுப்போகக் கூடினவை.

உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்து

அடித்துத் துவைப்பதனுலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.

ஸன்லைட் சோப்பின் ஏராளமான சுயமாக இயல்கிற நுரையை நனைந்த துணியிடையே புகுத்திக் கசக்கி, பிறகு அலசி சுத்தம் செய்தால், துணி மிக தூய்மையாகவும், வெண்மையாகவு மாகிறது. . . அத்துடன் உங்கள் ஆடைகளுக்கு, இச் சுத்தமான சோப்பை பயன் படுத்துவோருடைய இஷ்ட போகமான நோகையை யொத்த மிருது தன்மையும் ஏற்படுகிறது. ஸன்லைட் உங்கள் துணிகளுக்கும், அவையின் சாயங்களுக்கும் குணமளிப்பதோடு, உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக் கொள்ளுகிறது.




# ஸன்லைட் சோப்

S.79-50 TM LEVER BROTHERS (INDIA) LIMITED


IODISAL
The best
BLOOD PURIFIER
MANUFACTURERS
SOUTHINDIAN MFG Co
MADURA
அயோடிசால்
மிகச் சிறந்த
ரத்த சுத்தி மருந்து
இது திரேகத்தில் உஷ்ணம் அதி
கரித்து அதனால் ஏற்படும் ரோகங்களை
குணப்படுத்தி திரேகத்திற்கு
ஆரோக்கியத்தை கொடுக்கும்.
ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தி
யையும் உண்டாக்கும்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
தயாரிப்பவர்கள் :
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை


குழந்தைகளுக்கு
முக்கியமானது
பேபி கிரைப்
குழந்தைக்கு
ஆரோக்கியமளிப்பது
BABY GRIPE
குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு,
வயிற்றுப் பொருமல், வயிற்று வலி,
அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்
போது ஏற்படும் வயிற்றுப்போக்கு,
முதலிய சகல வியாதிகளையும் போக்கி
நல்ல ஆரோக்கியத்தையும் தரும்
சிறந்த திராவகம்
தயாரிப்பவர்கள் :
தி சௌத் இந்தியன மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

# ஆசிரியர் அவதி!

ஆர். பங்காருஸ்வாமி

இந்தியாவில் புத்தகத் தொழில் என்பது, நிரந்தரமான ஏமாற்றத்தையும் இன்னலையும் அளிக்கும் ஒரு சாபக் கேடாகவே இருந்து வருகிறது. அதிலிருக்கும் சிறிதளவு உல்லாசத் தன்மை கூட, அதனுடன் கூடவே யிருக்கும் சிரமங்களில் மறைந்து விடுகிறது.

இந்தியா அடிமைப் பட்டுத் தன் சொந்த நாகரிகத்தை இழந்து நிற்பதே இந் நிலைமைக்கு முதற் காரணம். அத்துடன், இந்தியாவைப் போன்ற ஏழை நாடு வயிற்றுக்கு உணவு கிடைத்த பின்னர் தானே அறிவுக்கு உணவு தேடும்? இதைத் தவிர, இன்னொரு காரணமும் இருக்கிறது. இந்திய மக்களிற் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களிலும், புத்தகங்களைப் பணம் கொடுத்து வாங்கும் அளவுக்கு இலக்கிய ருசி யுடையவர்கள், மிகக் குறைவு.

நம்முடைய அடிமைத்தனம் புத்தகத் தொழிலை மட்டு மின்றி வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் பாதித்து வருகிறது. படிக்கத் தெரிந்தவர்களில் இலக்கிய ருசி யுடையவர்கள் 25 சதவிகிதம் என்று வைத்துக் கொண்டாலும், பத்து லட்சம் வாசகர்களுக்குக் குறைவில்லை. தொழில் சிறப்பாக நடக்க இந்த எண்ணிக்கை போதுமானது. ஆனால், புத்தகத் தொழிலின் இன்றைய நிலைமையைக் கவனிக்கும்போது, அதன் முன்னேற்றத்துக்கு வேறு தடைகளும் இருக்கின்றன என்றே தோன்றுகிறது.

இந்த நிலைமைக்கு முக்கியக் காரணம் ஆர்வ மின்மைதான். ஆசிரியர், பிரசுரகர்த்தர், வியாபாரி இவர்களில் யாருக்குமே இத் தொழிலில் போதிய ஊக்கம் கிடையாது. அப்படி யிருந்தும் இந்தப் பிழைப்பு எப்படியோ நடந்து கொண்டுதான் இருக்கிறது.

முதலில் ஆசிரியர்களை எடுத்துக் கொள்வோம். 'பிறப்பிலேயே ஆசிரியர்கள்' எனப்படுபவர்கள் மிகமிகச் சிறு பான்மையினர். ஆசிரியராவதற்கு இரண்டொரு யோக்கியதைகள் குறைவாக இருக்கும் வேறு சிலர், ஆசிரியர்களாவதற்கு முயலுகிறார்கள். ஆனால், 'ஆசிரியர்' என்கிற பெயரின் கீழ்த் திணிக்கப் படுபவர்களே பெரும் பாலோர்.

உதாரணமாக, பக்கத்திற்கு இத்தனை அணா என்கிற ஒப்பந்தத்தின்மேல், 'நோட்ஸ்' எழுதித் தள்ளும் கூலி எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். இந்தக் குப்பையை ஏதோ கடனுக்கென்று பிரசுரகர்கள் வெளியிடுகிறார்கள். 'ஆர்டர்' வருகிறபோது வரட்டும் என்று கையைக் கட்டிக் கொண்டு புத்தக வியாபாரி உட்கார்ந்து இருக்கிறான். இதில் யாருக்கும் ஆர்வம் கிடையாது; பெருமை கிடையாது; உழைப்புக்குத் தகுந்த கூலி கிடைப்பதில்லை.

ஆசிரியரும் பதிப்பாளரும் கணவனும் மனைவியும் போல் ஒத்துழைக்க வேண்டும் என்கிறார் கட்டுரையாளர். மெய்தான், ஆனால், ரதி - மதன் பாவத்தை விடக் கீரி - பாம்பு பாவந்தான் இன்று மிகுந்து விட்டது. உறவு முறை இருந்த வழி சொல்லும் இந்தக் கட்டுரை, மைசிந்தியாவில் வெளிவந்த ஒரு கட்டுரையின் சாரம்.

அப்புறம், 'காதல்' என்ற தலைப்பின் கீழ், இரவல் விஷயங்களை, சொந்த 'நடை'யில் எழுதித் தள்ளும் ஆசாமிகள் இருக்கிறார்கள். குழந்தைப் புத்தக ஆசிரியர்கள் வேறு இருக்கிறார்கள். அனேகமாக இவர்கள், குறைந்த சம்பளம் பெறும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களாயிருப்பார்கள். இவர்களுடைய தேவைகளை அறிந்த பிரசுரகர்கள், அந்தப் புத்தகங்களை 'அரைக் காசு'க்கு வாங்கி, நிறைய லாபம் சம்பாதிப்பார்கள். ஆகையினால் இந்த ஆசிரியர்கள் தாங்களே புத்தகங்களை மகா மட்டமாகப் பிரசுரித்து வைப்பார்கள். எப்படியாவது விற்றால் போதும் என்னும் நினைவில், அதைப் பாட புத்தகமாக அங்கீகரிக்கும்படி யாரையெல்லாமோ கெஞ்சுவார்கள்.

இவற்றைத் தவிர, 'பொது அறிவு' என்கிற உதவாக்கரைப் புத்தகங்களும் வெளியாகின்றன. கடைசியாகப் 'பணக்கார எழுத்தாளர்கள்' இருக்கிறார்கள். வரும்படியில் இவர்களுக்குக் கவலையில்லை. தாங்களே சிறந்த முறையில் புத்தகத்தைப் பிரசுரித்துத் தெரிந்தவர்களுக்கு இனமாகவே வழங்கி விடுகிறார்கள்!

தங்களைப் பற்றி ஆசிரியர்கள் கீழ்க்கண்டபடி எண்ணுவதாகப் பிரசுரகர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களாம்!—

> "நன்றியற்ற, சுயநலக்காரக் கும்பலைச் சேர்ந்த இந்த ஆசிரியர்கள், தங்களுடைய வீட்டுக்குப் பாரமாயும், பிரசுரகர்களுக்குக் கழுத்தறுப்பாகவும் இருக்கிறார்கள். பிரசுரகர்களை ஷைலக் போன்ற கொலைபாதகக் கருமிகளாக இவர்கள் கருதுகிறார்கள். தங்களுக்குப் பெயர் வருவதற்குத் தடையாகப் பிரசுரகர்கள் இருப்பதாக எண்ணுகிறார்கள்!"
>
> — அமெரிக்கன் புக்மான்

அதிகமாக மிகைப் படுத்தப்பட்டிருந்தாலும் கூட, இதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் இருக்கிறது. அனேக ஆசிரியர்கள் கஷ்டங்களைத் தாங்களே உண்டு பண்ணிக் கொள்ளுகின்றனர்.

**பிரசுரகர்த்தர்கள் விஷயமும்** இப்படியே இருக்கிறது. கையில் கொஞ்சம் பணமும், சிறிது செல்வாக்கும் மட்டும் இருந்து விட்டால், யார் வேண்டுமானாலும் பிரசுரகர்த்தர்களாகி விடலாம் என்னும் நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. பரம்பரைப் பிரசுரகர்கள், வாரிசுப் பிரசுரகர்கள் என்று பல தலைமுறைகளாகப் பிரசுரத் தொழிலை நடத்தி வருபவர்கள் வேறு இருக்கிறார்கள். பிரசுர உரிமை என்றால் என்னவென்று தெரியாதவர்கள், தாங்களே பிரசுரகர், ஏஜண்டு, வியாபாரி எல்லாமாகக் காட்சியளிப்பவர்கள், புத்தக ஆசிரியர் தம்மிடம் சிறிது குமாஸ்தா வேலை பார்க்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள், இன்னும் எத்தனையோ ரகப் பிரசுரகர்கள் இருக்கிறார்கள்.

**ஆசிரியர்கள்,** தங்களுக்குள் ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டு, பிரசுரகர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் தனி உரிமைகளை வரையறுத்து விட்டால், இத்துறையில் மேற்கொண்டு கஷ்டமெதுவும் இருக்காது.

புத்தகத்தின் பிரசுர உரிமை எப்போதும் ஆசிரியர்களுக்குத்தான் உண்டு. அவ்வுரிமையை அவர்களுடைய இஷ்டப்படி எந்த விதத்திலும் அவர்கள் உபயோகிக்கலாம். இந்த உரிமையை உணராமல், பிரசுர உரிமையை வெகு தாராளமாகப்

பிரசுரகனிடம் விற்று விடும் ஆசிரியனால் அவனுடைய வர்க்கத்திற்கே தீங்கு விளைகிறது. பத்திரிகையில் வெளியாகும் தன் தொடர் கதையைப் புத்தகமாகப் பிரசுரித்துக் கொள்ளும் உரிமையோடு ஆசிரியனுக்கு எவ்வளவோ கடமைகளும் இருக்கின்றன. யோக்கியமான வழியில் தன் வேலையைச் செய்ய வேண்டியது அவனுடைய முதல் கடமை. லட்சியத்துடன்தான் தொழில் நடத்த வேண்டும் என்கிற எண்ணம் இந்தியப் பிரசுரகர்களுக்கு இருக்குமாகில், அவர்களும் கீழ்க்கண்ட அம்சங்களைக் கவனிக்க வேண்டும் :

1. சம்பளம் கொடுத்து ஒரு வாசகனை அமர்த்திக் கொள்ள வேண்டும். பிரசுர விஷயங்களில் யோசனை கூற இந்த மாதிரி ஒரு நண்பன் இருப்பது அவசியம்.

2. ஆசிரியர்களுக்குச் சேர வேண்டிய பணத்தை மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாக ஒழுங்காகக் கொடுத்துவர வேண்டும்.

3. தொழில் முறை சம்பந்தமான கடிதங்களைக் குப்பைக் கூடையில் போடாமல், காலாகாலத்தில் பதில் எழுத வேண்டும்.

4. 'ப்ரூப்' பார்க்கவும், 'எடுத்து எழுத'வும் சரியான நபர்களை வைத்துக் கொள்ள வேண்டும்.

5. ஆசிரியர்கள் தங்களுடைய தொழிலுக்கு இன்றியமையாதவர்கள் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு அவர்களை மரியாதையாக நடத்த வேண்டும்.

புத்தகத் தொழில் என்னும் பொழுது, அச்சிடுபவர்கள், 'ப்ரூப் ரீடர்'கள், வியாபாரிகள் ஆகியோரும் இதற்குள் அடங்குகிறார்கள். இவர்களுக்குள் புத்தக வியாபாரிகளின் பாடுதான் யோகம். ஆசிரியரே தன் புத்தகத்திற்குப் பத்துச் சதவிகித 'ராயல்ட்டி' பெறும்போது, இவர்கள் முப்பத்து மூன்று சதவிகிதத்திற்குக் குறையாத 'கமிஷன்' பெறுகிறார்கள். ஆனால், இவர்கள் மேலை நாட்டினரைப் போல, தகுந்த விளம்பரத்துடன் தங்கள் தொழிலை நடத்துவார்களானால், வியாபாரம் இன்னும் பெருக இடமுண்டு. பொது வாசகசாலைகள் அதிகம் ஏற்பட்டாலும் இவர்களுடைய தொழில் விருத்தியடையலாம்.

இந்த யுத்தக் காலத்தில் அனேக பிரசுர ஸ்தாபனங்கள் புதிதாகக் கிளம்பியிருக்கின்றன. இவற்றுள் சில, புத்தகத் தொழிலின் உள் நுட்பங்களைத் தெரிந்து கொண்டு அவற்றுக் கேற்ப நடந்து கொள்ளுகின்றன. இது போதாது; புத்தகங்களை வெளியிடும் முறையிலும், ஆசிரியர்களுடன் கொண்டிருக்கும் தொடர்பிலும் இன்னும் எவ்வளவோ அபிவிருத்தி ஏற்பட வேண்டும். இந்தத் தொழிலில் அங்குமிங்குமாகத் தலை காட்டும் மதியூகமும் தொழில் நுட்பமும் எங்கும் பரவ வேண்டும்.

"ஆசிரியர்களுக்கும் பிரசுரகர்களுக்குமிடையே உள்ள தொடர்பு ஒரு மகிழ்ச்சி நிறைந்த விவாகமாக இருக்க வேண்டும்" என்று சில காலத்திற்கு முன்னர் ஒரு பிரபல பிரிட்டிஷ் பிரசுர ஸ்தாபனம் கூறிற்று. ஆனால், உண்மையில் இன்று விவாகங்களைக் காட்டிலும் விவாக ரத்துக்களே அதிகம் நடக்கின்றன! பரஸ்பர நல்லெண்ணமொன்றே இந் நிலைமையை மாற்றி, புதிய சகாப்தத்துக்கு அடிகோலும்.

# கோடைக் காலத்தில்

●

**வி. ஞானி**

வெயில் காலப் பிரச்னை எது? சிலர் நினைப்பது போல், உஷ்ணம் உடலினுள் செல்லாமல் அதை எப்படி வெளியிலேயே நிறுத்தி வைப்பது, என்பதல்ல. உஷ்ணத்தை உடலிலிருந்து எப்படி வெளியேற்றுவது என்பது தான், கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

சரீரத்தின் உஷ்ணம் கிட்டத்தட்ட 98·6 டிகிரி பாரன் ஹீட் இருக்கும். காற்றின் உஷ்ணம் அதை விட அதிகரித்தாலொழிய, நாம் காற்றிலிருந்து உஷ்ணத்தை உள்ளே ஏற்றுக்கொள்ளுவதில்லை.

ஏனென்றால், தண்ணீரைப் போலவே, வெப்பமானது மேட்டிலிருந்து பள்ளத்திற்குப் பாயக் கூடியது. அது, அதிகமான உஷ்ணமுள்ள இடத்திலிருந்து குறைவான உஷ்ணமுள்ள இடத்திற்குச் செல்லுகிறது. உஷ்ணம் குறையக் குறைய, அது பாயும் வேகமும் அதிகரித்துக் கொண்டே போகும். இது தான் சங்கடமாய் விடுகிறது. ஏனெனில், வெளியே உஷ்ணம் என்ன மாதிரியிருந்த போதிலும், நாம் நம் உடலின் உள் உஷ்ணத்தை இயல்பான அளவாகிய 98·6 டிகிரியில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும் உடம்பிற்கும் காற்றுக்கும் இடையில் மெல்லிய தோலும், சிற்சில உடைகளுமே இருக்கின்றன. வெளியே குளிர்ச்சியாக இருந்தால், நாம் உண்ணும் உணவிலிருந்து உற்பத்தியாகும் உஷ்ணத்தை வெளியேற்றுவதில் நமக்கு ஒரு சிரமமுமில்லை. ஏனெனில், உடலிலிருந்து உஷ்ணம் தானாக வெகு வேகமாய் ஓடுகிறது. மேற்கொண்டு உடை போர்த்துத் தடுக்க வேண்டிய அளவிற்குக்கூட அதன் வேகம் வந்துவிடுகிறது. ஆனால், காற்றின் உஷ்ணம் நம் சரீரத்தின் இயல்பான உஷ்ணத்தை ஒட்டி அதிகரித்து விட்டால், உடம்பிலிருந்து தப்பிச் செல்லும் வெப்பத்தின் ஓட்டம் வேகத்தில் குறைகிறது. கடைசியில், உஷ்ணம் 99 டிகிரிக்கு வந்தால், அந்த ஓட்டம் வெளியிலிருந்து நம் மேல் திரும்பி விடுகிறது.

மழைக் காலம் போனபின் நம் வீட்டிலுள்ள கனல் உலையை (மேலை நாட்டில் குளிர் காய்வதற்காக வைத்திருப்பார்கள்) மூடி விடுகிறோம். ஆனால், நம் உடலுக்குள் உள்ள உலையை மூடி விட முடியாது. ஏனென்றால், சகல வேலைகளும் நின்றுபோகும். நமது அக உலை, உஷ்ண மூட்டும் உலையாக இருப்பதைப் போலவே, சக்தியளிக்கும் யந்திர சாலையாகவும் வேலை செய்கிறது. அந்த யந்திரத்தை நாம் இரவும் பகலும் ஓடிக்கொண்டிருக்கும்படி செய்யவேண்டியிருக்கிறது. அதற்கு ஓரளவு 'விறகு' (உணவு) தேவையாக இருக்கிறது. சந்தேகமன்னியில கோடைக் காலத்தில் உஷ்ணமூட்டும் யந்திரமும் வேலை செய்து கொண்டு இருப்பதால் நமக்கு அவ்வளவு தேவையில்லாத போதிலும், ஓரளவு 'விறகு' தேவைதான்.

உடலுக்கு வெப்பம் தேவைதான். ஆனால் அதற்கு ஓர் எல்லை யுண்டு. அதை எப்படி ஒழுங்குபடுத்துவது? ஸ்லாசன் எழுதிய இந்தக் கட்டுரையை ஸ்ரீ கு. ராஜாராம் நன்றாய் மொழிபெயர்த்திருக்கிறார்.

அதிக வேலையில்லாத ஒரு மனிதன், சும்மா உட்கார்ந்து எழுந்திருக்கும் ஒரு மனிதன், ஒரு நாளைக்கு 2,400 கனலிகள் அளவு உணவு உட்கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் ஏதாவது கடின வேலை செய்வானுனல், மேற்கொண்டு 500 அல்லது 1000 கனலிகள் தேவையாயிருக்கும். எனவே, அவன் சோம்பேறித்தனத்தில் காலங் கழித்த போதிலும், மணிக்குச் சராசரி 100 கனலிகள் வீதம் உஷ்ணத்தை வெளியேற்றிக் கொண்டிருக்க வேண்டும். 100 கனலியானது, நான்கு சாதாரண மின்சார விளக்குகள் வெளியிடும் உஷ்ணத்தின் அளவிற்குக் கிட்டத்தட்டச் சமமாயிருக்கும்.

இப்பொழுது, இந்த வெப்பம் இரண்டு விதங்களில் வெளியேற்றப் படலாம்; அது தானுக ஓடி விடக் கூடும் அல்லது எடுத்துச் செல்லப்படக் கூடும்.

சுற்றுப் புறத்திலுள்ள காற்றின் உஷ்ணம், நம் உடம்பின் உஷ்ணத்தைவிட வேண்டிய அளவு குறைந்திருந்து, நம் உடலிலும் அதிகப்படியான உடைகள் இல்லாதிருந்தால், வெப்பம் தானுக ஓடி விடும்.

அது தண்ணீரால் எடுத்துச் செல்லப் படலாம். நீரானது அதிகப் படியான உஷ்ணத்தை எடுத்துச் செல்லக் கூடியது. தான் எடுத்துச் செல்வதைக் காட்டிக் கொள்ளாமல், உலகில் மற்ற எதனையும் விட அதிக உஷ்ணத்தை எடுத்துச் செல்லக்கூடியது நீர். ஒரு குவார்ட் (இரண்டு 'பைன்ட்' அல்லது கால் 'காலன்') அளவுள்ள ஜலம் ஒரு கனலி அளவு வெப்பத்தை உட்கொள்ளும். ஆனுல், தன் உஷ்ணத்தில், இரண்டு டிகிரி பாரன் ஹீட்டுக்கும் குறைவான அளவு அதிகரிப்பையே காட்டும். ஒரு குவார்ட் ஜலம் ஆவியாகப் போகும்போது, சுமார் 500 கனலிகளை எடுத்துச் செல்லுகிறது. உங்கள் தேகத்தில் ஒரு குவார்ட் வியர்வை உண்டாகுமானுல், அந்த வியர்வை தோலிலிருந்து ஆவியாகிப் போகுமாயின் இந்த அளவு உஷ்ணத்தை நீங்கள் வெளித் தள்ளுகின்றீர்கள். இங்குதான் கஷ்டம் இருக்கிறது. தன்னுல் கொள்ளக்கூடிய நீரனைத்தையும் காற்று ஏற்கெனவே கொண்டிருக்குமானுல், ஆவியாவதன் மூலம் உஷ்ணம் கிரகிக்கப்படும் பலனை நீங்கள் அடைய முடியாது. ஆகையால், காற்றில் வேண்டிய அளவு பூரணமாய் ஈரம் இருக்கும்போது, அல்லது சீதோஷ்ண மனிதன் (விஞ்ஞானி) சொல்வது போலக் காற்றின் ஈரப்பதம் 100 ஆக இருக்கும் போது நீங்கள், 'புழுக்கமாய் இருக்கிறது' என்கிறீர்கள். உஷ்ணமானியிலுள்ள பாதரசம் அதிக உயரத்தில் நிற்காத போதிலும் அதாவது வெளி உஷ்ணம் அதிகமாயில்லாத போதிலும், நீங்கள் உஷ்ணம் தாங்க முடியாதபடி இருக்கிறது என்று மேலும் குற்றம் சாட்டுகிறீர்கள்.

உங்கள் உடம்பாகிய உள் உஷ்ணமானி—உங்களது உஷ்ண உணர்ச்சி, லாப நஷ்டத்தை மட்டும் பதிகிறது. உங்கள் தேகம் உஷ்ணத்தைப் பெறும்போது, வெப்பமாய் இருப்பதாக உணர்கிறீர்கள். நீங்கள் உஷ்ணத்தை இழக்கும்போது, குளிராயிருப்பதாக உணர்கிறீர்கள். உங்கள் உடலின் தோலைவிட, காற்று குளிர்ச்சியாயிருக்கும்போது மட்டும்தான் உஷ்ண வீச்சு மூலம் நீங்கள் வெப்பத்தை

இழக்க முடியும். உங்கள் தோலை விடக் காற்று வறண்டிருக்கும் போது மட்டும்தான், ஆவியாவதன் மூலம் வெப்பத்தை இழக்க முடியும்.

உங்கள் தோலுக்கு அடுத்தாற் போல் உள்ள காற்றின் அடுக்கு அல்லது தளம்தான் கணக்கில் சேருகிறது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அவ்விடத்தில் காற்றின் உஷ்ணம் 99 டிகிரியாகவும் ஈரப்பதம் 100 சத விகிதமாகவும் இருக்கும்போது, இரு வழிகளாலும் நீங்கள் குளிர்ச்சியடைய முடியாது. அப்படியாயின், வெப்பமாயுள்ள ஈரக் காற்றை ஓட்டிவிட்டு, வறண்டும் குளிர்ச்சியாயும் இருக்கக்கூடிய காற்று உங்கள் தோலை அடையும்படி விடவேண்டும். இதை இளங் காற்றைக் கொண்டு அடையலாம். அது இல்லாவிடில், ஒரு விசிறியை உபயோகித்து அடையலாம்.

✲

## பழைய பிசாசு!

வளப்பம் பெற்ற தமிழ்நாடு; வனப்பு மிகுந்த தமிழ்நாடு. ஆனால், மழை யின்றிப் பயிர்கள் வாடி வதங்கின; வதங்கி யழிந்தும் போயின. விளைவென்ற பேச்சிற்கே வழி யில்லை. உண்ண உணவில்லை. பசி தீர்க்க ஆகார மிலலை, எங்கும் பஞ்சப் பேயின் பயங்கரத் தாண்டவம். பஞ்ச மென்றால் பெரும் பஞ்சம்!—பாழும் பஞ்சம்! இதற்கு முன் இது போல் கண்டது மில்லை, கேட்டது மில்லை. அந் நிலையிலும் ஆனந்தமடையும் குழுவொன் றிருந்தது. மக்களைச் சுரண்டி—அல்ல, அவர்களைச் சித்திரவதை செய்து, தன் தொப்பை வயிற்றை வளர்க்கும் அக்கிரமனுக்குத் தக்க வேட்டைக் காலம் அது. 'என் வயிறு நிறைந்தால் போதும். ஏனையோன் எப்படித் தொலைந்தால் எனக்கென்ன?' என்று எண்ணும் ஈவிரக்கமில்லாப் பொதுநல மற்றவனுக்கு நல்ல அறுவடைச் சமயம் அது. கருணை என்ற ஏடே யில்லாமல், பொருளே பிரதானம் என்று, ஏழைகளின் பகைவனா யிருப்பவனுக்குத் திரவியத்தைத் திரட்ட நல்ல சந்தர்ப்பம் அது. தாங்கள் கொள்ளை லாபம் அடிக்க வேண்டு மென்ற எண்ணத்துடன் ஏற்கெனவே பதுக்கி வைத்திருந்த நெல்லை அவர்கள் இரக்க மின்றி, ஈகை யின்றி ஒரு தட்டிலே பொன்னும், மறு தட்டிலே நெல்லும் என விற்று, ஏனையோரின் ஆஸ்திகளை யெல்லாம் சுரண்டினார்கள். இக் குழுவினரே பஞ்சத்தைக் கண்டு ஆனந்தங் கொண்டனர். என்னே இவர்களின் கன்னெஞ்சு! பஞ்சத்தினால் அவதியுற்ற மக்களின் துன்பத்தை எண்ணி எண்ணிச் சீதக்காதி கண்ணீர் வடித்தார். யாவரும் பசி தீர அருந்தி, மனங் குளிர்ந்து, பிள்ளை குட்டிகளுடன் வாழட்டும் என்ற எண்ணங் கொண்டு, ஏழைகளின் அன்பன், எளியாரின் பங்காளியான கர்ணன் சீதக்காதி தன் கைவசமுள்ள நெற் களஞ்சியங்க ளனைத்தையும் தர்மமாக, அள்ளி அள்ளித் தானமாகக் கொடுத்தார்; ஊர் ஊராக, இனமாய் வினியோகஞ் செய்தார். இதைப் படிக்காசுப் புலவர் வெகு அழகாய் வர்ணிக்கின்றார்:

***ஓர் தட்டிலே பொன்னுமோர் தட்டிலே நெல்லு மொக்க விற்கும்***
***கார் தட்டிய பஞ்சக் காலத்திலே தங்கள் காரியப்பேர்***
***ஆர் தட்டினுந் தட்டு வாராமலே யன்ன தானத்துக்கு***
***மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே.***

—பார்க்கும் அன்பர் சீதக்காதி

# சோள மகாத்மியம்

●

அன்னதாசன்

இரண்டு வருஷத்துக்கு முந்தி, நாட்டு மக்கள் அனைவரும்—ஆண், பெண், குழந்தை அடங்கலும்—சதா கையைப் பிசைந்து கொண்டே இருக்கும்படி செய்தான் ஒரு பாவி. அவன் சோளத்திலிருந்து வந்ததாகப் பின்னால் அனுபவத்தில் தெரிய வந்தது. அவனுடைய தொல்லை தாங்காது ஒரு புலவர் கவிதா பாவத்துடன் உள்ள முருகப் பாடி, இன்றைய தமிழ்க் கவிஞரிடையே சரி இடம் பெற்று விட்டார். அன்றிருந்த நிலைமை மீண்டும் திரும்புகிறது. அதனால், அவர் பாடிய, அல்லது மாரீசம் செய்த அந்த ஒரே பாடலினால் அவர் இன்று ரிஷியாக மாறி, உடனே அமரராக வேண்டியதைத் தவிர வேறுவழியில்லை. நீங்களே பாட்டைப் பாருங்கள், —அல்லது, ஏற்ற பண்ணோடு இசைத்துப் பாடுங்கள் :—

அறங் கைக்கும் புறங் கைக்கும்
அழகான முழங் கைக்கும்
சொறியச் சொறியச் சொல்லிச்
சுகம் கொடுக்கும் வீரா!
சிரங் கப்ப தீரா!
உஷ்ணமகா ராஜன் பெற்ற
செல்வக் குமாரா! (சொறி)

இனி, உணவுப் பிரச்னைக்கு வருவோம்: இது, முன்னைப் போல அவ்வளவு கடினமாக இல்லை யென்று, உலகத்தையே சுற்றிப் பார்த்த ஹூவர் துரை முதற்கொண்டு நமது கனம் மந்திரி பிக்கண்ண வீராசாமி வரை எல்லோரும் சொல்லி யாகிவிட்டது. ஆனால், நம்முடைய 'அருமை'க் கனம் மந்திரிமார்களின் ஆட்சியில், அரிசி வெளிக்கிளம்பாமல், உளுத்த சோளம் தான் களிநடம் புரியக் காண்கிறோம். பிளாக் மார்க்கெட்டில் சம்பந்தமுடைய ஆசாமிகளைப் போய், 'பிளாக் மார்க்கெட்டுகளை ஒழி!' என்று சொன்னால், பாவம்! அவர்கள் நம்மை ஒழிப்பதைத் தவிர வேறு என்ன ஐயா செய்வார்கள்?

சோளத்தின் இந்தச் 'சொறி'ப் பண்பைப் பற்றி எத்தனையோ வருஷத்துக்கு முன்னர் 'குணபாடம்' என்கிற நமது மருத்துவ நூலில் அகத்தியர் பாவமாய்ப் பாடிவிட்டுப் போயிருக்கிறார்: சோறு இருக்கிறது; வெறும் சோறு அல்ல, சோளச் சோறு. அதைத் தின்ற ஒருவனுக்கு உடலில் ஒருவிதப் புல்லரிப்பு உண்டாகிறது. நாளடைவில், அதுவே சொறி சிரங்காகப் பரிணமிக்கிறது. அவன் என்னென்ன மருந்தெல்லாமோ குடித்துப் பார்க்கிறான்: அத்தனையும் பாழ்! இதுவே பாட்டின் சுருக்கமான கருத்து.

இனி, 'பாட்டைப் பார்ப்போம்':

சோளமெனப் பேர்படைத்த
சோறுகளி னால் உடலின்
மீளச் சொறி சிரங்கு
விர்த்தியதாம்—நாளுங்
கரப்பனும் உண்டாகும்
கனமருந்தும் பாழாம்
பரப்பனைய கண்மாதே பார்!

இனி, சோளப் பிரச்னைக்கு வருவோம்: சோளம், தமிழ்நாட்டிற்கே உரித்தான ஒரு தானியமாகும். 'சோழ' என்ற வார்த்தைக்கும் இதற்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையே இதற்கு ஆதாரம். இதனாலேயே, தென்

'ரேஷன்' குறைப்பின் அதிகரிப்பைக் குறைக்கச் சோளம்,—என்ன, புரியவில்லையா? நிரம்பச் சரி. அதுதான் நமது மாகாண சர்க்காரின் பரிபாஷை,-இல்லையா?

ளூட்டுக் கடற்கரைக்குக் 'கோர மாண்டல் கோஸ்ட்' என்று மேலே நாட்டினர் பெயரிட்டதாகக் கூறுவாருமுளர்.

சோளத்தில் கருஞ்சோளம், செஞ்சோளம், காக்காய்ச் சோளம், மக்காச் சோளம் என்று பலவகைகள் இருக்கின்றன. இவற்றுள் மக்காச்சோளம் ஒன்றுதான் சாப்பாட்டுக்கு லாயக்கு. இதையும், கொஞ்சமாகத்தான் சாப்பிட வேண்டும். 'தீராது' என்று, ஏழை மக்கள் இதன் விதையை மாவாக்கிக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கிறார்கள். வேறு வழிகளிலும் உள்ளே தள்ளலாம். சோளத் தட்டு மாடுகளுக்கு மிகப் பிரியமான ஆகாரம்.

சோளம் உடம்புக்கு அவ்வளவு நல்ல தல்லாவிட்டாலும், வைத்தியத்தில் உபயோக மாகிறது. சோளத்தின் குஞ்சத்தைக் கஷாயம் செய்து, நீரடைப்புப் போன்ற நோய்களுக்குக் கொடுக்கலாம் என்பது மேலே நாட்டினரின் 'மேலான' அபிப்பிராயம். அதன் தட்டையை, எரித்த சாம்பலுடன், உப்பைக் கலந்து கொடுத்தால், கக்குவானையும், கபக் கட்டையும் குணப்படுத்துமாம். க்ஷயரோகிகளுக்கு மக்காச் சோளம் மிகவும் நல்லது என்று யுனானி வைத்தியர்கள் கூறுவதும் உண்டு.

இவை தவிர, சோளத்திலிருந்து எடுக்கப்படும் பாகு சர்க்கரைக்குப் பதிலாக உபயோகப் படுத்தப்படுகிறது. அதனுடைய மேலிதழ்களைக் கொண்டு, அமெரிக்காவில் காகிதம் தயாரித்துப் பாங்கி நோட்டுகளை அச்சிடுகிறார்கள்!

ஆனால், மொத்தத்தில் பார்க்கும் பொழுது, சோளத்தில் குணத்தைக் காட்டிலும் குறையே ஓங்கி நிற்கிறது. சிரங்கை உற்பத்திசெய்துவிட்டு, அதற்குக் கொடுக்கப்படும் மருந்தையும் பாழடித்துவிடுகிற மகத்தான சக்தி அதற்கு இருக்கிறது. மேலே நாட்டினர் அதை உண்ணவும் பழகியிருக்கிறார்கள்.

சோளப் பிரச்னை தீர ஒரு வழிதான் இருக்கிறது: நமது தேசத் தலைவர்களும், அரசாங்க விளம்பரங்களும் தினசரி நம்மை வேண்டுகிற மாதிரி, நாம் ஒவ்வொருவரும் முடிந்த அளவுக்குக் காய்கறிகளைப் பயிரிட வேண்டும். இந்தக் காய்கறிகளைப் பச்சையாகவோ, சமைத்தோ சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால், சோளத்தின் தீமையை வெல்லும் சக்தி உடலில் உற்பத்தியாகலாம். இதுபோன்ற கலப்பு உணவினால் மட்டுமே இந்தத் தீமையை ஒழிக்க முடியும்.

"சோளம்தான் கொடுப்போம் என்று வைத்துக் கொள்ளாதீர்கள். அப்படியே சோளம் கொடுத்தாலும், நல்ல சோளமாகக் கொடுங்கள்" என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளலாம். இல்லை, மக்கிய சோளம் தான் கொடுப்போம் என்று பிடிவாதம் பிடித்தால், "அதற்கு முன், எங்கிருந்தாவது உயர்ந்த வகையில் நல்ல சொறி சிரங்கு மருந்துகளைத் தருவித்து வைத்துக் கொள்ளுங்கள், ஸ்வாமி!" என்று கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு என்னதான் செய்யலாம்?



**தமிழர் பிரதிநிதி**

ராட்டைப் பிரங்கியுடன் !



2-வது பரிசு] புலிப் பூனை [ரூ. 15 பெறுகிறது

படம் : எஸ். கந்தசாமி, சேலம் நகரம்

“ஞாங் இஞ்ஞுங் குயிக்கயே”






இலங்கையில் நடந்தது, — இன்றல்ல !

“நாங்கள் குளித்துவிட்டோம்”

படம் :
என். ஜி. சின்னு.



சத்தியமங்கலம்
(ரூ. 10 பெறுகிறது).



"காற்றடிக்குது! கடல் குமுறுது!"

விண்ணொளி மின்னிடும் தண்கடல் — இசை
பண்ணொடு மண்ணவர்க் காக்குது





" இரும்பைக் காய்ச்சி உருக்கி"
உருவான பிரிட்டிஷ் வீடு

"கதர்! கதர்! என்று கதறிக் களைத்தேனே!"





வயிறு வளர்க்கும் வள்ளியோர்
"ஏங் இப்பிடி இடிஞ்சு குந்திட்டாரு?"





"... உழத்தியர் குரவின் ஆர்ப்பும்
... வான்முளை வித்துனர் களிப்பும்" — நைடதம்

படம்: ஆர். பூர்ணையா, கோயம்புத்தூர் (ரூ. 15 பெறுகிறது)

# கதர் எதற்கு?

மகாத்மா காந்தி

இந்தக் கேள்வி எழுந்ததற்கு நாம் தானே பொறுப்பாளி. நாம் கதரின் தத்துவத்தை நன்ருக அறிந்து கொள்ளாததுதான் காரணம். இப்போதுங்கூட அதை நன்ருக அறிந்துவிட்டதாகக் கூறமுடியாது. அதனுல் தான் குழந்தைகள் எப்படி விழுந்து விழுந்து நடக்கக் கற்றுக் கொள்ளுகின்ருர்களோ அப்படியே நாமும் திரும்பத் திரும்பத் தவறு செய்துதான் கதர் விஷயத்தை அறிந்து வருகிருேம். குழந்தைகள் விழாமலிருப்பதற்காகக் கைபிடி வண்டியை உபயோகிப்பதுபோலவே நாமும் உபயோகித்து வருகிருேம். இந்த விஷயத்தை உணர்ந்துதான் அகில பாரத சர்க்காசங்கமானது தான் இருக்கவேண்டிய அவசியத்தை நிரூபிக்கவும் அது முடியாமற் போனுல் இறந்து போகவும் பெரு முயற்சி செய்து வருகின்றது. அகில பாரத சர்க்கா சங்கம் என்பதில் நூல் நூற்பவர் உள்பட சகல கதர் ஊழியர்களும் அடங்குவார்கள். நூல் நூற்பவர்கள் பிறரைச் சாராமல் வாழும்படி செய்வதும் அவர்களுடைய வேலேயின் மூலம் இந்தியாவிற்குச் சுதந்திரத்தை அடைவதுமே சர்க்கா சங்கத்தின் நோக்கம். இன்னும் அந்த நோக்கம் நிறைவேறவில்லேயே என்று அனுவசியமாகக் கவலே கொள்ளவேண்டிய தில்லே. அது தான் சரியான லட்சியம் என்பதை அறிந்து கொண்டு அதை அடைய முயலும்பொழுது இடையில் ஏற்படும் தவறுகளேத் திருத்திக்கொண்டு முன்னேறி வந்தால் போதுமானது. அதுதான் விஞ்ஞான முறையின் சாரமாகும். எந்த விஞ்ஞானமும் எவ்விதக் குறையுமின்றிப் பரிபூரணமான நிலேமையில் வானிலிருந்து வந்துவிடவில்லே.

இந்த உண்மையைத் தெளிவாக அறிந்துகொண்டு அச்சமில்லாமல் அனுஷ்டித்து வந்தால் கதர் சம்பந்தமாகக் கேட்கப்படும் கேள்விகளுக் கெல்லாம் வெகு எளிதாக பதில் கூறிவிடலாம். நூல் நூற்பவர்கள் பருத்தியைச் சுத்தம் செய்தல் முதல் நெசவு செய்தல் வரையுள்ள முறைகள் அனேத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதில் தான் சுயராஜ்யம் அடைவதற்கான மார்க்கம் அடங்கியிருக்கிறது. இதுவரை நாம் தெரிந்தோ தெரியாமலோ விற்பனேக்காக மட்டுமே கதரை உற்பத்தி செய்து வந்தோம். ஆயினும் அது சுயராஜ்ய லட்சியத்துடன் இணேந்தே இருந்து வந்தது. அப்படியில்லா விட்டால் வியாபாரத்துக்காகக் கதரை உற்பத்தி செய்வதும் இடையில் நின்று போயிருக்கவே செய்யும். கதர் மூலம் சுயராஜ்யம் அடைவது என்ற லட்சியம் வெறும் கனவாகவே போயிருக்கும்.

வியாபாரத்துக்காகக் கதர் உற்பத்தி செய்வதுதான் நம்முடைய கைப்பிடி வண்டியாக இருந்தது. இப்பொழுதும் அப்படியேதான் இருந்து வருகிறது. நூல் நூற்பவர்கள் பஞ்சைவெட்டித் திரிபோட்டுக் கொடுப்பதற்குப் பிறரையே எதிர்பார்த்து வரு

"நூல் நூற்பவர்கள் பருத்தியைச் சுத்தம் செய்தல் முதல் நெசவு செய்தல் வரையுள்ள முறைகள் அனேத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும். இதில் தான் சுயராஜ்யம் அடைவதற்கான மார்க்கம் அடங்கியிருக்கிறது." காந்தி வழியிலிருந்து எடுத்தது.

கிறார்கள். ஆனால் இப்படிப் பிறரை எதிர்பார்ப்பதைப் படிப்படியாக நிறுத்தி வந்தால் தான் கதர் மூலம் சுயராஜ்யம் என்ற லட்சியத்தை அடைய முடியும். ஆதலால் விற்பனைக் காகக் கதர் உற்பத்தி செய்வதையும் பஞ்சை வெட்டும் தொழில் மட்டும் தனியாக நடப்பதையும் நிறுத்திவிட வேண்டும். ஆனால் அதை நினைத்த மாத்திரத்தில் நிறுத்திவிட முடியாது. ஆதலால் எவ்வளவு சீக்கிரமாக நிறுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நிறுத்தவேண்டியதாகும். இது விஷயத்தில் போதிய ஞானமும் நம்பிக்கையும் உடையவர்களே முதன் முதலாக இந்தப்படிச் செய்வார்கள். உண்மையான ஆவலுடன் முயற்சி செய்யப்பட்டால் போட்டி என்ற பிரச்னை எழமாட்டாது.

இப்பொழுதுள்ள நிலைமையில் ஒரு அம்சத்தைக் கவனிக்கவேண்டியது அவசியமா யிருக்கிறது. ஜீவனத்துக்காக நூற்பவர்கள் அதிகமாகச் சம்பாதிக்க முடியும் என்ற காரணத்தால் இந்தப் புது முறைகளை எல்லாம் சந்தோஷமாகக் கற்றுக் கொள்வார்கள். ஆனால் எளிதாகச் சம்பாதிக்கக் கூடிய இதர வழிகள் ஏற்பட்டு வருவதால் இப்பொழுது நூல் நூற்பவர்களுடைய தொகை குறைந்து வருகிறது. அவர்கள் இது சரியா தப்பா என்று யோசித்துச் செய்பவர்கள் அல்லர். அவர்கள் எது எளிதோ அதையே தான் செய்வார்கள். உதாரணமாக, பீடி செய்வதற்குரிய இலைகளைச் சேகரிப்பது எளிதாயிருப்பதால் அதை மேற்கொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்களுக்கு உண்மையான அறிவைப் புகட்டுவதும் சுயராஜ்ய சிகரத்துக்குச் செல்லும் செங்குத்தான பாதையில் ஏறிச் செல்வதற்கு அவர்களுக்கு துணை செய்வதும் ஏறிச் செல்வதன்மூலம் அவர்களுக்கு ஆரோக்கியமும் ஆற்றலும் பெருகும்படி செய்வதும் நமது கடன். இதைச் செய்ய முடியாமற் போகுமானால் நம்முடைய சங்கத்தைக் கலைத்துவிடுவதே நியாயமாகும். ஆதலால் மேற்கூறிய விஷயத்தை அறிந்து நூற்கும் ஆண் பெண்களைக் கொண்டு தான் நாம் சங்கத்தை நடத்த வேண்டும்.

ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் யாதெனில் நூல் நூற்றல் என்பது ஜனங்கள் செய்யக் கூடிய தொழில்களில் ஒன்று என்று ஆகிவிட்டபடியால் அது இடையில் நின்று போகாது நடந்துவரும் என்பதேயாகும். ஆதலால் விற்பனைக்காகக் கதர் உற்பத்தியாகாமல் நின்றுவிடுமோ என்று கவலைப்பட வேண்டியதில்லை. நான் சொன்ன விஷயத்தில் எந்தவிதமானக் கஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் வேலை செய்வது ஊழியர்களின் கடமையாகும். இதைச் செய்யலாமா இதைச் செய்யக் கூடாதா என்று சதா பிறரைக் கேட்டுக் கொண்டிருப்பது அறியாமையையும் சோம்பலையுமே காட்டும். மூல விதியிலிருந்து உபவிதிகளைத் தாமாக அறிந்து கொள்ள முடியாதவர்களை க்ஷேத்திர கணிதம் அறிந்தவர்களாகக் கூறமுடியாது. இதே உண்மை தான் சகல விஞ்ஞானங்களுக்கும் பொருந்துவதாகும்.

*

# கதம்பம்

●

**எஸ். ராமநாதன்**

ஜாதிப் பூ :— ஒரு நாள், சென்னையின் அருகில் உள்ள புழலேரிக்கு நாங்கள் (வாலிப சங்கத்தார்) உல்லாசப் பிரயாணம் போனோம். அங்கே, நெடுநேரம் ஏரியில் நீந்தி விளையாடினோம். எங்களுக்குக் களைப்பும் பசியும் ஏற்பட்டுவிட்டன. அங்கேயுள்ள ஒரு பிராமணர் வீட்டில் எல்லோருக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தோம். ஆவலோடு எல்லோரும் அந்த வீட்டையடைந்தோம். உள்ளே இலை போடப்பட்டிருந்தது. எல்லோரும் உள்ளே அனுமதிக்கப்பட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்கள். என்னை மாத்திரம் வாயிற்படியிலேயே நிறுத்திவிட்டார்கள். ஏனென்றால், நான் பிராமணன் அல்ல. பாக்கிப் பேர் சாப்பிட்ட பிறகு எனக்கு வெளியில் பரிமாறுவதாகச் சொன்னார்கள். முகத்தில் அடித்தது மாதிரி இருந்தது. எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியினால் நிலை விழுந்தேன். கோபம் பொங்கிற்று. ஓட்டல்காரனைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. ஆனால், எனது நண்பர்களின் செய்கையைச் சகிக்க முடிய வில்லை. அப்பொழுதுதான் என்னைத்தவிர மற்றவர்கள் எல்லோரும் பிராமணர்கள் என்ற விஷயம் எனக்குப் புலப்பட்டது. அவர்களுக்கு நான் வெளியில் நிறுத்தப்பட்டது தெரியும். தெரிந்தும், அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

அதுதான் வழக்கம். வழக்கப்படி நடந்தாக வேண்டும். மேல் ஜாதியார் திருப்தியடைந்து, தங்கள் முறை வருகிறவரையிலும் தாழ்ந்த ஜாதியார் காத்திருக்க வேண்டும். இந்த அக்கிரமம் மற்றவர்களுக்குச் சரியாகத் தோன்றலாம். ஆனால், எனது நண்பர்கள் அதை எப்படிச் சகித்துக் கொள்ள முடிந்தது? நவீன நாகரிக முதிர்ச்சியில் திளைத்தவர்கள் அன்றோ அவர்கள் எல்லோரும்?

அப்பொழுது என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. பலவந்தமாக உள்ளே நுழைந்து கலகம் பண்ணலாமா? என்னை அவமதித்ததற்காக எனது நண்பர்களை உதைக்கலாமா?—என்றெல்லாம் ஆத்திரப்பட்டேன். கடைசியில், அந்த வீட்டிலிருந்து வெளியே போய், ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன். என்னுடைய கண்களிலிருந்து நீர் சொட்டுவதைக் காண நான் வெட்கப்பட்டேன். ஆனால், அதை நிறுத்த எனக்குச் சக்தி யில்லை. குழந்தைப் பருவத்தைக் கடந்து வெகுநாள் ஆகாததனால், குழந்தை சுபாவம் என்னை விட்டு முற்றிலும் போய் விடவில்லை. சீக்கிரம் என் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, ஏரியில் முகத்தைக் கழுவிக்கொண்டு, அந்த வீட்டுக்குத் திரும்பினேன்.

அதற்குள், எனது நண்பர்கள் தங்கள் சாப்பாட்டை முடித்து

**வாலிபர் உள்ளம்:** ஆசிரியர்: என். ராமநாதன். வெளியீட்டோர்: ராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ், 11, மவுன்ட் ரோடு, சென்னை. பூல்ஸ்கேப் 1 x 8. 146 பக்கம். கைக்காகிதம். விலை ரூ. 1—8—0.

ஆங்கிலத்தில் வெளிவந்த இந்த நூல் தமிழில் வெளியாவதற்குக் காரணராயிருந்த அன்பர் சாமி சிதம்பரனர், ஆசிரியர் இவர்கள் உள்ளிட்ட சகலரையும் 'பூ—பூ!' என்று ஊதி, வெளுத்து வாங்கும் இந்த நூலைச் சிலரால் சகிக்க முடியாது. ஆனால், எல்லாரும் படிக்கத்தான் வேண்டும்

விட்டு, எனக்குப் பரிமாறுவதற்காக என்னைத் தேடினர்கள். எனக்குத் திடீரென்று வயிற்று நோய் வந்து விட்டதென்று கூறி, நான் சாப்பிட மறுத்துவிட்டேன். மாலையில், புழலேரியிலிருந்து நாங்கள் எல்லோரும் நடந்து திரும்பினேம். வழி நெடுகிலும் நடந்த சிரிப்பு, விளையாட்டுக்களிலும், களியாட்டங்களிலும் நான் கலந்துகொள்ள வில்லை. எனது அருமை நண்பர்களில் ஒருவராவது என்னைப் பற்றிக் கவலை கொள்ளவில்லையென்றும், நான் சாப்பாடு வேண்டாம் என்றதின் உண்மைக் காரணத்தை அவர்கள் அறிந்துகொள்ள வில்லையென்றும் எண்ணி எண்ணி என் மனம் புண்ணடைந்தது.

இம் மாதிரியான சம்பவங்கள் மாணவர்களின் வாழ்க்கையில் இப்பொழுது நடைபெறுவதில்லை. வெளிப்படையாக நடைபெறுவதில்லை. வெளிப்படையாக நடந்தால் கலகம் மூண்டுவிடும். காலப்போக்கு ஜாதித் திமிருக்குப் புடம் போட்டுவிட்டது. ஆயினும், ஜாதி அழிந்து போக வில்லை. ஜாதிச் சின்னமாகிய கட்டுப்பாடுகள், அவமானங்கள் எல்லாம் இன்னும் இருக்கின்றன. ஆனல், அவைகள் நேரிடையாக இல்லாமல் மறைமுகமாகவும், எளிதில் அழிக்க முடியாத மாதிரியிலும் உருவாகியிருக்கின்றன. உச்சிக் குடுமியும் நெற்றிக் குறியும் மறைந்துவிட்டன. ஆனல், ஜாதிக் கர்வம் மூளையை விட்டுப் போகவில்லை. போகவும் போகாது. போக வேண்டுமானல், ஜாதி பேதத்தை வளர்க்கும் ஆணிவேராகிய வருணசிரமக் கொள்கையை அடியோடு பிடுங்கி யெறியவேண்டும்.

ஆத்மப் பூ :—மகாத்மாவை நான் நேசித்திருக்கிறேன். பல வருஷங்கள் எனது உயிர் அவரது ஆணைக்குக்கீழ்ப்பட்டுக்கிடந்தது. ஆனல், என்றும் நான் அவரை வணங்கியதில்லை. அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டதோ, அவருக்கு நேரில் கீழேவிழுந்து தண்டனிட்டதோ இல்லை. அம் மாதிரி செய்வது அருவருக்கத் தக்க பழக்கம். அதை அவர் ஆரம்பத்திலிருந்தே அனுமதிக்காமல் இருந்திருக்க வேண்டும். அன்னி பெசன்ட் அம்மையார் ஏதோ ஒரு அவசரத்தில் மகாத்மா பட்டம் சூட்டிவிட்டார். அந்தப் பட்டத்தை அவர் ஏற்காமல் அன்றே நிராகரித்திருந்தாரானல், மகாத்மா இன்றையத் தினம் நம்மை யொத்த ஒரு சாதாரண மனிதராக விளங்கிப் பொது மக்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கி யிருப்பார். ஆனல், மகாத்மாவான பிறகு மனிதத்துவத்தை இழந்துவிட்டார். மனிதத்துவததுக்கு அப்பாற்பட்ட, இயற்கைக்கு விரோதமான ஒரு தோற்றமாக இன்றையத் தினம் மகாத்மா காட்சி அளிக்கிறர்.

ஒழுக்கப் பூ :— முன்பே குறிப்பிட்டிருக்கும் சிமென்ட் என்ற ருஷியக் கதையில், கதாநாயகி தன் கணவனை அதிக அன்போடு நேசிக்கிறள். ஆனல், அவன் புரட்சியில் ஈடுபடுவதற்காக அவளை விட்டுப் பிரிகிறன். பிரிவை அவளால் சகிக்க முடியவில்லை. பிரிவாற்ருமையால் ஏற்பட்ட சோகத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்காகத் தன் கிராமத்தில் உள்ள புரட்சிக்காரர்களுக்கு உதவி செய்து தனக்கு அபாயத்தைத் தேடிக் கொள்ளுகிருள். கொஞ்சங் கொஞ்சமாகத் தன் நாயகன் மனத்தைக் கவர்ந்த புரட்சி இயக்கத்தில் தானும் ஈடுபட்டுவிடுகிருள்.

புரட்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட ஆபத்துக்களில் அவளும் சிக்கிக் கொள்ளுகிறாள். அவ்வித நெருக்கடிகளில் பல தியாகங்கள் செய்கிறாள். ஒரு சமயம், தன் கற்பையே தியாகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அந்தத் தியாகத்தையும் செய்கிறாள். அதனால் அவள் கணவனுக்கு ஒரு சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. அந்தக் கதையின் ஆசிரியர் பொதுவுடைமைப் பிரசாரம் செய்கிறவர். ஆகையால், அவள் செய்தது சரியென்றே கூறுகிறார். புரட்சியின் வெற்றிக்காக உண்மை, ஒழுக்கம், இன்னும் அதற்கு மேலான நோக்கம் எதுவாயினும் சரி, அவைகளையெல்லாம் தத்தம் செய்வது சரியென்பதே அவருடைய சிந்தாந்தம். அவ்விதம் தத்தம் செய்யத் தயங்குகிறவர்களைப் பணக்கார ஒழுக்கம் உள்ளவர்கள் என்று பொதுவுடைமைக்காரர்கள் ஏளனம் செய்வார்கள். பணக்கார ஒழுக்கம் என்பதற்கு அவர்களுடைய அகராதியில் பித்தலாட்டம் என்று பொருள்.

மற்ற நாடுகளில் ஆங்காங்குள்ள தேசிய ஒழுக்கம் அந்த நிலையில்தான் இருக்கிறது. தேசபக்தி மேலிட்டால், அவ்விதத் தியாகங்கள் செய்வதை எந்தத் தேசத்தாரும் கொண்டாடி வருகிறார்கள்.

ஆனால், நமது நாட்டில் மகாத்மாவுக்கு ஏற்பட்ட ஆதிக்கத்தின் மூலம் அந்த நிலைமை மாறிவிட்டது. உண்மைக்கு ஒரு நூதன முதன்மை ஏற்பட்டுவிட்டது. தேசபக்திக்காகவோ அல்லது அதற்கு மேலான நோக்கத்திற்காகவோ உண்மையைப் பின்னடையச் செய்வதற்கில்லை.

**கதர்ப் பூ:** இன்றையத் தினம் ராட்டைக்கு என்ன கதி நேரிட்டிருக்கிற தென்பதைப் பாருங்கள். கதர் உடுத்தும் ஒவ்வொருவரும் நூற்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. கதர்க் கடையில் கையினால் நூற்ற நூலை விலையில் ஓரளவு கொடுப்பவர்களுக்குத்தான் கதர் விற்கிறார்கள். இதன் நோக்கம் என்னவென்றால், கதர் உடுத்தும் ஒவ்வொருவரும் நூல் உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். ஆகவே, ராட்டை நூற்பது என்பது பொருளாதார நோக்கத்தோடு அல்ல. அதில் கிடைக்கும் ஊதியத்திற்காக நடத்தப்படும் ஒரு தொழில் அல்ல, காந்தீயம் என்னும் மதத்தின் ஒரு சின்னம் அது.

இந்த நூதன ஏற்பாட்டின் பலனாக, ராட்டையில் நூற்பது விருத்தியாகவில்லை. கதருக்குக் கள்ள மார்க்கெட் ஏற்பட்டது. இப்போது நடந்த யுத்தத்தின் மூலம் ஏராளமான கள்ள மார்க்கெட்டுகள் பல வகையில் உற்பத்தியாகிவிட்டதால், கதருக்கு ஏற்பட்ட கள்ள மார்க்கெட்டைப் பற்றி ஒருவரும் கவலைப்பட வில்லை.

கதர் அணியும் பொதுமக்களும், கதர் உற்பத்தி செய்யும் தொண்டர்களும் மகாத்மாவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கட்டாயத்தினால் அப்படிச் செய்கிறார்களே ஒழிய உள்ளூர அவர்களுக்கு நம்பிக்கை யில்லை. ஆகவே, கதர் வேலை தன் சொந்தப் பலத்தினால் இயங்க வில்லை. வெளியிலிருந்து அதைக் கட்டியிழுக்க வேண்டியிருக்கிறது. இப்படி நம்பிக்கையில்லாமல் செய்யும் தொண்டின் பலனாக, நம்முடைய வாழ்க்கையே ஒரு வேஷமாக மாறி, அந்த வேஷப் போக்குக் கதரில் மாத்திர மின்றி அரசியல் வாழ்க்கையிலும் பரிணமித்து நிற்கிறது.

இந்திப் பூ:—இந்திப் பாஷையில் உள்ள ஊழல்அந்தப் பாஷையைக் கற்பதற்குப் பெருந் தடையாக இருக்கிறது. இந்தியாவி லுள்ள பாஷைகளில் இந்தியல்லாத மற்ற மொழிகளில் பல இந்தியை விட அதிக வளர்ச்சி பெற்று உன்னத நிலையை அடைந் திருக்கின்றன. ஆகவே, அந்த உயர்ந்த மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட மக்கள், தங்கள் பாஷையைவிட இந்திக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக்க வேண்டும் என்பதைக் கண்டு மனம் குமுறுகிறார்கள். அவர்களுடைய தாய்ப் பாஷைகளின் இலக்கியத்தின் மேன்மையும், இலக்கணத்தின் நுட்பமும், நடையின் அழகும், இந்தியைவிட மேம்பட்டவை. உதாரணமாக, இந்திப் பாஷையில் உயிரில்லாத வஸ்துக்களைப் பற்றிப் பேசும் போதும் ஆண்பால், பெண்பால் என்ற பிரிவை உணர்த்தியே பேச வேண்டும். கல்லைப் பற்றியோ, மண்ணைப் பற்றியோ, மேஜையைப் பற்றியோ, நாற்காலியைப் பற்றியோ பேசத் தொடங்குவதற்கு முன், அது ஆணா, பெண்ணா என்று கண்டு பிடிக்க வேண்டிய சங்கடம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம், ஆதிகாலத்தில், மனிதர்களுக்கு அறிவு வளர்ச்சி இல்லாதபோது, உலகில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் ஆண் பெண் சேர்க்கை மயமாகவே கண்டார்கள். எதை எடுத்தாலும், ஒன்று அது ஆணாயிருக்க வேண்டும் அல்லது பெண்ணாயிருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். இயற்கையின் ஆரம்பக் காலத்தில் ஏற்பட்ட இந்த மன நிலையிலேயே இந்தியைப் போன்ற பாஷைகள் இன்றும் இருக்கின்றன. தமிழைப் போன்ற மற்றப் பாஷைகள் இந்த நிலையைக் கடந்து வெகு காலம் ஆயிற்று. இந்தியில், இலக்கணத்தை விட அதன் எழுத்தமைப்பு வெகு சிக்கலானது. பழைய நாகரி எழுத்தை அடிப்படையாகக் கொண்டு 300-க்கு மேற்பட்ட பல்வேறு எழுத்துக்களைக் கற்றாலொழிய அந்தப் பாஷையைப் படிப்பதும் எழுதுவதும் முடியாது. ஆகையால், அந்தப் பாஷையில் எழுத்து வாசனை ஏற்படுவது மிகவும் துர்லபம்.

ரோமன் பூ:— அத்தா துர்க் என்று பெயர் பெற்ற கமால் பாஷா எழுத்து வாசனையே யில்லாத தனது மக்களுக்கு ஒரு நொடியில் எழுத்தறிவு ஏற்படுவதற்குக் கையாண்ட உபாயம் துருக்கிப் பாஷையின் எழுத்துக்களில் அவர் செய்த சீர்திருத்தந் தான். நமது நாட்டிலுள்ள தற்குறித் தனத்தை ஒழிக்க வேண்டுமானால், கமால் பாஷா காட்டிய வழியையே பின்பற்ற வேண்டும். நம் நாட்டு வாலிபர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு, நேத்தாஜியாக விளங்கும் சுபாஷ் சந்திர போஸ் காட்டும் வழியும் அதுதான். அவருடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான சம்பவம், அவர் தைரியமாக மகாத்மாவை நேரிடையாக எதிர்த்து, இந்தியப் பாஷைகளை யெல்லாம் ரோமன் எழுத்துக்களில் எழுத வேண்டும் என்று வற்புறுத்தியதாகும். ஹரிபுரா காங்கிரசில் தலைமை வகித்துத் தனது தலைமைப் பிரசங்கத்தை அவர் நடத்தியபோது நான் உணர்ச்சி மிகுதியால் ஸ்தம்பித்துவிட்டேன். இந்தியப் பொது மக்களுக்கு அச்சமயம் அவர் விடுத்த செய்தியாவது:—நமது நாட்டுப் பாஷைகளுக்குள் ஒற்றுமை உண்டாகி, அவைகள் நவீன கால அமைப்புக்குத் தக்கவாறு சீர்திருத்தம்

அடைய வேண்டுமானல், அவற்றை ரோமன் எழுத்துக்களில் எழுதியாக வேண்டும் என்பதாகும்.

மொழிப் பூ:— பாஷை, மனித வாழ்க்கையில் ஒரு நோக்கத்தை அடையும் சாதனமே ஒழிய, வெறும் பாஷையே ஒரு நோக்கமாக இருக்கமுடியாது. ஆகவே, பாஷையை வணங்குவது என்பது கேலிக் கூத்தாகும்.

ஆராய்ந்து பார்த்தால், பாஷை என்பது நாவின் பழக்கத்தால் ஏற்படுவது. ஆதியில் மனித சமூகம் பல விடங்களில் சிதறி வாழ்ந்து வந்ததால் ஒவ்வோரிடத்திலும் உள்ள மனித சமூகமும், ஒவ்வொரு நாப் பழக்கத்தைப் பின்பற்றியது. ஆகவே பாஷைகள் பலவாயின.

பாஷைகளின் சரித்திரத்தைப் பரிசோதித்துப் பார்ப்போமானல் ஒவ்வொரு பாஷையிலும் பல சமயங்களில் பல புரட்சிகரமான மாறுதல்தள் ஏற்பட்டிருக்கின்றன. எழுத்திலும், சொல்லிலும், இலக்கணத்திலும் ஏற்பட்ட புரட்சிகள் அளவற்றவை. அப்படிப் புரட்சிகள் ஏற்படாமல் முரடுதட்டிய பாஷைகள் நாளடைவில் இறந்து விட்டன.

உயர்ந்த முற்போக்குக் கொள்கைகள் பிற்போக்காளருக்குப் பரிகசிப்பாகத்தான் இருக்கும்.

தேசப் பூ:—மனம் ஒருவழியில் நிற்காமல் சமயத்துக்குத் தக்கவாறு மாறுதல் அடைவதால், நமது தேசிய வாழ்க்கை பாதிக்கப் படுகிறது. ஒவ்வொருவருடைய உடம்பிலும் உள்ள ஆத்மா ஒன்ருகத் திரண்டு விளங்காமல் இரண்டு கூருகப் பின்னப்பட்டுக் கிடக்கிறது. நமக்குள் இருக்கும் இந்தத் துவைத உணர்ச்சியானது, செயலில் நம்மை வேஷதாரிகளாகவும் பொய்யர்களாகவும் ஆக்கி விடுகிறது. மகாத்மாவின் முன்னிலையில் அவர் 'முணுக்' என்பதற்கெல்லாம் சரி சரியென்று கூத்தாடுகிரும். பிறகு, அனுஷ்டானத்தில் நம்முடைய வாக்குத்தத்தத்தை அறவே மறந்து விடுகிரும். நாம் மகாத்மாவுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவ தில்லை. மற்றவர்களெல்லாம் சரி யென்று சொல்லிவிட்டுப் பிறகு அதைப் பற்றி நினைக்காமலே யிருக்கும் போது, நாம் மாத்திரம் முடியாது என்று சொல்லி எதற்காகக் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிரும்.

அறிவுப் பூ:— நான் யாரையும் குறை கூறவில்லை. மகாத்மாவின் மேல் குற்றங் கூறுவதற்காக இந்தப் புத்தகம் எழுதவில்லை. என் வாழ்நாள் முழுவதையும் மகாத்மாவை வணங்கும் கூட்டத்திலேயே கழித்திருக்கிறேன். மகாத்மாவின் கொள்கைகளில் உள்ள குற்றங்கள் என் கண்ணுக்கு எதிரில் மலைபோல் தோன்றின. ஆனல், அந்தக் கொள்கைகளில் உள்ள உண்மை என்னை அந்த மலைக்கு மேல் தூக்கிச் சென்றது. மகாத்மாவின் கொள்கை யென்பது ஒரு கதம்பம். அதில், நிலையுள்ளதும் நிலையற்றதும் ஒன்றுபட்டுக் கலந்து கிடக்கின்றன.

✲

எளிது: உண்மையையே எப்போதும் சொன்னீர்களானல், எதையுமே நீங்கள் ஞாபகம்வைத்திருக்க வேண்டியதில்லை.
—மார்க் டுவெயின்

# சொந்த ரிக்ஷா

லாஉ ஷா

'உல்லாசப் பையன்' பலமுறை பல இடங்களில் வேலைக் கமர்ந் திருக்கிறான். இவைகள் ஒவ்வொன்றும், ஒருவனுடைய உழைப்பைக்கொண்டு இன்னொருவன் பிழைக்கும் தொழில்கள். ஆனால், வெகு சீக்கிரத்திலேயே, ரிக்ஷா இழுப்பது பணம் சம்பாதிப்பதற்கு இன்னும் சுலபமான வழி என்பதை அவன் கண்டு கொண்டான். மெய் வருந்திப் பிழைக்கும் மற்றத் தொழில்களிலெல்லாம் வருமானத்துக்கு ஓர் எல்லையிருக்கிறது; ரிக்ஷா இழுப்பதில் லாபமடையக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் இருக்கின்றன. எதிர்பார்ப்பதை விட அதிக வருமானம் எந்த இடத்தில், எந்தச் சமயத்தில் வரும் என்று நமக்கே தெரியாது.

அவன் நல்ல பலசாலி; இளமைப் பருவமும்கூட. ஒரே ஒரு குறை என்னவென்றால், அதற்குமுன் ஒருபொழுதும் அவன் ரிக்ஷா இழுத்தது கிடையாது. பழக்கமில்லாத துறையில் பிரவேசிக்கத் தைரியமில்லாமலிருந்தது. ஆனால், வெற்றிகிடைப்பது கடினமென்று சொல்லும்படி அவ்வளவு கஷ்டமானதல்ல இது. தேகத்தில் பலம் இருக்கிறது; பத்து நாளோ இரண்டு வாரமோ பரீட்சை செய்து பார்த்துக்கொண்டால் போதுமானது; நிச்சயமாக, அதற்குள் ரிக்ஷா இழுப்பதற்கு அவசியமான அந்த 'நடை'யைப் பெற்று விடலாம்; பிறகு ஒரு புது ரிக்ஷா வாடகைக்கு எடுக்கலாம். ஒரு மாதத்திற்குள் எங்காவது வேலையில் அமர்ந்து கொள்ள வேண்டும், கொஞ்சமாக சாப்பிட்டு, ஜாக்கிரதையாகச் செலவழித்து இரண்டொரு வருஷத்தில் எப்படியாவது ஒரு சொந்த ரிக்ஷா வாங்கிவிட வேண்டும்; மூன்று நான்கு வருஷம் ஆனால் கூடப் பரவாயில்லை. இதற்கு என்ன வழி என்று தான் அறிந்து கொள்ள முடியவில்லை.

அவன் புத்தியில்லாதவனல்ல; தானாக ஏதோ சில திட்டங்கள் போட்டு வைத்துக் கொண்டுதானிருந்தான். ஆனால் பிறருடன் பேசுவதென்பது அவனுக்கு நிரம்பக் கஷ்டமான காரியம். தவறுகளினால் ஒவ்வொருவரும் அடைந்த சிரமங்களும், பட்டகஷ்டங்களும்ரிக்ஷாக்காரர்களுக்குள் பொதுச் சம்பாஷணைக்குரிய விஷயங்கள். தெருச் சந்திகளில் இருக்கும் 'ரிக்ஷா ஸ்டாண்டு'களிலும், 'டீ'க் கடைகளிலும் அல்லது பொதுச் சந்தைகளிலும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த விஷயங்களைப் பற்றி ஏகமாய்க் கூச்சலிட்டு விவரிப்பான். அப்புறம் அவைகள் அங்கிருக்கும் கூட்டத்தார் அனைவருடைய பொது விஷயமாக ஆகிவிடும். பிரபலமான ஒரு பாட்டைப் போல் ஒவ்வொரு இடமாகப் பரவ ஆரம்பிக்கும்.

'உல்லாசப் பையன்' ஒரு நாட்டுப் புறத்தான். நகரத்தில் பிறந்து வளர்ந்த அவனுடைய சகாக்களைப் போல அவ்வளவு வேகமாகவும் சீக்கிரமாகவும் அவனுக்குப் பேசவராது. பேசுவது

'சீனாவின் மார்க் டீவெயின்' என்றழைக்கப்படும் லாஉ ஷா, சீனாவில் மிகப் பிரபலமடைந்துள்ள நகைச் சுவை நாவலாசிரியர். அவர் இந்தக் கதையில் என்ன லளிதமான உணர்ச்சிகளைச் சித்தரித்து விடுகிறார், பாருங்கள்!

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |
|---|---|---|

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்




*உன்னத தயாரிப்புகள்!*

மோஹன்ராம்

பெட்ஷீட்டுகள் ★ டவல்கள்

•

**மதுரை நிட்டிங் கம்பெனியாரின்**

**M. K. C. " சிங்க மார்க் "**

**பனியன்கள், புல் ஓவர்ஸ், அண்டர் வேர்ஸ், புளவ்ஸஸ், ஸ்வெட்டர்ஸ் Etc.**

•

*Stockists :*

**மனோஹரன் ஸ்டோர்ஸ்**

**181, கீழவாசல் :: மதுரை**

**தந்தி : 'Harantalky' போன் : நெ. 219**

அதிகமில்லாததால், சிந்திக்க அவகாசம் இருந்தது. ரிக்ஷா இழுக்கத் தீர்மானித்தவுடன், நேராக ஒரு ரிக்ஷாவைப் பெறச்சென்ருன். உடைந்து போயிருந்த ஒரு பழைய ரிக்ஷாவை அவன் வாடகைக்கு எடுத்தான். கால்களுக்குச் சரியான சோதனை கொடுக்கக் கூடியதாக இருந்தது அது. முதல் நாள் ஒன்றும் சம்பாதிக்கவில்லை. இரண்டாவது தினத்தன்று நல்ல வரும்படி கிடைத்தது. ஆனல், அதற்கு அடுத்த இரண்டு தினங்களும் படுத்த படுக்கையாகக் கிடக்க வேண்டியதாகிவிட்டது. அவனுடைய கணுக்கால்கள் இரண்டு பெரிய தேங்காய் ஓடுகள் மாதிரி வீங்கிக் கொண்டன. பாதங்களைத் தூக்கவே முடியாதபடி வலித்தது. எவ்வளவு வேதனையாயிருந்தாலும், முகம் சிணுங்காமல் சகித்துக்கொண்டான். ஏனெனில், ஒவ்வொரு ரிக்ஷாக்காரனும் படவேண்டிய தவிர்க்கமுடியாத அனுபவம் இது என்பதை அவன் அறிந்திருந்தான்.

அவனுடைய கணுக்கால்கள் சரியாய்விட்டதற்கப்புறம் எதற்கும் அவன் பயப்படவில்லை. பயப்படுவதற்கு இனிமேல் ஒன்றுமேயில்லாமற்போகவே, எவ்வளவு சந்தோஷமாக இருக்கமுடியுமோ அவ்வளவு சந்தோஷமாக இருந்தான். பீக்கிங்கிலுள்ள தெருக்களும் இடங்களும் அவனுக்கு நன்ருகப் பழக்கமுள்ளவை. எப்பொழுதாவது, தான் போக வேண்டிய இடத்திற்குச் சற்று சுற்று வழியாகப் போக நேர்ந்தாலும் அவனுக்கு அது சிரமமாக இருக்காது. அதிர்ஷ்டவசமாக, அந்தத் தொழிலுக்கு அத்தியாவசியமான தேகபலம் உல்லாசப் பையனுக்கு நிறைய இருந்தது. தன்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து ரிக்ஷாவைக் கையாளவேண்டிய விதவிதமான முறைகளை — பின்புறம் தள்ளுவது, இழுப்பது, மேலே தூக்குவது, தோள்களை உபயோகிப்பது முதலிய எல்லாவற்றையும்—கற்றுக் கொள்ளுவதும் அவனுக்குக் கஷ்டமாக இல்லை.

இரண்டு மூன்று வாரக்காலத்தில், கால்களை நன்கு பழக்கப்படுத்திக்கொண்டு விட்டான். தான் கற்றுக் கொண்டிருக்கிற 'ஓடும் முறை'யும் நன்ருக இருப்பதைத் தெரிந்து கொண்டான். ஒரு ரிக்ஷாக்காரனுடைய திறமைக்கும் சக்திக்கும் அவனுடைய 'ஓட்ட முறை' தான் வெளிப் படையான அத்தாட்சி. எவனாவது ஓர் ஆசாமி ரிக்ஷா இழுக்கும் போது கால்களைப் பூமியில் அறைந்துகொண்டு, ஒரு 'தினுசாக'ச் சுற்றிச் சுற்றி நடந்தால், நிச்சயமாக அவன் தன் கிராமத்திலிருந்து அப்பொழுது தான் பட்டணத்திற்கு வந்தவனாயிருப்பான். சாதாரண நடையைக் காட்டிலும் கொஞ்சம் வேகமாக நடந்து சென்ருலும், ஓடுகிறவனைப் போன்ற தோற்றத்துடன் விளங்குவார்கள் சிலர்; சிலர் கால்களை இலேசாகப் பூமியில் தேய்த்துக்கொண்டு செல்வார்கள்; இன்னும் சிலர் தலையை நிரம்பக் குனிந்து கொண்டு ஓடுவார்கள்; இவர்களெல்லாம் வயதானவர்கள், ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள்.

ஆனல், உல்லாசப் பையனுடைய கால்கள் நீளமானவை; நடையும் வேகத்துடனிருந்தது. அனேகமாகச் சப்தமேயில்லாமல் ஓடுவதற்கேற்றபடி அவனுக்குத் தொடைகள் அமைந்திருந்தன. தடங்க வில்லாத அவனுடைய நடையும், அசங்காம

லிருந்த ரிக்ஷாவின் கைப்பிடியும் ஏறிச் செல்லும் பிரயாணிக்கு அதிகச் சுகத்தையும் சௌகர்யத்தையும் அளித்தன. நிற்க வேண்டுமானால், தன் பெரிய கால்களால் பூமியைத் தேய்த்தாற்போல இரண்டு மூன்று அடிகள் செல்வான். எவ்வளவு வேகமாகச் சென்று கொண்டிருந்தாலும், அவனால் ரிக்ஷாவைச் 'சட்' டென்று நிறுத்த முடியும். அவன் இழுத்துச் செல்லும் ரிக்ஷாவின் ஒவ்வொரு உறுப்புக்களிலும் அவனுடைய பலம் வியாபித்திருந்ததுபோலத் தோன்றியது.

ரிக்ஷாவின் கைப்பிடியை மேலோடு பிடித்தவாறு முன்புறமாகக் குனிந்துகொண்டு நிற்கும்பொழுது, அவன் தோற்றம் உறுதியும், ஜீவனும், சுறுசுறுப்பும் நிறைந்து விளங்கும்; அவசரப்படுபவன் போல ஒரு அறிகுறியும் காண்பிக்கமாட்டான். இருந்தாலும் மிக வேகமாக ஓடுவான். வாடகை விஷயத்தில் ஒரு அக்கறையு மில்லாமல் வேகமாய் ஓடுவான். தனி மனிதர்களிடம் வேலைபார்க்கும் ரிக்ஷாக்காரர்களுக்குள்கூட இது ஒரு தனிக் கௌரவமாகக் கருதப்படும்.

அவன் ஒரு புது ரிக்ஷா மாற்றிக் கொண்டான். மாற்றம் நடந்த அன்று மிகக் கவனமாக விசாரித்து வைத்துக்கொண்டான். மிருதுவான 'ஸ்பிரிங்கு' கள், பளபளப்பான பித்தளைப் பாகங்கள், மேல்பாகத்தில் மழைக்கு மறைப்பு, முன் பக்கத்திற்குத் திரை, இரண்டு விளக்குகள், நீண்ட பித்தளை ஊதுகுழல் இவ்வளவும் அமைந்திருந்த அந்த ரிக்ஷா நூறு டாலருக்குக் கொஞ்சம்மேலேயே விலைபெறும் என்பதைத் தெரிந்துகொண்டான். வர்ணம் பூசியிருந்ததும், பித்தளைப் பாகங்களும் சிறிது அரை குறையாக மட்டும் இருந்திருந்தால் நூறு டாலருக்குக் கிடைத்துவிடும்.

'சட்' டென்று அவன் தனக்குள் எண்ணிக் கொண்டான்: அவன் மட்டும் தினத்திற்குப் பத்துச் சதம் வீதம் மீத்து வந்தானுல், நூறு டாலர் சேர்க்க ஆயிரம் நாள்தான் பிடிக்கும். ஆயிரம் நாள்! ஆயிரம் நாட்களையும் சேர்த்து நினைத்துப்பார்க்கும்போது, அவனால் கடைசி நாளையே கண்டுபிடிக்க முடியவில்லை! ஆனல், அவன் தீர்மானித்துவிட்டான். ஆயிரம் நாளோ பத்தாயிரம் நாளோ எவ்வளவு நாளானுலும் சரி, ஒரு சொந்த ரிக்ஷா வாங்கித்தானுகவேண்டும்.

மூன்று வருஷங்கள் முடிவடைந்தபொழுது, அவன் கையில் நூறு டாலர் சேர்ந்திருந்தது. நல்ல வேளையாக, ஒரு ரிக்ஷாவும் அப்பொழுதான் கட்டி முடிந்திருந்தது. அதைச்செய்ய 'ஆர்டர்' கொடுத்திருந்தவனுக்கு அப்பொழுது கையில் பணம் இல்லாததால் ரிக்ஷாவை வாங்கிச் செல்ல முடியவில்லை. உல்லாசப் பையன் கனவுகண்டு கொண்டிருந்த ரிக்ஷாவிற்கும் அதற்கும் அதிக வித்தியாச மில்லை. புதியதாக வாங்கினுல் நூறு டாலருக்கு மேலேயே விலை இருக்கும். ஆனல் அதற்காகக் கொடுக்கப்பட்டிருந்த 'அச்சாரம்' முன்பே பறிமுதலாகியிருந்தபடியால், ரிக்ஷாக் கடைக்காரர்கள் அதன் மதிப்புக்குச் சிறிது குறைத்தே விற்கத் தயாராயிருந்தார்கள். உல்லாசப் பையனின் முகம் சிவந்தது; கை நடுங்கியது. தொண்ணூற்றுறு டாலரை வெளியே எடுத்தான்.

"ஒரு கம்பி விட்டுப் போனாலும் வண்டியைத் திருப்பிக் கொண்டுவந்து என் மூஞ்சியில் விட்டெறி! நூறு டாலர்! அதற்கு ஒரு பைசா குறைந்தாலும் வியாபாரம் வேண்டாம்!" என்றான் கடைக்காரன்.

'உல்லாசப் பையன்' மறுபடியும் ஒருமுறை பணத்தையெடுத்து எண்ணினான். "இந்த ரிக்ஷா எனக்கு வேண்டும். தொண்ணூற்றுறு டாலர்தான்!"

தன்னுடன் பேசிக்கொண்டிருப்பவனுக்கும் மூளையிருக்கிறது என்பதைக் கடைக்காரன் அறிந்துகொண்டான். பணத்தைப் பார்த்தான்; உல்லாசப் பையனையும் பார்த்தான். ஒரு பெருமூச்சுடன் "ஒரு சினேகிதன் வேண்டும் என்பதற்காகவே உனக்கு இந்த ரிக்ஷாவைத் தருகிறேன். ஆறு மாதத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறேன். மேல் 'பிரேம்' உடைந்து போனலொழிய, வேறு எதுவானாலும் உனக்கு இனமாக 'ரிப்பேர்' செய்து கொடுக்கிறேன். இந்தா, உத்திரவாதப் பத்திரம்—வாங்கிக் கொள்" என்றான்.

'உல்லாசப் பைய'னின் கைகள் முன்னிலும் அதிகமாக நடுங்கின. உத்தரவாதப் பத்திரத்தை வாங்கிக்கொண்டு, ரிக்ஷாவையும் கடைக்கு வெளியே இழுத்துக் கொண்டு வந்தான். உரக்கக் கத்த வேண்டும் போல் ஒரு உணர்ச்சி தோன்றியது அவனுக்கு. ஒரு தனித்த இடமாகப் பார்த்து ரிக்ஷாவை இழுத்துச் சென்றான். அங்கே, அதை—அவனுடைய சொந்த ரிக்ஷாவை—அதி கவனமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்; கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுவது போல, பளபளப்பான வர்ணத்தில் தன் முகத்தைப்பார்த்துக் கொள்ளலாம். ரிக்ஷாவைப் பார்க்கப் பார்க்க, அதன்மேல் அவனுக்கு அன்பு அதிகரித்தது; அவன் எதிர்பார்த்தபடி அமைந்திராத சிற்சில பாகங்கள்கூட இப்போது மிகச் சரியானதாகத் தோன்றின. இப்பொழுது அது அவனுடைய சொந்த ரிக்ஷாவாயிற்றே!

அதைப் பார்த்துப் பார்த்துக் களைத்துக்கூடப் போய்விட்டது. கம்பளம் விரிக்கப்பட்டிருந்த ஏறுபடியில் உட்கார்ந்துகொண்டான்; கண்கள் கைப்பிடியின் மேலிருந்த ஊதுகுழலில் லயித்தன.

'திடீ' ரென்று அந்த வருஷத்தில் தனக்கு இருபத்திரண்டு வயதாவது நினைவுக்கு வந்தது. அவனுடைய சிறிய வயதிலேயே தாயும் தந்தையும் இறந்துவிட்டார்களாதலால், அவனால் தன்னுடைய பிறந்த தினத்தை ஞாபகம் வைத்துக்கொள்ள முடியவில்லை. நகரத்திற்கு வந்த பின்னர், தன் பிறந்த தினத்தைக் கொண்டாடியதுமில்லை. இனிமேல் இன்றையத் தினமே—அவன் சொந்த ரிக்ஷா வாங்கிய தினமே—அவனுடைய பிறந்த தினம். அவனுக்கு மட்டுமல்ல, அவனுடைய ரிக்ஷாவுக்கும் இன்றுதான் பிறந்த தினம். நினைவில் வைத்துக் கொள்ளவும் இது சுலபமாக இருக்கும். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து அந்த ரிக்ஷாவைப் பெற்றிருக்கும்போது, அதையும் தன்னைப் போலவே, தன்னில் ஒரு பாகமாகவே கருதுவதில் தப்பொன்றும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

✱

# போர் ஒழியுமா?

ஜூலியன் ஹக்ஸ்லி

சண்டையிடும் குணம் மனிதனின் மனத்தில் இயற்கையாகவே படிந்து கிடப்பதாக அனேகர் நம்புகிறார்கள். இது உண்மையானால், எந்தச் சமூக, பொருளாதார, அரசியல் சக்தியும் யுத்தத்தைத் தடுக்க முடியாது போய்விடும். ஆனால், 'சண்டைக் குணம்' என்று எதுவும் மனிதனிடம் இல்லையென்றால், யுத்தத்தை நிறுத்த முடியுமென்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

யுத்தம் என்பதுதான் என்ன? இதற்கு முதலில், நாம் எது யுத்த மல்ல என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். ரத்தம் சிந்தப்பட்டாலும் சரி, சாவு ஏற்பட்டாலும் சரி, தனி நபர்களுக்குள் நடக்கும் சண்டை யுத்தமாகாது.

மனிதனுக்கு மட்டுமின்றி மிருகங்களுக்கும் இது பொருந்தும். ஓர் அரை டஜன் சிங்கங்கள் ஒரு பிராணியின் உடலுக்காகச் சண்டையிடுவதோ அல்லது இரண்டு ஆண் மான்கள் பெண் மான்களின் பொருட்டுச் சண்டையிடுவதோ யுத்தமாகாது. இரண்டு தனித் தனி இனங்களின் 'போட்டி'யை யுத்தம் என்று சொல்லுவது தவறு.

'யுத்தம்' என்பதற்கு ஒரே ஓர் அர்த்தம்தான் உண்டு — ஒரே வர்க்கத்தைச் சேர்ந்த (அல்லது நெருங்கிய சம்பந்தமுடைய) இரண்டு கட்சிகளுக்கிடையே கட்டுக்கோப்புடன் அமைக்கப்பட்டிருக்கும் தகராறு என்பதே அது. ஒரு கட்சி தன்னுடைய விருப்பத்தை இன்னொன்றின் மேல் திணிப்பதே இதன் நோக்கம். சரியாகக் கூற வேண்டுமானால், ஸ்தாபன பூர்வமாக அமைக்கப்பட்ட, உடலைப் பொறுத்த போராட்டம்.

எனக்குத் தெரிந்தவரை, யுத்தத்தை அனுஷ்டிக்கும் பிராணிகள் மூன்றுதான் இருக்கின்றன. ஒன்று தாய்ப் பால் குடித்து வளரும் இனம்—மனிதன். மற்ற இரண்டும் ஒரு வகைப் பூச்சிகள்—சில தேனீக்களும், சில எறும்புகளும்.

உண்டு வளரச் சௌகரியமாயிருக்கும் பிரதேசத்திற்காக நடக்கும் வேறு சில போராட்டங்களும் இருக்கின்றன. பாடக்கூடிய அனேக ஆண் பறவைகள், சில மீன்கள், சில ஊர்வன ஜந்துக்கள், பலவிதப் பல்லிகள் ஆகியவைகள் இந்தச் சண்டையைச் சாசுவதமாக நடத்தி வருகின்றன. ஆனால், இது உண்மையான யுத்த மல்ல. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவென்றே நிறுவப்பட்டிருக்கும் கூட்டங்கள் இதில் போர் செய்வதில்லை.

சிற்சில சமயங்களில், ஒன்றுக்கொன்று மிக அருகில் வாழ்ந்து வரும் இரண்டு எறும்புக் கூட்டங்களுக்குள், ஒரே ஆகாரப் பிரதேசத்திற்காகப் போர் மூளுகிறது. அப்பொழுது நாம் அதை யுத்தமென்று கூறலாம். போரல் இது விஷயமாக எழுதிய

போர் தவிர்க்க முடியாததுதானா? அதன் காரணங்களைப் போக்கினால், போரைத் தடுத்துவிட முடியுமா? தலை சிறந்த விஞ்ஞானியான ஆசிரியர், ஜான் புல் என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில் ஐயத்துக்கு விடையளித்து எழுதியுள்ளார். இது, அந்தக் கட்டுரையின் சாரம்.

தாவது :— "எறும்புகளுக்குள், மைதானத்தின் ஒரு பாகம், ஒரு மரம் அல்லது பல மரங்கள், ஒரு காடு அல்லது சில சமயம் ஒரு பெரிய மணற் பிரதேசம் முதலியவைகள் கூட்டுச் சொந்தமாக இருக்கின்றன. பலம் வாய்ந்த ஒரு பகுதி, இன்னொன்றை அழித்துத் தன் சாம்ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொள்ள முயலுகிறது. இது தான் யுத்தத்துக்குக் காரணம்.'' இரண்டு பகுதிகளும் கிட்டத்தட்டச் சம பலமுள்ளவையாயிருந்தால், "அவை திட்டமான முடிவு எதுவு மில்லாமல் ஒன்றையொன்று அழித்துக் கொண்டு விடுகின்றன,'' என்றும் அவர் கூறுகிறார். மனிதர்களுக்கு இது ஒரு நல்ல படிப்பினை!

அடிமைகளும் ஆகாரமும்: இப்படியாக, ஒரே சமுதாயத்தைச் சேர்ந்த ஜந்துக்களுக்கிடையே வளர்ந்து வந்திருக்கிற போராட்ட முறைக்கு, உடைமையே—அடிமைகளும், ஆகாரமுமே—முக்கியக் காரணமாய் விளங்குகிறது. உண்மையிலேயே அவைகளுக்கு உள்ளிருந்து தூண்டும் ஒரு வெறி இருப்பதனால்தான் அவைகள் அடிக்கடி இந்த மாதிரி யுத்தங்கள் நடத்துகின்றன என்பது இதன் மூலம் தெரிகிறது.

மனிதர்கள் சிற்சில சந்தர்ப்பங்களில் ஓடிப் போயோ அல்லது மறைந்து கொண்டோ தங்களைக் காத்துக் கொள்ளுகிறார்கள் என்பது வாஸ்தவம்தான். ஆனால், அவர்களுக்குள் சண்டைக் குணம் அடங்கி மறைந்து கிடக்கிறது. மனிதனல்லாத மற்றப் பிராணிகள் பிரதேசத்திற்காகச் சண்டையிடுவது போல, மனிதனும் அவனுடைய வீடு, தோழன், குடும்பம் அல்லது சொத்து இவைகளின் பொருட்டுச் சண்டையிடத் தயாராகவே இருக்கிறான். அத்துடன், மனிதனின் வளர்ச்சியில் இந்த 'உடைமை ஆதிபத்திய வெறி' வெகு காலமாக முக்கிய பாகம் வகித்துவந் திருக்கிறது. மனித ஜாதி ஏற்படுவதற்கு முந்தியும், மனித ஜாதி அரைகுறையாக ஏற்பட்டிருந்தபோதும், மனித ஜாதியின் ஆரம்பக் காலத்திலும் இந்தக் குணம் நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். சகஜமாக வாழ்ந்துவரும் கூட்டங்களுக்குள், ஆகாரத்திற்காகவோ அல்லது பிரதேசத் தேவைகளுக்காகவோ போட்டி ஏற்பட்ட பொழுதெல்லாம் இது அனுஷ்டானத்தில் இருந்தது என்பதில் சந்தேக மில்லை.

வாஸ்தவத்தில், யுத்தத்தின் அஸ்திவாரம் என்று சொல்லக் கூடியது, போராட்டத்தில் மனிதனுக்குள்ள ஒரு ஆசைதான் — அந்தரங்கத்திலிருக்கும் ஒரு முரண்டுதல்தான். ஆனால், இதுகூட, வார்த்தையின் அர்த்தத்தைப் பொறுத்த வரையில் சரியான தல்ல.

அதை ஒரு வேகம், ஆத்திரம் அல்லது தூண்டுதல் என்று சொன்னால்தான் மிகச் சரியாக இருக்கும். ஆனால் அளவுக்கு மிஞ்சி இதையே குறை கூற முடியாது. மனிதனின் முரண்டுதல் என்கிற உருவத்தில் வேறொரு இயற்கையான மனத் தூண்டுதலும் இருக்கத்தான் இருக்கிறது.

உண்மையான யுத்த 'உணர்ச்சி' யுத்தத்தைத் தவிர்க்க முடியாததாகச் செய்துவிடும்; ஆனால் மனிதனின் 'முரண்டுத'லோ யுத்தத்தைச் சாத்தியமானதாக மட்டுமே செய்கிறது. இந்த சாத்

தியத் தன்மை யுத்தத்திலேயே கொண்டு விட்டு விடுவதால், நம்முடைய 'தூண்டும் வெறி'யை நாம் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்; பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்; பகுத்தறிவிற்கு ஒட்டியதாக இயக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, நம்முடைய மற்ற உத்வேகங்களுடனும், அபிலாஷைகளுடனும், உணர்ச்சிகளுடனும், மனநிலைகளுடனும் இதைப் பிணைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மனோதத்துவ ஞானியான மாக்டகால் கூறும்—'உணர்வு'-வேண்டுமென்று அமைக்கப்பட்ட ஒரு எண்ணம் அல்லது மன அமைப்பின் ஒரு பாகம்—உருவாகும்.

இப்படி நம்முடைய 'சண்டைக் குண'த்துடன் இணைக்கப்படுவதற்கு மனோதத்துவ சம்பந்தமான அனேக விஷயங்கள் இருக்கின்றன. தேசபக்தி, அதிகார ஆசை, புகழுக்கு ஆசை, சுய சிரத்தை, பயம், தன்னைத் தவிர மற்றவைகளிடம் இருக்கும் பிடித்தமின்மை, மேன்மையுணர்ச்சி, வெட்க உணர்ச்சி, ஒருவனுடைய அல்லது ஒரு வர்க்கத்தினுடைய லட்சியத்தில் நம்பிக்கை, இன்னும் பல விஷயங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இந்த மாதிரியான 'உணர்'வை அல்லது 'எண்ண'த்தை ஒவ்வொருவனும் தன்னில் தானேதான் வளர்க்க வேண்டும்.

பழைய நாட்களில் அமெரிக்க இந்தியர்களுக்குள் இருந்தது போலவோ அல்லது சமீபத்திய வீழ்ச்சிக் காலங்களில் ஜெர்மனியில் இருந்தது போலவோ, தனிப் பரம்பரை அல்லது தனிச் சமூகம் என்று இருப்பதும், இந்த 'யுத்த உணர்'வின் வளர்ச்சிக்குக் காரண மாகிறது. ஒரு அநியாயமான தாக்குதலால் ஆத்திரம் ஏற்பட்டும் இந்த உணர்வு பிறக்கலாம். ஆனால் குத்திக் கிளப்பப்படும் சமயத்தில் கூட ஒருவிதப் பக்குவமும், உணர்ச்சியடக்கமும் மனிதனுக்கு இருக்க வேண்டும்.

**யுத்தம் ஒரு 'மயக்க உணர்வு':** இந்த யுத்த 'மயக்கம்' யுத்தத்தைச் சாத்தியமான தாக்கிக் கொண்டு இருக்கிறதென்றால், அந்த மயக்கத்தை ஏதாவது ஒரு வழியில் சீர்ப்படுத்திக் கொண்டுதான் செல்ல வேண்டும். ஆனால், இந்த வளர்ச்சிக்கு ஏற்றபடிச் சந்தர்ப்பங்களும் அமைதல் அவசியம். இதற்குக் கீழ்க்கண்ட இரண்டு அம்சங்களைக் கவனிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட மனிதவர்க்கம், வம்சமாகவோ அல்லது அரசுகளாகவோ, சாம்ராஜ்யங்களாகவோ, அன்றி நவீன தேசிய இனங்களாகவோ, எப்படி இருந்தாலும் சரி, ஒன்றுக்கொன்று பலமாக இணைக்கப்பட்டத் தனிச் சமூகங்களாக நிறுவப்பட வேண்டும். இது முக்கியமான முதல் நிபந்தனை. இரண்டாவதாக, இந்தக் கூட்டங்களுக்குள் வேட்டை நிலத்திற்கோ அல்லது எண்ணெய்ப் பிரதேசங்களுக்கோ, அன்றி குடியேற்ற இடத்திற்கோ அல்லது உலகச் சந்தைக்கோ ஏதாவது ஒன்றின் பொருட்டு, ஏதேனும் ஒரு வழியில் தீவிரமான போட்டி இருக்க வேண்டும்.

இப்படியாக, யுத்தம் என்பது உள்ளினங்களின் பலம் வாய்ந்த தீவிரப் போட்டியாக மாறி விடுகின்றது. இவற்றின் விளைவுகளால் யாருக்கும் கெடுதியில்லை.

ஒருகால், மொத்தமாகப் பார்க்கும் பொழுது சமுதாயத்திற்குச் சிறு தீமை விளைவிக்கக் கூடியதாக இருக்கலாம். சமுதாயம் நிறுவப்பட்டு வளர்ந்து வரும் பொழுது ஏதாவது ஒரு கட்டத்தில் இது தவிர்க்க முடியாததாகவே வரும். என்றாலும், நாளடைவில் மனிதனின் பொங்கி வரும் ஆத்திரத்தை இது தாமதப் படுத்தும். தடைப்படுத்திவிடவும் கூடும்.

மனிதனுக்குள் தானாக இயங்கி வரும் முரண்டுதல் அல்ல இது, பக்குவப்படுத்தப் படவேண்டிய யுத்த 'மயக்கம்'தான் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுதும், நார்மன் கஸின்ஸ் கூறியதுபோல, 'கடந்த நாட்களில் மனிதனின் யுத்தத் தன்மையைத் தூண்டிவிட்ட நிலைமைகள் மேலும் நீடிக்குமேயாகில், மனிதனுக்கு யுத்தத்தில் இருக்கும் நாட்டமும் நீடிக்கத்தான் செய்யும்.'

யுத்தத்தின் சாத்தியத்தையும் நிகழ்வையும் குறைத்தாற் கூடப் போதுமானது. இதற்கு ஒரு வழி, மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தனித் தனிக் கூட்டங்களைக் குறைப்பது—அதாவது, ஒன்றுபட்ட ஒரு உலக ஸ்தாபனத்தை நிறுவுவது. வேறொரு வழி, கூட்டங்களுக்குள்ளே இருக்கும் போட்டியின் நெருக்கத்தைக் குறைப்பது—அதாவது உலகமெங்கிலும் உற்பத்தித் தரத்தைப் பெருக்குவது. இரண்டையும் சேர்த்துச் செய்வதானால், இன்னும் நல்லது.

தேசங்கள் கட்டுப்படுத்தப் படாமல் மிதமிஞ்சிய பலமுடையதாக இருப்பதும் யுத்தத்திற்குக் காரணமாகிறது. உண்மையிலேயே யுத்தத்தை நிறுத்த வேண்டுமானால் அதற்கு நாம் சமுதாயிகத்துவத்தை எந்த வழியிலும் அழித்துவிடக் கூடாது. ஆனால் அதை உலக சக்திக்கு அடங்கினதாகச் செய்துவிட வேண்டும். உள்ளூர் நிர்வாகிகள் எப்படி தேச அரசாங்கத்திற்கு அடங்கினவர்களாக இருக்கிறார்களோ, அதே போல தேச அரசாங்கங்களும் ஒரே உலக அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டும்.

ஒரு தனிப்பட்ட உலக அரசாங்கம் ஏற்பட்டு விட்டாலுங் கூட, புரட்சி அல்லது உள்நாட்டுக் கலகம் என்கிற ரூபத்தில் யுத்தம் ஏற்படலாம். இந்த நெருக்கடியையும் தவிர்க்க, உலக நன்மைக்காக, பல்வேறு இனங்கள் அல்லது பிரதேசங்கள் ஆகியவற்றுக் கிடையே இருக்கும் போட்டியையும் குறைந்த பட்ச அளவிற்குக் கொண்டுவர வேண்டும். குறைவற்ற ஒரு உலகத்தை சிருஷ்டிப்பது என்பதே இதன் அர்த்தம். இந்தக் 'குறைவற்ற தன்மை'யும் உலக மெங்கிலும் ஒரே சீராகப் பரவுவதுதான் நல்லது.

கடைசியாக, 'யுத்தத்தின் அவல நீதி' என்று சொல்லப்படும் விஷயத்தைக் கண்டுபிடித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், மனிதனுடைய வெறியையும், குமுறலையும் தூண்டிவிடக் கூடிய வேகத்திற்கு இதில் இடுக்கு இருக்கிறது.

இது நம்முடன் இருந்தே தீரும். உயர்ந்த நோக்கங்களைக் கொண்ட ஏதாவது ஒரு வகைச் செயல் முறையினால் தான் இதை ஒழிக்க முடியும். ஒன்றுபட்ட

ஒரு உலக அரசாங்கத்தையும், ஒரே மாதிரியான வாழ்க்கைத் தரத்தையும் நிறுவி விட்டோமானல், அந்தப் பிரச்னையையும் முழுவதுமோ அல்லது ஓரளவிற்கோ சமாளித்து விடலாம்.

'முரண்டுத'லை ஒழித்தல்: தகுந்த காலம் வரும்பொழுது இதை ஏன் வெற்றிகரமாகச் சமாளிக்க முடியாது? பல்வேறு வகை மக்களுக்கு எதைச் செய்தால் அவர்களுக்கு உகந்ததாயும் திருப்தியாயும் இருக்கும் என்பதைக் கண்டுபிடிக்க நிறைய மனேதத்துவ ஞானம் வேண்டும்; தேவையான வேலைகளும், ஓழிவு நேர அலுவல்களும் சரியான அளவில் எல்லோருக்கும் வழங்கப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க நிறைய ஸ்தாபனங்கள் வேண்டும்; ஜனங்களிடையே பிரசாரங்கள் செய்து, கல்வியறிவைப் பரப்ப வேண்டும்; அவர்கள் தங்களுடைய அப்போதைய வாழ்க்கை முறையும் நடைமுறைச் செயல்களும் எக்காலத்துக்கும் நன்மை பயக்கக் கூடியவை என்பதை உணரும்படி செய்யவேண்டும்.

எல்லாவற்றையும் சுருங்கக் கூறுகிறேன். பொதுவாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட வழியிலோ யுத்தம் நடத்த வேண்டும் என்று மனிதனுக்குள்ளே ஒரு இயற்கை உணர்வு இருப்பதாகக் கூறுவதைச் சரீர சாஸ்திரி அடியோடு மறுக்கிறன். ஆனல் யுத்த 'மயக்க'த்துக்கு ஆஸ்தவாரமிடக்கூடிய வெறியின் வேகம் அல்லது தூண்டுதல் நிச்சயம் இருக்கிறது. மனிதனின் இந்த இயற்கைக்குப் புறச் சூழ் நிலைகள் இடங் கொடுத்துக்கொண்டிருந்தாலும், அல்லது அனுமதித்துக்கொண் டிருந்தாலும், இது யுத்தத்தில் அவனை இறக்கியே தீரும். ஆனல் உலக முழுமைக்கும் பொதுவான ஒரு அரசாங்கத்தை நிறுவி, பொது உற்பத்தியையும் பெருக்கினேமானல், மனிதனுடைய சண்டை வெறிக்கு இடங்கொடுக்கும் உலகச் சூழ்நிலைகள் தானகவே மாறி விடும்.

✲

## 'சக்தி' எப்படி?

கோடிக் கணக்கான தமிழர்களில் லட்சக் கணக்கானவர்களே படித்தவர்கள். இவர்களில், படிப்பால் வரும் பயனைச் சரியாய் அடையும் வாய்ப்புப் பெற்றவர்கள் பல ஆயிரம் பேர்தான். அவர்களில் ஒருவராகிய நீங்கள்தான் 'சக்தி'யின் உயிர். உங்களுடைய கடந்த கால, நிகழ் கால வளர்ச்சியைப் பிரதிபலிப்பதோடு, உங்களது எதிர் கால வளர்ச்சிக்கான முறையில் உங்களுடன் தாராளமாய்க் கலந்து பேசி, முன்னேறுவதே எங்கள் நோக்கம். மாறுதல் வளர்ச்சிக்கு அறிகுறி. வளரும்போது தவறுகள் நிகழும். தவறுகள் நிகழ்வது தடுக்க முடியாத நிகழ்ச்சி. நாங்கள் தவறும்போதும், தவறுவதாக உங்களுக்குத் தோன்றும் போதும், நீங்கள் நிச்சயமாய் உங்கள் கருத்தை எங்களுக்குத் தெரிவிக்கத்தான் செய்வீர்கள். ஆனல், அது போதாது: வாசகருக்கும் ஆசிரியருக்கு மிடையே அடிக்கடி கருத்துப் பரிமாறல் இருப்பது மிக நன்று. ஒரோ வேளை, பக்கத்துச் சூழ் நிலையைக் கொண்டே தூரத்துச் சூழ் நிலையின் போக்கை மதிப்பிட வேண்டியது கட்டாய மாகிவிடுகிறது. இரு தரத்தாருக்கும் அது நல்ல தல்ல. ஆகவே, உங்கள் கருத்தை அடிக்கடி, தாராளமாய், மனம் விட்டு எழுதுங்கள். உங்கள் திருப்தி எங்களுக்கு லாபம். எங்கள் திருப்தி உங்களுக்கு லாபம்.—என்ன, நான் சொல்வது சரிதானே?

—ஆசிரியர், சக்தி


LUX
TOILET SOAP
"அழகையளிக்கும் உத்தமமான சோப்
லக்ஸ் டாய்லட்"
என்கிருர்
ஊர்மிளா தேவி
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப் !
LTS. 143-111-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கும்பகோணம்

## டி.எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை

கூந்தல் வளர்ச்சிக்கும்

சிரசின் குளிர்ச்சிக்கும்

சந்தனாதி, அரைக்கீரைவிதைத் தைலங்களையும்

உபயோகியுங்கள்

மதராஸ் ஸிட்டி ஏஜண்ட்:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
மதராஸ்

கோயமுத்தூருக்கு சோல் ஏஜண்ட்:

B. பால பட்டாபி செட்டியார்
246, வைஸ்யாள் தெரு
கோயம்புத்தூர்






## இருமல், ஜலதோஷங்களுக்கு நம்பிக்கைவாய்ந்த ஓர் சிறந்த நிவாரணி!

# ஸிரோலின்

'ரோச்'

# அமைதி குலைவது ஏன்?

●

**ஞானிகள் குழு**

டாக்டர் ஜோட்: அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் இன்னொரு யுத்தம் ஏற்படலாம் என்று நாம் எல்லோரும் நினைப்பதாக வைத்துக் கொள்வோம்.....

புரொபஸர் கோல்: உலக யுத்தம் வருமென்று எண்ணுகிறீர்கள்? நான் அவ்வாறு நினைக்கவில்லை.

டாக்டர் ஜோட்: ஒரு பேச்சுக்கு, இன்னொரு யுத்தம் வருவதாக வைத்துக் கொள்வோமே. அம் மாதிரி ஏற்பட்டால் அதற்குக் காரணம் என்ன கூறுவீர்கள்?

சர் கென்னத் கிளார்க்: எந்தக் காரணங்களால் எப்போதும் யுத்தம் ஏற்படுகிறதோ அவற்றாலேயே இந்த யுத்தமும் ஏற்படும் என்றுதான் எண்ணுகிறேன். உள்ளக் கிளர்ச்சிகளுக்கு இணங்கியே போரிட்டு வந்திருக்கிறார்கள். அவற்றில் பெரும்பாலானவை மட்டமானவை. சிறந்தனவும் அவற்றிலுண்டு. ஆனால், யுத்தங்கள் பொதுவாக.........

டாக்டர் ஜோட்: பேராசை, பயம், காமம், பேராவல்—இவற்றாலேயே ஏற்படுகின்றன.

சர் கென்னத் கிளார்க்: ஆமாம். வேறு ஒரு காரணத்தினாலும் யுத்தங்கள் ஏற்படுவதுண்டு. பேராவலைவிட இதை எதிர்ப்பது மிகவும் கடினமானது. மிதமிஞ்சிய உடல் துடிப்புதான் அது. யுத்தம் செய்ய விரும்பாத நாடுகள் இந்த உடல் துடிப்பை—இழந்து விட்டனவாகும். இந்த உடல் துடிப்பினால்தான் நாம் வாழ்கிறோம். ஒரு தேசத்தை ஓங்கச் செய்வதும் இதுவே.

டாக்டர் ஜோட்: நாகரிகத்தைப் பற்றி அடிக்கடி கூறப்படும் ஒரு குறையையே நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். இளைஞர்களின் இயற்கையான உடல் துடிப்புக்கு—வீர்யத்தினவிற்குச் செவ்விய முறையில் வெளிப்பட என்ன வசதியை நாகரிகம் அளித்திருக்கிறது? பள்ளிக்கூடத்தை விட்ட பிறகு, விளையாடுவதை நிறுத்திய பிறகு, நாம் அவர்களுக்கு என்ன வேலை கொடுக்கிறோம்?

கணக்குப் பிள்ளை வேலையோ, யந்திரத்தோடு மாரடிக்கும் வேலையோ நாம் அவர்களுக்குக் கொடுக்கிறோம். ஏன் யுத்தம் வராது? பாசிஸம் கூடத்தான் வரும்.

டீன்: நீங்கள் சொல்வதை முழுவதும் நான் ஒப்பவில்லை. யுத்த வெறியர்களின் மனத்தில், உடல் துடிப்பு (வீர்யத்தினவு) என்பது ஏதோவொரு நோக்கம் லக்ஷியம், கொள்கை அல்லது மதம் ஒட்டிய தத்துவம்—இவற்றோடேதான் எப்போதும் இணைந்து நிற்கிறது. சமூகத்தினுடைய வாழ்வின் போக்கை நேரிய முறையில் மாற்றியமைக்கும் மகத்தான புனிதப் பொறுப்பு தங்களைச் சார்ந்திருப்பதாக இவர்கள் கருதுகிறார்கள். அதோடு, இதனை உலகம் ஏற்கு

பிரிட்டிஷ் "அறிஞர் குழுவினர்" தமது நாட்டு நலனையும், உலக நலனையும்பற்றி அவ்வப்போது சிந்தித்து வழி காட்டி வருகிறார்கள். பல மாதங்களுக்கு முன் வேர்ல்டு ரெவ்யூ வில் வெளியான இந்த விஷயம் இன்னும் பசுமையோடு இருக்கிறது.

மாறுசெய்வதும் தங்கள் கடமை என்று இவர்கள் நம்புகிறார்கள்.

புரொபஸர் கோல்: தன் கொள்கைகளை உலகின்மேல் பலவந்தமாகத் திணிக்க முயலும் நாடு ஒன்று இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். உலகமே இன்று மகத்தான சக்திவாய்ந்த இரு பெரும் தொகுதிகளாகப் பிரிந்து நிற்கிறது. இது மிகவும் அபாயகரமானது என்று நான் அஞ்சுகிறேன்.

டாக்டர் ஜோட்: அமெரிக்காவையும் ருஷ்யாவையுந் தானே குறிப்பிடுகிறீர்கள்?

புரொபஸர் கோல்: ஆமாம். அவ்விரண்டு நாடுகளும் வெவ்வேறு போக்கிலே சிந்திக்கின்றன. சரியான உலகஅமைப்புப் பற்றி இரு நாடுகளும் முற்றும் மாறுபட்ட கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்டுள்ளன.

உலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை சம்பந்தமாக அவ்விரு நாடுகளுக்கிடையே போர் மூளுவதைத் தடுக்க முடியாதென்றே தோன்றுகிறது.

டாக்டர் ஜோட்: அத்தகைய போர் தவிர்க்க முடியாததென்றா நினைக்கிறீர்கள்?

இந்தச் சந்தர்ப்பத்தில் சரித்திரம் என்ன சொல்கிறதென்று பார்ப்போம். வாழ்க்கை முறை, நாட்டு ஆட்சிமுறை—இவை பற்றிய மாறுபட்ட கொள்கைகள் எப்போதுமே யுத்தத்தைக் கிளப்பிவிட்டிருக்கின்றனவா?

அமெரிக்கர், ஆங்கிலேயர், ரஷ்யர் இவர்களின் வாழ்வு முறைகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்ளாது, தனித்தனியே ஒரே சமயத்தில் உலகத்தில் நிலைத்திருப்பது சாத்தியமில்லையா?

புரொபஸர் கோல்: வாஸ்தவம். அடிப்படைக் கருத்துக்கள், அமைப்பு முறைகளில் முரண்பட்டாலும், உலக விவகாரங்களில் ஒரு குறிப்பிட்ட அளவில் இவற்றிற்கிடையே ஒத்துழைப்பு சாத்தியமாக்கும் ஒரு அடிப்படையைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், உலகத்தில் இரண்டு வல்லரசுகள் மட்டுமே இருக்குமானால் ஒத்துழைப்பு என்பது துர்லபந்தான். பல்வேறு சக்திகள் வேலை செய்யும்போது உலக அமைதியை (சம நிலையை) குலைக்க யாரும் துணியார்.

டாக்டர் ஜோட்: எதிர்காலம் இருண்டிருக்கும் என்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டினால் ஒரு விஷயம் தெளிவாகத் தெரியும். பல வேறு சமயங்களில் தேசங்களின் வளர்ச்சியிலே ஒரு புது மாதிரியான 'கூட்ட'த்தைக் காண்கிறோம். படையெடுப்பு, விஸ்தரிப்பு மூலம் இந்தப் பண்பு வெளிப்படுவதுண்டு. இந்த நிலையில் இருக்கும் நாடு வெளித் தலையீட்டையோ, எதிர்ப்பையோ சகிப்பதில்லை. இதன் விளைவாக யுத்தம் மூண்டு விடுகிறது.

இத்தகைய ஒரு 'விஸ்தரிப்பு' நிலையில் இன்றைய ருஷ்யா இருப்பதைக் காணலாம். மக்கள் மனப்போக்கு, ஆட்சிமுறை இவற்றில் அதற்கு வேண்டிய பண்புகள் எல்லாம் பூரணமாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

புரொபஸர் கோல்: ஒரு விதத்தில் அது உண்மை என்பதை ஒப்புகிறேன். ரஷ்யரின் இந்தப் போக்கு ஆபத்தானது என்றோ, அதனால் யுத்தம் விளையக்கூடுமென்றோ நான் நம்பவில்லை. வெளித் தாக்குதல் ஏதும் ஏற்படாதென்ற நம்பிக்கை ஏற்பட்டு

விட்டால், அவர்கள் உள்நாட்டு வளர்ச்சியில் ஈடுபடக்கூடும்.

டாக்டர் ஜோட்: ஜெர்மனி முழுமைக்கும் உணவளிக்கும் பிரச்னை ஒரு சோதனையாக விளங்கலாம். இதில் ருஷ்யா ஒத்துழைக்குமா என்பது முக்கியமான கேள்வி. யால்ட்டா மகாநாட்டின் போது ஒத்துழைப்பின் அறிகுறிகள் தென்பட்டன. அதன் பிறகு நாளடைவில் மூவல்லரசுகள் தமக்குள் பிரிந்து வெகு தூரம் தனித்துப் போய் விட்டனர். அதன் விளைவாக, சர்வதேச நடவடிக்கை பற்றி விவாதம் எழும்போதெல்லாம் ரஷ்யா ஒத்துழைக்க மறுத்து வருகிறது. எங்களில் யாரையும்விட இது விஷயமாக உங்களுக்கு அதிகம் தெரியு மென்கிறீர்கள். ருஷ்யர் என் அத்தகைய மனோபாவம் கொண்டிருக்கிறார்கள்? என் அவர்கள் அவ்விதம் நடந்து கொள்கிறார்கள்? நாம் அறியாததும் அபிப்பிராய பேதம் ஏற்படக் கூடியதுமான விசேஷ காரணம் இருக்கிறதா?

புரொபஸர் கோல்: மத்திய ஐரோப்பா வரை பரவி நிற்கும் ஒரு ருஷ்யச் செல்வாக்கு மண்டலம் ஏற்பட வேண்டும். ஐரோப்பாவின் பிரச்னைகளைத் தீர்க்க இதுவே வழி. இந்தக் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்படும் வரை ருஷ்யர் வேறு எதிலும் கலந்து கொள்ளார்.

ஜோட்: எப்போதுமே இது தான் அவர்கள் கொள்கையா? அல்லது இவ்விதத் தற்காப்பு மனோபாவம் அவர்கள் கைக் கொள்ளுமாறு யால்ட்டா சந்திப்பிற்குப் பிறகு ஏதாவது நிகழ்ந்ததா?

கோல்: கிரீஸில் நாமும், போலந்து, ருமேனியா, பல்கேரியா, ஆஸ்திரியா—இந்நாடுகளில் நாமும் அமெரிக்கரும் நடந்துகொண்ட விதமே ருஷ்யர் இத்தகைய மனோபாவம் கொள்ளுவதற்குக் காரணமாகும். இது தப்போ சரியோ அது வேறு விஷயம். என்னைப் பொறுத்தமட்டில், இது காலநிலையின் தவிர்க்க முடியாத விளைவு என்றே தோன்றுகிறது.

ஜோட்: மத்திய ஐரோப்பா வரை வியாபிக்கும் பரந்த எல்லைக்குள் ருஷ்யர் நிலைபெற்றுவிட விரும்புகிறார்கள் என்று சொல்கிறீர்கள்? அப்படியானால், ஒத்துழைப்பு என்பது சாத்தியமே அல்ல.

நீங்கள் மனத்தில் கொண்டுள்ள திட்டங்களால் பொது விசுவாசத்திற்கு ஏற்ற அடிப்படை சாத்தியமாகலாம். யுத்தத்திற்குத் தூண்டும் உணர்ச்சிகளுக்கும் வேறு வெளிப்போக்கு ஏற்படலாம். ஆனால் உங்கள் திட்டங்களால் அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்குமே நன்மை விளையலாம். இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையே யுத்தம் ஏற்படுவதற்கு காரணமில்லை இவைகளில் எதனாலும் யுத்தம் வருமென்றும் பயப்பட வேண்டாம்.

சர் கென்னத் கிளார்க்: நீங்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். ஒரு முட்டாளின் சுவர்க்கத்தில் நாம் வாழ்கிறோம். இதுதான் உண்மை. ஐரோப்பாவை நன்கறிந்த எவரும் இதை உணர்வர்.

உலக நாடுகளின் வளர்ச்சி பல திறத்ததாக இருக்கிறது. பெரிய வல்லரசுகள் மூப்படைகின்றன. அவற்றின் ஆசைகள் பூர்த்தி யடைந்த நிலையில் போர் உணர்வின்றி அமைதியை நாடு

கின்றன. உதாரணமாக இங்கிலாந்தையும் பிரான்சையும் சொல்லலாம். ஆனால் அதே சமயத்தில் பல புதிய நாடுகள் மும்முரமாகத் தலை தூக்குகின்றன. நிரந்தரமான தேசிய அபிலாஷைகளால் உந்தப்பட்டு, வல்லரசுகளாக வளரும் முயற்சியில் ஏற்கனவே இருந்துவரும் உலக அமைப்பைக் கவிழ்த்து விடுகின்றன. உலகம் அதன் பல்வேறு பிரிவுகளான நாடுகள் சம்பந்தப்பட்ட அளவில், ஒரே நிலைமையில் முன்னேறுவதில்லை. சில நாடுகள் பொதுஜன நன்மையைப் பிரதானமாகக் கோருகின்றன. யுத்தத்தை ஒறுத்து, வாழ்வில் ஒரு அமைதியான போக்கை விரும்புகின்றன. பிறநாடுகள்—புதிய நாடுகள் — அம் மாதிரி இல்லை. ஒரவாய் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருக்கையில் ஆடு மர உணவை ஆதரிப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது?

இன்னொரு யுத்தம் மூளாது தடுக்க முடியுமா வென்பது சர்வ தேசிய ஒருமை சாத்தியமாகும்படி பெரிய வல்லரசுகளிடை ஏற்படும் ஒத்துழைப்பின் அளவைப் பொறுத்திருக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்கா—இந் நாடுகளில் உலக ஒருமை உணர்வு சாத்தியமானது, சுலபமானது என்பதில் நமக்குள் மன பேதம் கிடையாது. இந்த நாடுகளில் இது முக்கியமாக அவசியமில்லை. ருஷ்யா விஷயம்தான் கேள்வி. அந்நாட்டைப்பற்றி நாம் என்ன சொல்வது?

**கோல்:** ருஷ்யர்கள் தங்களுடைய உள்நாட்டு நிலையை நன்கு வலுப்படுத்திக் கொண்டு, இங்கிலாந்து-அமெரிக்காவிற்குச் சமமான முன்னேற்றமும் வளர்ச்சியும் அடையும் வரை பொதுவான எந்தக் கொள்கையும் சாத்தியமில்லை என்று நாங்கள் நினைக்கிறோம். கிழக்கு ஐரோப்பாவில் அவர்களுக்கென்று ஒரு பகுதியைக் கொடுக்க முடியுமானால், அவர்கள் யுத்த காலத்திய ராணுவ 'விஸ்தரிப்'பிற்கு மாறானதும், யுத்த முற்கால வருஷங்களில் நடந்துவந்த ஆக்கம் நிறைந்த சமூக 'விஸ்தரிப்பு' வேலையைத் தொடங்குவர் என்று நாம் நம்புகிறோம். ஆனால் இது வெறும் நம்பிக்கைதான். ஒருவரும் இதை நிரூபிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்.

**ஜோட்:** இதற்கிடையே, ருஷ்யா இல்லாமலே நம்மில் மற்றவர்கள் நம்மால் இயன்ற வரை முயன்று முன்னேறுவோம். பத்து அல்லது இருபது வருஷ காலத்தில் நிலைமை மாறும். இன்று சாத்தியமில்லாததுபோல் தோன்றுவது அன்று சாத்தியமானதாகி விடும் என்று நம்புவோம்.

**கோல்:** தற்போதைக்கு அதற்காக நாம் ஒன்று சேர்ந்து பாடுபடுவோம். உலகின் மற்ற பாகங்களில் அத்தகைய ஒத்துழைக்கும் உணர்வை சாத்தியமான வரை ஊக்கி வருவோம். ஐரோப்பாவிற்கு உணவளித்தல், உணவுத் தரங்களை உலகெங்கும் உயர்த்துதல் போன்ற குறிப்பிட்ட குறுகிய வேலைகளைச் செய்தாகவேண்டும். ஓரளவிற்காவது அவற்றை நம்மால் செய்ய முடியும். அத்தகைய வேலைகளை நாம் மேற்கொள்வோம். அதன் அவசியத்தை உணர்த்திப் பிறர் உள்ளங்களிலும் அதற்கேற்ற உணர்வைத் தூண்டுவோம்.

✻

# மார்க்ஸீயப் பொருளாதாரம்

●

ரா. ஹாலாஸ்ய நாதன்

II

பல நூறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மனிதன் குரங்கிலிருந்து பரிணமித்தான் என்று விஞ்ஞான அறிஞர்கள் கூறுகிருர்கள். சார்ல்ஸ் டார்வின் இந்த உண்மையை ஆதார பூர்வமாக நிரூபித்திருக்கிருர்.

குரங்கிலிருந்து பரிணமித்த பின்பு, குழந்தைப் பருவத்திலிருந்த மனித வர்க்கம், பல நூறுயிரம் ஆண்டுகள் வரையிலும் தனது முன்ஞேர்களைப் போல் மரங்களிலேயே வாழ்ந்து வந்தது. ஆதி மனிதர்களின் உணவு, பழங்கள், கொட்டைகள், கிழங்குகள் முதலியனதான்.

மனித வர்க்கத்திற்கும், மிருகங்களுக்கும் இடையே உள்ள முக்கியமான வித்தியாசமென்ன? ஏன் மனிதனை உயர்ந்தவன் என்று அழைக்கிறேம்? மனிதன் தனக்குத் தேவையான பொருள்களைத் தானே உற்பத்தி செய்கிருன். அதாவது, கருவிகளை உண்டாக்குகிருன்; அவைகளை உபயோகித்து, தனக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்கிருன்.

"மனிதன் எவ்வளவு தூரம் இயற்கைமீது ஆதிக்கம் செலுத்துகிருன் என்பது, மனிதன் உணவை உற்பத்தி செய்வதில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிருன் என்பதைப் பொறுத்திருக்கிறது. மனித வர்க்கம் மாத்திரம் தான், உணவை உற்பத்தி செய்கிறது. தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதில் எவ்வளவு தூரம் முன்னேறுகிருன் என்பதைப் பொறுத்திருக்கிறது மனித வர்க்கத்தின் அபிவிருத்தி" என்று லூயி எச். மார்கன் "ஆதி மனிதர்களின் சரித்திரம்" என்ற புத்தகத்தில் வரைகிருர்.

உணவையும், வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையும் எப்படி உற்பத்தி செய்தான், எந்தக் கருவிகளை உபயோகித்தான் என்பதைப் பொறுத்திருக்கிறது மனித வர்க்கத்தின் சமூக, பொருளாதார, அரசியல் சட்ட திட்டங்களும், ஸ்தாபனங்களும். உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும், சமூக உறவுக்கும் உகந்தபடி சமூகக் கோட்பாடுகளும் அமைகின்றன.

ஆதி மனிதர்கள் அம்பு, வில், கற்களால் செய்யப்பட்ட கருவிகள் முதலியவைகளைத்தான் உபயோகித்தார்கள். பழங்கள், கொட்டைகள், கிழங்குகள் ஆகியவைகளோடு, வேட்டையாடின மிருகங்களும் ஆதி மனிதர்களின் முக்கியமான உணவுப் பொருள்களாக இருந்தன.

அந்தக் காலத்தில் துப்பாக்கி முதலிய நவீன ஆயுதங்கள் கிடையாது. எனவே, தனி மனிதர்கள் வேட்டையாடி, விலங்குகளைக் கொல்வது சாத்தியமல்ல. கூட்டமாகவே, வேட்டைத் தொழிலை நடத்தி வந்தார்கள். எனவே, ஆதி மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தார்கள். உற்பத்தி சக்தி மிக மிகக் குறைவாக இருந்த

புராதன காலத்தில் பொதுவுடைமைச் சமூகம் எப்படி இருந்துவந்த தென்பதை இந்தக் கட்டுரை விளக்குகிறது. அடுத்த இதழில் **அடிமைச் சமூகம், நிலப் பிரபுத்துவச் சமூகம்** பற்றி எழுதப் பெறும்.

னால், சுய தேவையைக்கூட திருப்தி செய்து கொள்ள முடியாத நிலைமையிலிருந்தான் மனிதன். எனவே, விற்பனைக்காகப் பண்டங்களை உற்பத்தி செய்யவில்லை. இந்தச் சமூகத்தில் சுரண்டுதலுக்கு இடமேயில்லை. ஒருவன் உழைப்பை, மற்றொருவன் திருடுவதற்கு இடமே கிடையாது. எனவே, கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மக்கள், கூட்டாக வேலை செய்து, கூட்டாகவே உழைப்பின் பலனை அனுபவித்து வந்தார்கள்.

இந்த சமூகத்தில், "ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையேதான் தொழிற் பிரிவு ஏற்பட்டிருந்தது. மனிதன் சண்டை போடுவது, வேட்டை யாடுவது, கருவிகளை உற்பத்தி செய்வது, அவைகளின் மூலமாக உணவுப் பொருள்களைச் தேடுவது முதலிய தொழில்களைத் செய்து வந்தான். குடும்ப வேலையைப் பார்ப்பது, சமைப்பது முதலிய வேலைகளைப் பெண்கள் செய்து வந்தார்கள். குடும்பத்திற்குள் பெண்கள்தான் யஜமானர்கள். வீட்டிற்கு வெளியே – காட்டில் – ஆண்கள் தான் யஜமானர்கள். இருவருக்கு மிடையே உயர்வு தாழ்வே கிடையாது" என்று பிரடரிக் ஏங்கல்ஸ் "குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவைகளின் உற்பவம்" என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

இந்தச் சமூகம், திட்டம் போட்டு, ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட வேலையை ஒதுக்கியிருந்தது. சமூகத்தை நிர்வகிக்க, ஒவ்வொரு கூட்டமும் ஒரு பொது ஸ்தாபனத்தை அமைத்திருந்தது. ஆண்களும், பெண்களும் சரி சமத்துவ அடிப்படையில், இந்த ஸ்தாபனங்களில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தார்கள்.

இந்த சமூகத்தில் அரசோ, சர்க்காரோ, போலீஸோ சிறைச்சாலைகளோ கிடையாது. லெனின் கூறுவதுபோல், சம்பிரதாயம், பரம்பரை, தலைவர்களின் கௌரவம் முதலியனதான் சமூகத்தில் யாவரும் கட்டுப்பாடாக இருக்கும்படி செய்தன.

சுரண்டுதலில்லாத, உயர்வு தாழ்வில்லாத, வர்க்க பேதமற்ற இந்தச் சமூகத்தைத்தான் "புராதன பொதுவுடமைச் சமூகம்" என்று அழைக்கிறோம். இந்த சமூகத்தை முதலாளித்துவ சரித்திராசிரியர்கள் குறிப்பிடுவதே கிடையாது. ஏனெனில், வர்க்க பேதமற்ற சமூகம் வெறும் பகற்கனவுதான் என்று பிரசாரம் செய்து வருகிறார்களல்லவா? வர்க்க பேதமற்ற சமூகம் இருந்தது, இன்னும் ஸ்தாபிக்க முடியும் என்ற தத்துவத்தை இந்தச் சமூகம் நிரூபிக்கிறது. எனவே, இதை மறைத்து வருகிறார்கள்.

மனித சமூகம் ஒரே நிலையில் இருந்தது கிடையாது. மாறிக் கொண்டேயிருக்கிறது. உற்பத்தி சக்திகளிலும், சமூக உறவுகளிலும் மாற்றம் ஏற்படும் பொழுது, சமூகமும் மாறுகிறது. அதே மாதிரியாக, புராதன பொதுவுடமைச் சமூகமும் அழிந்து போயிற்று. எப்படி?

கற்களை உபயோகித்து வந்த மனித வர்க்கம், இரும்பை உருக்கக் கற்றுக்கொண்டது. இதன் பலனாக, புதிய கருவிகள் செய்யப்பட்டன. உற்பத்தியும் பெருகிற்று. தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யத் துவங்கினான் மனிதன். இத்துடன் ஆடு மாடுகளைப் பழக்கி, அவைகளை மேய்க்கத் துவங்கினான். பின்னால், பயிர் செய்யவும் துவங்கினான்.

ஆடுமாடுகளின் பால், மாமிசம், தானியங்கள் முதலியன சில கூட்டத்தினரிடம் அபரிமிதமாக இருந்தன. தேவைக்கு அதிக மான உணவுப் பொருள்களை விற்கத் துவங்கினன். அதாவது, அந்தக் காலத்தில் பண்ட மாற்றுதல் வழக்கத்திலிருந்தது. இன்று நாணயமும், நோட்டும் இருப்பது போல், அந்தக் காலத்தில் ஆடு மாடுகள்தான் "நாணயங்கள்" போல் திகழ்ந்தன.

சமூகத்தில் தொழிற் பிரிவு மேலும் விரிவடைந்தது. ஆடு மாடுகளை மேய்ப்பவர்கள், விவசாயிகள், ஏர், சட்டி பானைகள் முதலியவைகளை உற்பத்தி செய்யும் கைத்தொழிலாளர்கள் எனப் பலவாறுகத் தொழிற் பிரிவினை ஏற்பட்டது.

"ஆடு மாடுகளை மேய்ப்பது, விவசாயம், கைத்தொழில் ஆகிய சகல துறைகளிலும், உற்பத்தி பெருகிற்று. அதிகம் தொழிலாளர்கள் இருந்தால் இன்னும் அதிகம் உற்பத்தி செய்ய முடியும். எனவே, தேவைக்கு அதிகமான பொருள்களை உற்பத்தி செய்ய முடிந்தது. அதாவது, மனிதனின் உற்பத்தி சக்தி அதிகரித்தது. அதே சமயத்தில், கூட்டத்தின், குடும்பத்தின், தனிப்பட்ட மனிதர்களின் வேலையும் அதிகரித்தது. எனவே, புதிதாகத் தொழிலாளர்கள் தேவையாக இருந்தது. யுத்தத்தில் கைது செய்யப்பட்டவர்களை அடிமைகளாக்கினுர்கள். (முன்பு, அவர்களைக் கொன்று வந்தனர்). உற்பத்தி சக்தி அதிகரிக்கவும், சமூகம் இரண்டாகப் பிரிந்தது. அதாவது, அடிமை, எஜமான், சுரண்டுகிறவன், சுரண்டப் படுகிறவன் எனப் பிரிந்தது" என்று எங்கல்ஸ் குறிப்பிடுகிருர்.

புராதன பொதுவுடமைச் சமூகம் அழிந்து போயிற்று. புதிய ஆண்டான் அடிமைச் சமூகம் தலை தூக்கிற்று. முன்பு பொதுச் சொத்தாக இருந்த நிலம், ஆடு மாடுகள், கருவிகள் தனி உடமையாயின.

ஆண்டான், அடிமை என்பதோடு, பணக்காரன், ஏழை என்ற வித்தியாசமும் தலை தூக்கிற்று. பிறர் உழைப்பை ஒரு சிலர் சுலபமாகச் சுரண்ட முடியுமா? சுரண்டப் பட்டவர்கள் வாளா விருப்பார்களா?

எனவே, ஒரு சிலர் சமூகத்தில் பெரும் பாலோரைச் சுரண்டுவதற்காக, அடிமைப் படுத்துவதற்காக ஒரு ஸ்தாபனம் தேவையாக இருந்தது. சுரண்டுகிறவர்களின், அடிமைப் படுத்துகிறவர்களின் ஸ்தாபனம்தான் "அரசு" (State). சுரண்டுதலை நீடிக்க அராங்கமும், நீதி மன்றங்களும் (?) போலீஸும், சிறைக் கோட்டங்களும் ஏற்பட்டன.

"வர்க்க முரண்பாட்டைத் தடுக்க அரசு ஏற்பட்டது. வர்க்கங்கள்—ஆண்டான் அடிமை — ஒன்ருேடொன்று போராடி வந்ததால், அடிமைகளை நசுக்க அரசு தேவையாக இருந்தது. பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சிலர் தான் அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். ஆளும் வர்க்கமாக இருந்தனர். இதன் மூலமாக அடிமைகளை நசுக்கிவந்தார்கள். புராதன காலத்தில், அடிமைகளை நசுக்கி வந்த யஜமானர்களுக்குத் தான் அரசு சொந்தமாக இருந்தது" என்று எங்கல்ஸ் கூறுகிருர்.

சமூகத்தில் இவ்வாறு புரட்சி ஏற்பட்டது. உணவுப் பொருள்களை ஆண்கள்தான் உற்பத்தி

செய்து வந்தார்கள். ஆடு மாடுகள், பயிர் செய்த தானியங்கள், கருவிகள் முதலியன அனைத்தும் ஆண்களின் ஆதிக்கத்திலிருந்தன. பெண்கள் அவைகளை அனுபவித்தார்கள் என்பது உண்மையே. ஆனால், அவைகளில் உரிமை கிடையாது. இவ்வாறு சரி சமத்துவ உரிமையைப் பெற்றுவந்த பெண்கள், ஆண்களுக்கு அடிமைகளானார்கள். குடும்ப வேலைகளைப் பெண்களும், குடும்பத்திற்கு வெளியே யுள்ள வேலைகளை ஆண்களும் வழக்கம் போல் செய்து வந்தார்கள். ஆனால், வீட்டிற்கு வெளியே தொழிற் பிரிவு ஏற்பட்டதால், பழைய உறவும் மாறிற்று. ஆண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலையைப் பெண்கள் செய்தார்கள். பொருள்களை உற்பத்தி செய்யும் வேலையை ஆண்கள் செய்து வந்ததால், கருவிகள் அவர்களுக்குத்தான் சொந்தமாக இருந்ததால், ஆண்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. சரித்திரத்தில் முதன் முறையாகப் பெண்கள் அடிமைகளானார்கள்.

இவ்வாறு உற்பத்திக் கருவிகளில் மாற்றமேற்படவும், தனக்குத் தேவையான பொருள்களை மாத்திரம் உற்பத்தி செய்து வந்த மனிதன் விற்பனைக்காக உற்பத்தி செய்ய ஆரம்பித்ததும், சமூகம் இரு வர்க்கங்களாகப் பிரிந்தது. சமூக உறவிலும் மாற்ற மேற்பட்டது. அதை யொட்டி, புதிய சமூக, அரசியல், பொருளாதாரச் சட்ட திட்டங்களும் ஸ்தாபனங்களும் அமைக்கப்பட்டன.

✲

## தமிழ் யூதர்

யூதர் தமிழ் நாட்டினின்றும் சென்று மத்திய தரைக் கடலின் மேற்குக் கரையோரங்களில் குடியேறி வாழ்ந்த மக்களாவர். கல்தேயாவின் தலைநகராகிய ஊரினின்றும் சென்று பலஸ்தீன் நாட்டிற் றங்கிய அபிரகாம் என்னும் கல்தேயரின் சந்ததியினரே யூதரும் அரேபியரும் என்னும் கன்ன பரம்பரை வரலாறு உளது. கல்தேயர் தமிழர்களே என்பது முன் கூறப்பட்டுள்ளது. பலஸ்தீன் மக்களின் பழக்கவழக்கங்கள், பழந் தமிழர் பழக்கவழக்கங்களை மிக ஒத்தன. அவர்கள் மரங்களின் கீழ் சிவலிங்கங்களை வைத்து வழிபட்டனர். ஆன்கன்றும் அவர்களால் வழிபடப்பட்டது. சிவன் என்னும் கடவுளை அவர்கள் சியன் என்னும் பெயர் கொடுத்து வழி பட்டார்கள்; இறப்புப் பிறப்பால் உண்டாகும் தீட்டுக் காத்தனர். பூப்படைந்த பெண்கள் ஏழுநாள் வரையும் தனித்து உறைந்தார்கள், இறந்தவர்கள் பொருட்டு அவர்கள் முப்பது நாள் வரையும் துக்கம் கொண்டாடினர். ஒருவர் இறந்தால், அவர் இறந்த இடத்தில் ஏழு நாட்களுக்கு விளக்குக் கொளுத்தி வைத்து உணவு படைத்தார்கள். இறந்தவரின் மரணதினம், ஆண்டில் ஒரு முறை கொண்டாடப்பட்டது. அப்பொழுது விளக்குக் கொளுத்தி வைத்து, உணவு படைத்து விருந்து கொண்டாடப்பட்டது. இன்னும் இவைபோன்ற யூதரின் பழைய வழக்கங்கள் இன்றும் தமிழ்நாட்டிற் காணப்படுவன போன்றன.

—தமிழர் யார்?

## வித்தியாசம்

பட்டினி கிடக்கும் ஒரு நாயை நீங்கள் எடுத்துக்கொண்டுபோய்க் காப்பாற்றினீர்களானல், அது உங்களைக் கடிக்காது. இதுதான் நாய்க்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசம்.

—மார்க் ட்வெயின்






காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை வினோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச்சோப்பின் மிருதுவான செழிப்பாயுண்டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய்கிறது — மேலும் அதன் நறுமணம் உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழகை அதிகப்படுத்த இச்சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. வினோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.

# வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 19-111 TM

VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

# ஆஸ்த்மா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்



தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது மறந்திலும் வீண்.

"புரோகித சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல, "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற சுவாச சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின் (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0. 5-12-0. 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—
புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள — சென்னை :
1. அப்பா அண்டு கோ, சைனபஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி.
கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :
K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷஞ்சேரி.




## புரோகிதஸ் ஸ்வாஸஹரி




*Your Favourite — in a New Cover*

KERALA SOAP INSTITUTE, CALICUT

FAS-191

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கள்ளிக்கோட்டை

# கலைப் படிப்பு

●

**ரூத் லாபட் ஹட்டன்**

சம்பிரதாயமான கலைப் பயிற்சி முறை வாழ்விற்குப் புறம்பானது. அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளுக்கும் அதற்கும் சிறிதுகூட சம்பந்தமிருப்பதில்லை. அத்தகைய கல்விமுறை அறவே பொருளற்றுத்தான் இருக்கிறது. குடும்பத்தோடும் சமூகத்தோடும் தனி மனிதனுக்குள்ள உறவுகளை ஒழுங்கு படுத்தவும், பொருள் செறிந்த வகையில் பயனுற வாழவும், வாழ்வின் பிரச்னைகளைப் புத்திசாலித்தனமாகத் தீர்த்து, அமைதியும் ஆனந்தமும் அடைவதற்கும் மனிதனுக்குப் போதிக்க வேண்டும் என்பதே நவீனக் கலைப் படிப்பின் நோக்கம். பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தின் பலவித அம்சங்களிடையேயும் தொடர்பும் இணைவும் ஏற்படுத்தக் கலையால்தான் முடியும். உள்ளத்து உணர்ச்சிகளுக்கு நிலையான உருக்கொடுக்கவும் நெருக்கடிகளைச் சமாளித்து வாழ்வில் அமைதியும் இன்பமும் காண்பதற்கும் கலைதான் உதவுகிறது. நடனம், இசை, சிற்பம் போல ஓவியந் தீட்டுதலும், படம் வரைதலும் நளின கலைகள் தான். அவை எல்லாம் சிருஷ்டித் திறன் படைத்தவை. சிந்தனை இன்பம் பயப்பவை. அழகுணர்வை வளர்த்து அதன் மூலம் வாழ்வில் அமைதியும் ஆக்கமும் தேடுகின்றன. தனி மனிதன் தன் முன்னுள்ள பிரச்னைகளைச் சிந்தித்துச் சர்ச்சை செய்து, தனக்கென ஒரு செயல்—வழி வகுத்துக் கொள்ளுவதில் கலை கை கொடுக்கிறது. வாழ்வை அர்த்தமுள்ளதாகவும், அரும் பயன் உள்ளதாகவும், வெற்றிகரமானதாகவும் ஆக்கித் தருவது கலைதான்.

கலைப் பொருள்களை உற்பத்தி செய்வதைப் போலவே, அவற்றை அறிந்து போற்றத் தெரிய வேண்டும். பொருள்களின் தரமறிந்து, தன்மையுணர்ந்து தேவைக்கும் தகுதிக்கும் ஏற்ப ஒன்றினை ஏற்கவோ நீக்கவோ கற்றல் அவசியம். ரசனையே கலையின் ஜீவன். வாழ்வில் வெற்றி தருவதும் அந்த உணர்வுதான். அதனை வளர்ப்பது பாடத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக்கப்பட வேண்டும். மனத்தத்துவ நூல்படி வண்ணங்கள் மனித வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்தவை. விதவிதமான வண்ணச் சேர்க்கைளின் விளைவுகளைக் கண்டு, ரசித்துப் போற்றப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் போதிக்கப்பட வேண்டும்.

தினமும் உணவு, உடை, இருப்பிடம் முதலிய விஷயங்களில் நாம் செய்யும் தீர்மானங்கள் வாழ்வில் கலையின் ஸ்தானத்தை வலியுறுத்துகின்றன. ஒரு மனிதன் தேர்ந்தெடுக்கும் உடை, அதை அவன் அணிந்து கொள்ளும் முறை முதலியவை அவன் சிந்தனைப் போக்கையும் வாழ்க்கை முறையையும் வெளியிடுவதோடு அவற்றைப் பல வழிகளில் கட்டுப் படுத்தவும் செய்கின்றன. உண்ணும் உணவு, அதை உண்ணும் முறை எல்லாம் வாழ்வின் போக்கைப் பெரிதும் பாதிக்கின்றன.

> "உள்ளத்து உணர்ச்சிகளுக்கு நிலையான உருக் கொடுப்பதற்கும், நெருக்கடிகளைச் சமாளித்து, வாழ்வில் அமைதியும் இன்பமும் காண்பதற்கும் கலை தான் உதவுகிறது."
> டிஸைன் கலை இதழ்க் கட்டுரைச் சாரம்.

அதேபோல, நாம் வசிக்கும் வீடு, அதன் சுற்றுப் புறம், அதை நாம் வைத்துக் கொள்ளும் முறை—முதலான விஷயங்களும் நம் வாழ்வைப் பெரிதும் பாதிக்கவே செய்கின்றன. சிறந்த முறையில் உடை தரிப்பது: சுவையான உணவைச் சுத்தமான முறையில் அருந்துவது: ஆரோக்கியமான சூழ்நிலையில் அழகிய, நன்கலங்கரிக்கப்பட்ட வீட்டில் குடியிருப்பது—ஆகிய இந்த விஷயங்கள் மிக முக்கியமானவை. இவற்றை வாழ்வில் வெற்றிகரமாகக் கையாளத் துணை செய்வது கலைதான். அத்தகைய கலை முறைகள் கல்லூரிகளில் கற்கும் போதே மாணவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். அவர்களுடைய பாடத் திட்டத்தில் முக்கியமான அம்சங்களாக அவை சேர்க்கப்பட வேண்டும்.

கல்வியின் நோக்கம் வெற்றிகரமாக வாழக் கற்றுத் தருவது தான். வீட்டிலும் வெளியிலும் சாமர்த்தியத்தோடு நடந்து கொள்ள—சமூகத்தில் பலரோடும் சகஜமாகப் பழக—ஒரே வரியில், ஒரு லட்சியப் பிரஜையாக வாழப் பயிற்றுவதுதான் உண்மையான கல்வி. கலையைத் துணைக் கொண்ட கல்வியாலேயே இது சாத்தியமாகும்.

ஆனால், இன்றையக் கல்வி முறையில் இதற்கெல்லாம் வழி இல்லை. இன்றையக் கல்வி முறை அடியோடு மாற வேண்டும். பாடத் திட்டத்திலும் பெரும் புரட்சிகரமான மாறுதல்கள் செய்தாக வேண்டும். கல்வி கலைமயமாக வேண்டும். மனிதனிடம் ஆழ்ந்து கிடக்கும் அழகு உணர்வை வெளிக் கொணர்வதோடு, ரசனைத் திறமையை வளர்க்கவும் பாடத் திட்டத்தில் ஏற்ற ஏற்பாடுகள் இருக்க வேண்டும். கலைக் காட்சிகள் நடத்துவதன் மூலம் மாணவரின் புத்தகப் படிப்புப் பூர்த்தியாவதற்கு அத்தியாவசியமான அனுபவ ஞானத்தை அவர்களுக்கு அளிக்க முடியும். புராதன, நவீன கலைஞரின் சிருஷ்டிகளைக் காட்சியில் வைப்பதால் அதைக் கண்ணுறும் மாணவர் உள்ளத்தில் கலை ஆர்வம் துளிர்க்கச் செய்யலாம். உடை, உணவுத் தொழில் சம்பந்தமான உதவிக் குறிப்புகள், படங்கள், கட்டிடக் கலை சம்பந்தமான ஆசுப் படங்கள், போட்டோக்கள் யந்திரத் தொழில் முறையைப் பற்றிக் கூறும் விளக்கப் படங்கள், விஞ்ஞான வளர்ச்சியை விளக்கும் காட்சிப் பொருள்கள் இவற்றைப் பள்ளிக்கூட, கல்லூரிக் கலைக்காட்சிகளில் பார்வையில் வைக்கலாம்.

மாணவர் உள்ளங்களில் அவை சமூக, தொழில் வாழ்வை ஒட்டிய விதவிதமான கருத்துக்களைத் தூவுவதோடு அவரவருக்குப் பிடித்தமான துறைகளில் ஈடுபட்டு வேலை செய்யவும் அவர்களைத் தூண்டும்.

மாணவர்களில் ஒவ்வொருவருக்கும் இயற்கையாக ஏற்பட்டிருக்கும் தனிப்பட்ட திறமையைக் கண்டறிந்து அவரவருக்குப் பொருத்தமான துறைகளில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களுடைய முழுத் திறமையும் வெளிப்படுமாறு செய்வதற்கு வசதி தரும் முறையில் கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

# நட்சத்திர பூஜை

●

**கொனஷ்டை**

அகோரமையர் துணியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பிறகும் தயங்கினர். இருபது ரூபாய் கொடுத்து, அந்த உத்தரீயத்தை வாங்குவது சரியா என்று அவருக்குச் சந்தேகம். முடிவில் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ஒரு பெரு மூச்சையும் விட்டு, "இதையே எடுத்துக் கொள்ளுகிறேன்" என்ருர். 'சரி' என்று சொல்லி, கடை வேலைக்காரர், அந்த வஸ்திரத்தை ஒரு காகிதப் பையில் செருகிக் கட்டினர்.

கையில் ஐம்பது ரூபாயுடன் அகோரமையர் அந்தக் கிறிஸ்ட்மஸ் விடுமுறைக்குச் சென்னைப் பட்டினத்திற்கு வந்தவர். இது வெகு நாளாக அவருக்கு இருந்த ஓர் ஆசை. அவருக்கு இருப்பிடம் திருவாரூர். கச்சேரி குமாஸ்தா வேலை. பரம சாது என்றே பெயர். அவருடைய பத்தினி ஒரு விவேகி. இறுக்கின ஞாண் கயிற்றைத் தளர விடாமலே இருந்து விட்டால், வில்லின் சக்தி போய்விடும் என்று அறிந்தவள். "உங்கள் இஷ்டப்படி சென்னைப் பட்டினம் போய், பத்து நாளாவது கவலையற்று இருந்துவிட்டு வாருங்கள்" என்று சொன்னள்.

அதன்மேல், அவர் ஒரு நீள லகோடாவை எடுத்து, 'சென்னை யாத்திரை பண்டு' என்று அதற்கு நாமகரணம் செய்து, அதில் சிறுகச் சிறுக, கையில் தங்கும் சில்லறைக் காசுகளையே போட்டு, சுமார் மூன்று வருஷத்தில் அறுபது ரூபாயைச் சேர்த்து விட்டார். போக வர, ரெயில் சார்ஜுக்குப் பத்து ரூபாய்க்கு மேல் பிடிக்காது. அவருடன் கூட வேலை பார்க்கும் விசுவநாதையர், சென்னையில் தம்முடைய தம்பி நரசிம்மையரின் வீட்டில், செலவில்லாமல் தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்து விட்டார். ஆகையால், அகோரமையருக்கு வெகு சந்தோஷம். நாற்பத்தைந்து வயதுக்குள்ள உலக அனுபவமும், பதினெட்டு வயதுக்குள்ள உல்லாசமும் சேர்ந்த வண்ணமாய் விடுமுறையைக் கழித்தார்.

இஷ்டப்பட்ட காட்சிகளையெல்லாம் கண்டார். விதம் விதமான ஹோட்டல்களின் தயாரிப்புகளைப் பரீட்சை செய்தார். கணக்கில்லாமல் நடந்து கொண்டிருந்த பாட்டுக் கச்சேரிகளுக்குள் பொறுக்கி யெடுத்த முதல் தரமான சங்கீதத்தை அனுபவித்தார். ஆனல், விசேஷமாக, சினிமாக்களிலே பொழுதைச் செலுத்தினர். 'புருஷோத்தமையா' நடித்த படங்கள் எந்த எந்தத் தியேட்டர்களில் காண்பிக்கிருர்கள் என்று கண்டு பிடித்து, ஒரு படம் விடாமல் பார்த்து, தம்முடைய வெகு நாளைய மனோரதத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

'நட்சத்திரம்' என்பது புருஷோத்தமையா ஒருவருக்குத்

---

**கொனஷ்டையின் கதைகள்:** இரண்டாம் புத்தகம். வெளியிட்டோர்: புத்தக நிலையம், தெப்பக்குளம், திருச்சி. கிரௌன் 1X8. 234 பக்கம். விலை ரூ. 3-8-0

ஏற்கெனவே பல பத்திரிகைகளில் வெளி வந்த இந்தப் பதின்மூன்று கதைகளும் உயர்தரமான நகைச் சுவை பொருந்திய இனிய கதைகள். மாதிரிக்கு ஒன்றை மீண்டும் படித்துப் பாருங்கள்:

தான் தரும் என்பது அவருடைய அபிப்பிராயம். புருஷோத்தமையாவைக் குறிப்பிட அதைக் காட்டிலும் உயர்ந்த வார்த்தை இல்லையே என்று குறைப் படுவார். அவர் மனைவி, சில சமயம், பிரியமாய்ப் பரிகாசம் செய்வது உண்டு. "இதென்ன பக்தி இது! தேச பக்தி ஜனங்களுக்கு நல்லது. ராஜபக்தி இகலோகத்தில் பலனைக் கொடுக்கும். தெய்வ பக்தி இரு லோகத்திற்கும் நல்லது. அதெல்லாம் விட்டுவிட்டு, ஒரு நட்சத்திர பக்தி உங்களுக்கு ஏற்பட்டு, அர்த்தங்கூடப் பாதி புரியாத தெலுங்குப் படங்களுக்கு உங்களை இழுக்கிறதே!" என்று. "வெறுமனே சொல்லாதே! வார்த்தைகளுக்கு அர்த்தம் ஒன்று விடாமல் புரிய வேணும் என்று அவசியமா? அவர் நடிப்பதே போராதா? சன்னியாசியாய் வரட்டும், ராஜாவாக நடிக்கட்டும், அவருடைய சாமர்த்தியமும், கம்பீரமும், சாந்தியும், உயர்ந்த குணமும் வேறு யாருக்கு வரும்? ஒவ்வொரு தடவை அவருடைய படத்தைப் பார்த்துவிட்டு வரும்போதும், கோவிலுக்குப் போய் வந்த மாதிரி இருக்கிறது என் 'மனசு'" என்று அவர் பதில் சொல்லுவார். அத்துடன் அந்த அம்மாள் பரிகாசத்தை நிறுத்திவிடுவாள்.

எஸ்ப்ளனேடில் நடந்துகொண்டிருந்த அகோரமையர், விடுமுறையின் கடைசித் தினம், ஒரு துணிக் கடையின் முன்பு நிற்கலானார். அதன் வாசலில் கட்டித் தொங்கவிட்டிருந்த பலகையில், ஓர் அடி உயரமுள்ள அட்சரங்களால், "பொங்கலுக்குப் பரிசு வாங்கிக் கொடுங்கள்" என்று புத்திமதி அளிக்கப்பட்டிருந்தது. 'அதுவும் சரிதான். வீட்டிற்குத் திரும்பும்போது, வெறும் கையாகப் போவானேன்?' என்று எண்ணி, கடைக்குள் நுழைந்தார். நுழைந்தவர், சற்றுத் தயங்கிக்கொண்டு, ஏதோ ஓர் இடத்தில் நிற்கவே, அங்கிருந்த கடை வேலைக்காரர், உற்சாகத்துடன், "வாருங்கோ! ஜரிகை உத்தரீயமா பார்க்கிறீங்கோ? இதோ இருக்கு, 'லேட்டஸ்ட் பாஷன்.' நேத்திக்குத்தான் புது 'ஸ்டாக்கு' வந்தது. 'புருஷோத்தமையா உத்தரீயம்' என்று இதுக்குப் பெயர். ரொம்பப் பேர் வாங்கிண்டு போறுங்க' என்று சொல்லி, அவருக்கு எதிரே இருந்த பீரோவிலிருந்து பல உத்தரீயங்களை எடுத்து மேஜை மேல் குவித்துவிட்டார்.

அவை ஒரு விநோதத் தினுசாகத்தான் இருந்தன. கரைகளில் சாதா ஜரிகைக்குப் பதிலாக, தக்க எழுத்துக்களால், புருஷோத்தமையாவின் பெயர் மாத்திரமல்ல, அவர் நடித்துள்ள பல படங்களின் பெயர்களும், மாற்றி மாற்றி நெய்யப்பட்டிருந்தன. அவற்றைக் காணும் பொழுது, தெய்வமே தன்னை அவ்விடத்திற்குக் கைபிடித்து அழைத்து வந்ததாக அகோரமையருக்குத் தோன்றிற்று. ஓர் உத்தரீயத்தைப் பொறுக்கினார். விலை இருபது ரூபாய். அந்தப் பணம் அவர் கையில் பாக்கியிருந்தது. ஆனால், அந்த வஸ்திரத்தை வாங்கினால், வீட்டிலுள்ளவர்களுக்குத் துணி வாங்கப் பணம் கிடையாது. பக்தி ஒரு பக்கமும், குடும்ப வாஞ்சை ஒரு பக்கமும் அவரை இழுத்தன.

முடிவில், 'இன்று ஒரு நாள் போக, பாக்கி ஆயுசு முழுவதும் குடும்பத்திற்காகவே உழைக்கிறேனல்லவா? இந்த ஒரு தடவை மாத்திரம் என்

ஒருவனுடைய சந்தோஷத்திற்காக இதை வாங்கி, புருஷோத்தமையாவிடம் நேரில் சென்று இதைத் சமர்ப்பித்துவிட்டு, அவர் மூலமாக நான் இதுவரை அனுபவித்திருக்கும் ஒப்பற்ற ஆனந்தத்திற்கேற்ற என்னுடைய நன்றியறிவைத் தெரிவித்தால், இதன் ஞாபகமே எனக்கு என்றென்றைக்கும் போதும்,' என்றெல்லாம் எண்ணி மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, நாம் முதலில் கண்டபடி அந்த வஸ்திரத்தையே வாங்கினர்.

வாங்கின பிறகு, ஞாபகம் வரவே, 'புருஷோத்தமையாவின் வீடு எங்கே இருக்கிறது, தெரியுமா?' என்று கடைக்காரரைச் சிறிது சங்கோசத்துடனே கேட்டார். தன்னுடைய எண்ணத்தை அவர் ஊகித்துவிடுவாரோ என்று பயம்!

"அது ராயபுரத்தி லிருக்கு. என்? அங்கே போகணுமா?"

அகோரமையர் தலையை அசைத்தார். அதற்கு மேல் தைரியமில்லை.

"இங்கிருந்தபடி இடத்தைச் சொல்றது கஷ்டம். ஆனா, அது ஒண்ணும் வேணும். நீங்க இங்கே சத்தே இருங்கோ. அவர் வீட்டுக்கு இந்தச் சாமானே அனுப்பப் போறேன். அவர் ஆர்டர்ப்படி நெசவு போட்ட பொடவை இது. 'பாக்' பண்ணி தயாரா யிருக்கு. அவருடைய வேலைக்காரப் பையன், எதிர்க்கே இருக்கிற கார்ப்பரேஷன் மார்க்கட்டிலே பழம் வாங்கப் போயிருக்கான். அஞ்சு நிமிஷத்தில் வந்துடுவான்,—இதை வாங்கிண்டு போக. அவனோடே நீங்க டிராமில்கூடப் போயிடலாம்" என்று வேலைக்காரர் சொன்னர்.

அந்த ஏற்பாட்டின் பிரகாரமே கால் மணி நேரத்திற்குள் அகோரமையர் புருஷோத்தமையாவின் வீடு போய்ச் சேர்ந்தார். டிராம் வண்டியிலிருந்து இறங்குவதற்கு முன், பையன் பழக் கூடையையும் பொட்டலத்தையும் எடுத்துக்கொண்டு, ஒரு விஷயம் சொன்னன். "நீங்க என்னேடு கூடவே நுழையாதீங்க. ஐயா ஏதாவது சொல்லுவார். நான் மொதல்லே உள்ளே போயிடறேன்" என்றான்.

அப்படியே அவன் செய்ய, இரண்டு நிமிஷம் பொறுத்துவிட்டு, அகோரமையர் வாசற் கதவைத் தட்டினர். அத் தருணத்தில் வீட்டிற்குள் ஒரு கூக்குரல் கேட்டது. பையன் அழுகிறதும், ஒரு பெரிய மனிதன் அவனைப் 'பளார், பளார்' என்று அடித்துக் கொண்டே திட்டுகிறதுமா யிருந்தது. "காமாட்டிப் பயலே, டவுனுக்குப் போய் ரெண்டு சாமான் வாங்கிக்கிட்டு வரதுன்னு, ரெண்டு மணி நேரமா அதுக்கு? ஒன் பல்லைப் பிடிங்கூடறேன், பாரு!'. இன்னும் பூசைகள்; இன்னும் சில திட்டல்கள்.

அகோரமைய்யர் திடுக்கிட்டு நின்றார். 'இவ்வளவு குரூரமான மனிதனுக்கு, புருஷோத்தமையா தன்னுடைய வீட்டில் இருக்க என்னமாய் இடங்கொடுத்தார்?" என்றே அவர் வியந்தார். அச் சமயத்தில் வாசற் கதவு திறக்கப்பட்டு, ஒரு மனிதர் வெளியே வந்தார். அகோரமையரின் திகில் பன்மடங்காயிற்று. அந்த மனிதரைப் பார்த்தால், புருஷோத்தமையா மாதிரியும் இருந்தது; ஆனல், அவரல்ல போலவும் தோன்றிற்று. அதே உயரம், அதே தோற்றம். ஆனல், அகோரமையர் மனசுக்குள் பதிந்

துள்ள ஒரு மனோகரமான, சாந்த ஸ்வரூபமான வதனத்திற்குப் பதிலாக, அம்மைத் தழும்புகள் பெருகி ஓடித் தடித்த தோலுடன், கோபத்தினால் கோணிப் போன ஒரு விகார மான முகத்தைக் கண்டார். இருந்தாலும் அவருக்கு அதுவும் ஏதோ ஒரு விதத்தில் புருஷோத்த மையாவின் முகத்தையே ஞாப கப்படுத்தியது.

"யாரய்யா நீ? எங்க வந்தய்?" என்று, தெலுங்கர் பேசும் தமிழில் அந்த மனிதர் சீறினார். அகோரமையருக்கு நடுக்கம் கண்டுவிட்டது.

"நா—ஆ—ஆன்—திதிதிதிரு வாலூர். உங்களைக் கண்டு கொண்டு போகலாம் என்று வந்தேன்......"

'ஒண்ணும் காணவாணும். நான் ஒண்ணும் பிச்சை போடப் போறதில்லே......"

"இல் லேல் லேல் லே......"

"பின்னே எதுக்காக வந் தாயாம்? இந்த வித்தை யெல் லாம் தெரியும். ஒன்னைப்போல் நூறு பேரைப் பார்த்திருக்கேன். மொதல்லே அப்படி இப்படீன்னு பேசறது. கடைசிலே முடியறது யாசகத்திலே......"

"நான் சத்தியமாச் சொல்லு கிறேன்......"

"சரித்தான்னா,—எனக்கு ஒன் னோடே வாயாடச் சாவகாச மில்லே. போன்னா, மரியாதை யாய்ப் போறயா, இல்லெயா?... யார்ரா அங்கே, அந்த நாயை அவுத்து விடு......"

அகோரமையர் துக்கத்துடன் திரும்பினார். பாவம்! அவர் மனம் பட்ட பாட்டைச் சொல்லவும் வேண்டுமா? அன்றிரவு, ரெயில் வண்டியில் கஷ்டப்படாமல், வீட்டில் சுவஸ்தமாகச் சயனித் திருந்தாலுங்கூட, அவருக்கு ஒரு பொட்டுத் தூக்கமும் வந்திராது. 'இவரா நான் இதுவரை பூஜித்து வந்த மகான்?' என்று நினைக் கும்போதெல்லாம் தம்முடைய அறிவீனத்தைக் குறித்து உண் டாகும் அவமானம் போதா தென்று, இதுவரை புருஷோத்த மையாவின் படங்களைக் காணும் பொழுதெல்லாம் தாம் அடைந்த ஆனந்தத்தை யெல்லாம், திரும் பக் கக்குகிறமாதிரியே கஷ்டப் பட்டார். கோவிலில் தெய்வத் திற்கு அர்ச்சனை செய்துகொண் டிருக்கையில், நம்முடைய கண் ணெதிரில் அது ஒரு பிசாசாக மாறினால் எப்படி இருக்கும்?

தம்முடைய சம்சாரத்தி னிடத் தில் இதை யெல்லாம் எப்படிச் சொல்லுகிறது? அவருடைய 'பக்தி'யைக் குறித்து அந்த அம் மாள் இதற்குமுன் பரிகாசம் பண்ணுவது அகோரமையருக்கு ஒரு விளையாட்டு மாதிரி களிப் பாகவே இருக்கும். ஆனால், இது ஒரு பரிகாச விஷயமல்ல, விளை யாட்டுச் சமாசாரமல்ல. நினைத் தால் துக்கத்தைப் பொங்கச் செய் யும் காரியம். தனக்குப் பட்ட புண்ணை, கட்டை அவிழ்த்து அவ ளிடம் காட்ட இஷ்டமில்லை. நடந்ததை ஒருவரிடமும் ஒன்றும் சொல்லுவதில்லை என்றே தீர் மானித்தார்.

மறுநாள் காலையில் வீடு போய்ச் சேர்ந்தவுடன், அவ ளுடைய கேள்விகளுக்குச் சுருக்கமாகவே பதில் சொல்லி விட்டு, பல் விளக்கவேண்டிய தைச் சாக்கிட்டுத் தப்பித்துக் கொண்டு போனார். அந்த அம் மாள், அவர் கொண்டுவந்த மூட்டையை அவிழ்த்துச் சாமான் களை ஒழுங்குபடுத்தத் தொடங்கி னாள். பட்டினத்துத் துணிக்

கடையின் பொட்டலம் அவளுடைய கண்ணிற் படவே, முதலில் அதையே பிரித்தாள். பிரித்தும் அவளுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. அச் சமயம் அகோரமையர் அவ் விடத்திற்குத் திரும்பி வரவே, அவரை ஒரு தடவை இறுகக் கட்டிக் கொண்டு விட்டு, அவருக்குச் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தாள். "இந்த மாதிரிப் புடைவை வேண்டுமென்றுதான் இரண்டு வருஷமாக ஆசைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு அதை யார் சொன்னது? விலையோ, தற்கால விலையாக 175 ரூபாய் போட்டிருக்கிறதே, உங்களுக்குப் பணம் ஏது?" என்று பிரியமும் சந்தோஷமும் போட்டி போடுகிற குரலில் கேட்டாள்.

அகோரமையர் ஒரு விநாடி தயங்கினார். அவளுடைய ஆனந்தத்தில், அதை அவள் கவனிக்கவில்லை. அவளுடைய கண் அந்தப் புடைவையின் மேலே—அந்த ஒரு விநாடியில் அவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. 'நேற்றைக்கு டிராம் வண்டியில் போகும்போது, அந்தப் பையன் கொண்டுபோன பொட்டலமும் என் பொட்டலமும் ஒன்றுக்கு ஒன்று மாறிப் போயிருக்க வேண்டும். இரண்டுக்கும் கடைப் பெயர் போட்ட ஒரே மாதிரிப் பை. துணியும், பட்டுப் புடைவையும் ஒரே கனம், ஒரே பருமன். அதனால்தான் இரண்டு பேரும் ஏமாந்து போனது. அதெல்லாம் இருக்கட்டும். இப்பொழுது, புடைவை கிடைத்ததென்று இவள், இவ்வளவு சந்தோஷப் பட்ட பிறகு, அது ஒரு தவறு, புடைவை கிடையாது என்று சொல்லி இவளுடைய மனசை என்னமாய்ப் புண்படுத்துகிறது? ஒரு பொய்யைத்தான் பேசவேண்டும்' என்று தீர்மானித்தார்.

(இம் மாதிரி நல்ல எண்ணத்துடன் சொல்லும் பொய்களை, யமதர்ம ராஜனும் சித்திர குப்தனும் ஒருவருடைய பெயரிலும் பற்று எழுதுகிறதில்லை, ஓர் அநாமத்துப் புஸ்தகத்தில் பதிகிறுன் என்றே கேள்வி. கேள்விப் பட்டதை எழுதிவிட்டேன். ஆனால், இவ் விஷயத்தின் யதார்த்தத்தை அறிய வேண்டுமானால், பொய் சொல்லுகிறவர்களிடமே கேட்டு அறிந்துகொள்ள வேண்டும்.)

அவ்விதம் தீர்மானித்த அகோரமையர், தமக்கு முதலில் தோன்றின பொய்யைச் சொல்லி வைத்தார். "பணமா? நான் இந்தப் புடைவைக்கு விலை கொடுக்கவில்லை. ஒரு லாட்டரியில் ஒரு ரூபாய் டிக்கட்டு ஒன்று வாங்கினேன். இது கிடைத்தது" என்றார். இவ்விதம் சொற்பச் செலவுக்கு, இவ்வளவு உயர்ந்த புடைவை கிடைத்ததற்காக அந்த அம்மாள் இரு மடங்கு சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கையில், தாம் விசுவநாதையரிடம் சென்று, உண்மையைத் தெரிவித்து, தம் மனசில் உள்ள பளுவை நீக்கி, மேல் யோசனையைக் கேட்கவேண்டுமென்று தீர்மானித்தார். அவ்விதமே, அவரிடம் சாங்கோபாங்கமாக நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு, "நான் இப்பொழுது என்ன செய்கிறது? சொல்லு" என்று கவலையுடன் கேட்டார்.

விசுவநாதையருக்கோ, ஒரு விதமான கவலைக்கும் அவசியம் தென்படவில்லை. "அடேயப்பா! பார்த்தால் பூனை மாதிரி இருக்கிறாய். ஆனால், என்ன காரியம்

செய்துவிடுகிருய்! அவன் வேண்டாம், வேண்டாம் என்ருல்கூட, உன் இஷ்டப்படியே, நீ பொறுக்கின 'ப்ரெஸன்டை'யே அவன் கையில் சேர்த்துவிட்டு, பதிலுக்கு 175 ரூபாய்க்கு ஒரு புடைவையைத் தட்டிக்கொண்டு வந்துவிட்டாயே! அடுத்த தடவை பட்டினம் போகிறபோது, என் வீட்டுக்காரிக்கும் ஒரு புடைவை சம்பாதித்துக் கொண்டுவா, அப்பா!'' என்ருர்.

"பரிகாசம் இருக்கட்டும். வாஸ்தவத்தில், நான் இப்பொழுது என்ன செய்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதைச் சொல்லேன்!'' என்று கெஞ்சினுர்.

''நீ செய்யவாவது! பகவான்தான் உன் கண்ணைத் திறந்தார். நட்சத்திரமாவது நட்சத்திரம்! முகத்தில் பூசிய பவுடர் பாதி, எத்தனையோ டைரெக்டர்கள் தங்கள் பிராணன் போக, அவனுக்கு உருப் போட்டுக் கொடுத்த வார்த்தைகள் பாதி, இவைகளை வைத்துக்கொண்டு ஒரு சோதாப் பயல் மினுக்கிக் கொண்டு, ஒரு பேய் பிடிக்கிற மாதிரி, உன் மனசைப் பிடித்துக் கொண்டிருந்தான், இத்தனை நாளாக. அவன் எந்த மாதிரி ஆசாமி என்று இப்போது உனக்குத் தெரிந்துபோய் விட்டது. நீயாகச் சிருஷ்டித்திருந்த மனிதன் செத்தான் என்று ஒரு முழுக்குப் போட்டுவிடு. இந்தப் பைத்தியமும் தொலையட்டும், ரெயில் வண்டிக் கரியும் தொலையட்டும்'' என்று சந்தோஷமாய்ப் புத்திமதி யளித்தார்.

''சரி, நீ சொல்லுகிற மாதிரியே, அவனைக் குறித்து ஒரு ஸ்னனம் செய்து விடுகிறேன். ஆனல், புடைவை விஷயத்தில் என்ன செய்கிறது? உத்தரீயத்தின் விலையைக் கழித்தாலும், அவனுக்கு 150 ரூபாய்க்கு மேல் நஷ்டமாய்ப் போயிருக்கிறதே; கடைக்காரனைத் தொல்லைப் படுத்தப் போகிருனே; எல்லாம் வெளியாய்விடுமே?''

''அப்படி ஒன்றும் இல்லை. நடந்ததை யாராலும் ஊகிக்க முடியாது. உன் பெயர்கூட ஒருவருக்கும் தெரியாது. அந்தக் கடைக்காரரை நான் நன்ருய் அறிவேன். மூன்று புருஷோத்தமையாக்களுக்குப் பதில் சொல்லக் கூடியவர். அனுப்பின புடைவையைப் பெற்றுக் கொண்டு, அவன்தான் பொய் சொல்லுகிருன் என்று எந்தக் கோர்ட்டிலும் சாதிக்கக் கூடியவர். நீ அவருக்காக விசாரப்பட வேண்டாம்.''

''அப்படியானல்,கடன் வாங்கியாவது நியாயப்படி புருஷோத்தமையாவுக்கு 155 ரூபாயை நான் அனுப்ப வேண்டாமா? வேறென்றும் எழுதாமல் மொட்டையாய் ஒரு மணி ஆர்டர் செய்துவிட்டால்......''

''இதோ பார்! அகோரம், இந்த மாதிரி தெய்வமே கை கலந்து, ஒரு காரியத்தை முடிக்கும்போது, நீ குறுக்கே வந்து உன் நியாயத்தைப் பேசினயானல், தெரியுமா சங்கதி? நடந்ததெல்லாம் உன் அகமுடையாளிடம் போய்ச் சொல்லிவிடுவேன். இனிமேல், உன் ஆயுசுக்கு, நீ சொல்லுவ தொன்றையும் நம்பமாட்டாள்!'' என்று பயமுறுத்திவிட்டு, திடீரென்று வயிற்றைப் பிடித்துக்கொண்டு, 'ஓஹோ ஹோ!' என்று அடக்க முடியாமல் சிரிக்கத் தொடங்கினுர்.


லைப்பாய்
பழக்கத்தையும் அவன்
அறிந்திருக்கிறான்
அவன் ஸ்கூலுக்குப் போகிறான். அங்கிருந்து என்ன கொண்டு வருவான்? புதிய அறிவு, புதிய முறைகள் — சில தொத்து வியாதிக் கிருமிகளுங்கூட! அவனுக்குக் கற்றுக் கொடுத்த எல்லாப் பாதுகாப்புகளுடனும் தாயார் தன் மகனை அனுப்புகிறாள். ஆரோக்கியமுள்ள சிறுவனையும் பீடிக்கக் கூடிய அழுக்கு அபாயத்திலிருந்து காப்பாற்ற லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிப்பதே அவற்றுள் முக்கியமானது.
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்
LIFEBUOY
SOAP
L. 78-50 TM.
LEVER BROTHERS (INDIA) LIMITED



மாமியார் அவளை அதிக
பக்ஷமாக நடத்துகிறாள்




ஏனெனில் அவள் டாம்கோ கூந்தல் தேங்காயெண்ணெயும், ஷாம்பூவும் உபயோகித்து வருகிறாள்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்

"உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று சற்றுக் கோபமாகவே அகோரமையர் கேட்டார்.

"பைத்தியம் ஒன்று மில்லையப்பா" என்று விசுவநாதையர் தம் கண்களைத் துடைத்துக் கொண்டு விவரித்தார்: "இது தான் சமாசாரம். அந்தச் சோதா மனிதன், வேலைக்காரப் பையனைக் காலதாமசம் செய்ததற்காகத் திட்டி அடித்ததற்கும், உன்னைப் பேசக்கூட விடாமல், வெருட்டி ஓட்டினதற்கும் காரணம் புரிந்ததா? அவன் உன்னுடைய பொட்டலத்தை எடுத்துக் கொண்டு ஓட்டமாய் ஓடிப் போனது யாரோ ஒரு ஸ்திரீயுடன் பிரிய வார்த்தைகள் பேசிவிட்டு, அதை ஆடம்பரமாய்க் கொடுப்பதற்குத்தான். அவளும் அதை ஆவலுடன் திறந்திருப்பாள். அப்பொழுது அதில் 'ஸ்பெஷல் ஆர்டர்' ஆன பட்டுப் புடைவைக்குப் பதிலாக ஒரு வெள்ளைத் துணியை, அவனுக்கு மாத்திரம் புகழ்ச்சியாக இருக்கிற ஒருவெள்ளைத் துணியைக் காணும் பொழுது, அவனை அவள் என்ன என்ன சொல்லி யிருப்பாள்? அவள் ஒன்றும் அவனுக்குச் சளைத்தவளாக இருக்க மாட்டாளே! இந்தக் காட்சியை ஒரு 'ஸ்டூடியோ'வும் எடுக்காமல் போய்விட்டதே!" என்று மறுபடியும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர்.

அந்த வைபவத்தைத் தன் மன சில் கற்பனை செய்தபொழுது, அகோரமையருக்கும் தடுக்க முடியாத சிரிப்பு வந்து, மனச் சாந்தியுடன் மனைவியிடம் திரும்பினர். 'நட்சத்திர பக்தியால் யாருக்கு என்ன லாபம்?' என்று அவள் அடிக்கடி கேட்பதுண்டல்லவா? 'இதோ பார்! அதனுல்தான் உனக்கு இந்தப் புடைவை கிடைத்தது!' என்று சொல்லிக் காட்டினுல் எவ்வளவு திருப்தியாக இருக்கும்! நிஜத்தைச் சொல்ல முடியாதபடி, ஒரு பொய்யைச் சொல்லியாய் விட்டதே என்கிற ஒரு குறைதான் அவருக்கு.

✲

## ஈசன் இருப்பிடம்

எல்லா மனிதர்களிடத்திலும் ஈசுவரன் இருக்கிருன். ஆனுல், ஈசுவரனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

## கைக்குத்தல் அரிசி

கைக்குத்தலரிசியில், முளையும் மாத் தவிட்டில் பெரும்பகுதியும் அரிசியைவிட்டு அகல்வதில்லை. ஆகவே கைக்குத்தலரிசியை உபயோகிப்பதனுல், அரிசியிலுள்ள உணவுச் சத்து முழுமையும் கிடைக்கிறது.

—உணவுப் பஞ்சம்

## பெருமை தருபவை

பெருங் கூட்டத்தை, பகைவரை தைரியமாக எதிர்த்துப் போராடுதல்; அவர்களுடன் தனியே நின்று, ஒருவன் எவ்வளவுதான் எதிர்த்து நிற்க முடியும் என்று பார்த்தால்; சண்டை, வதை, சிறை, பொதுஜன வெறுப்பு, இவற்றை நேருக்கு நேராகக் காணல்;

தூக்குமேடை ஏறுதல், துப்பாக்கிகளுக்கு நேரே அலட்சியமாக முன்னேறுதல்; ஆம், ஒரு தெய்வமாக இருத்தல்—இவை எவ்வளவு பெருமையானவை!

—வால்ட் விட்மன்

# புத்தக உலகம்

**கம்பன் கவி அமுதம்:** சென்னைக் கம்பர் கழக வெளியீடு. விற்பனை உரிமையாளர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. கிரௌன் 1×8. 168 பக்கம். மலிவுப் பதிப்பு ரூ. 2-8-0, உயரிய பதிப்பு ரூ. 3-0-0, கைக் காகிதம்.

தமிழைப் படித்துப் பிழைக்க வேண்டிய பண்டிதர்கள் மட்டுமே கம்பனைப் படித்து ரசிக்கலாம் என்ற நிலைமையை மாற்றிய பெருமை கம்பன் புகழ் பரப்பிய ரசிக மணி டி. கே. சி. அவர்களையும், கம்பர் கழகங்களையும் சாரும். பெரும் புலவர்களைப் பற்றி எத்தனை முறை எத்தனை மாதிரி எழுதினாலும் தகும். அதுவும், தக்காரைக் கொண்டு, நல்ல முறையில், சொற்பொழிவுகள், சர்ச்சைகள் நடத்துவித்து, கட்டுரைகள், புத்தகங்கள் வெளியிடுவது மிகவும் போற்றத் தக்க முயற்சி. இந்த நல்ல காரியத்தைத் திருவாளர்கள் கி. வா. ஜகந்நாதன், க. சோமசுந்தரம் ஆகிய தமிழறிஞர்கள் துணைக்கொண்டு சென்னைக் கம்பர் கழகம் செய்து வருகிறது. அதன் முயற்சியில் இந்த வெளியீடும் ஒன்று. இதில் பதினாறு கட்டுரைகளும், ஒரு பாடலும் உள்ளன. வித்வான் மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்களின் 'சேக்கிழாரும் கம்பரும்' மிக நன்றாய் இருக்கிறது. 'கம்பர் கடவுட் கொள்கை' பண்டித நடை போடும் எண்ணத்தில் இவ்வளவு விறைப்பாய்ச் செல்ல வேண்டிய தேவையில்லை. நண்பர் சா. கணேசன் அவர்களின் 'கம்பன் கனவு' சுவையாயிருக்கிறது. கே. ஞானம்பாள் அவர்களின் 'கைகேயி' நேர்த்தியாய் அமைந்துள்ளது. 'கம்பனது கதாநாயகி,' 'பாடற் பண்பு' இரண்டும் கச்சிதமாயிருக்கின்றன. அறிஞர் மு. வரதராசனார் அவர்களின் 'உள்ளம் குளிர்ந்தது' பிற்பகுதியில் சடக்கென்று, அவரது இயல்புக்கு முற்றும் மாறாக, ஏன் இப்படி ஒடிந்து நின்று விடுகிறது என்பது விளங்கவில்லை. 'கம்பர்' என்ற முதல் கட்டுரை முதல்தரமாயில்லை. 'கம்பன் கலைவளம்' என்ற கடைசிப் பாட்டை ரசிக்கும் பண்பு நமக்கில்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம். மற்றவை மற்றவைதான். மொத்தத்தில் இந்தக் கட்டுரைத் தொகுப்பு பயனுடையதுதான். ஆனால், இதைப் பாட புத்தகமாக வைக்க எண்ணினால், பிழை திருத்துவதிலும் (பக்கம் 79, 137, முதலியன) விஷயங்களை முறையாய்த் தொகுப்பதிலும் இன்னும் சற்று அதிகக் கவனம் எடுத்துக் கொள்வது நல்லது. ஒரு வேளை, நாம் பார்க்காத இப்புத்தகத்தின் உயரிய பதிப்பு இன்னும் திருத்தமாக அமைந்திருக்கலாம்.

**மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்**

1. **கண்மணி ராஜம்** (பாடல்கள்): ஆசிரியர்: ஸ்ரீ யோகியார். கிரௌன் 1×32. 36 பக்கம். விலை 4 அணா. 2. **இளவேனில்** (கவிதைகள்): ஆசிரியர்: 'சோமு.' கிரௌன் 1×8. 124 பக்கம். விலை ரூ. 2. 3. **சாவின் முத்தம்** (பாடல்கள்): ஆசிரியர்: 'சுரதா'. கிரௌன் 1×8. 40 பக்கம். விலை 8 அணா. ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி.

1. இன்று, தமிழிலக்கிய உலகில், கவிஞரெனப் பகிரங்கமாய் வெளிவந்துள்ள பலரின் கவிதை வெளிப்பாடுகள் பேரளவில் ஒரே புகைச்சலாகவும், ஓரளவில் நல்ல கவிதைப் பண்பு வாய்ந்தனவாகவும் இருப்பது தான் நம்முடைய துன்ப அனுபவம். நடு நடுவில் பாரதி தாசன், ஸ்ரீ ச. து. சுப்பிரமணிய யோகியார் போன்ற நல்ல கவிஞர்களின் பாடல்களும் நமக்குக் கிட்டாவிட்டால், மட்டப் பாட்டுக்களையே வெள்ளம் வெள்ளமாய்ச் சகித்துக் கொண்டிருக்க நம்மால் முடியாது. யோகியாரின் பாடல்களில் பெரும்பாலானவை சோடை போவதில்லை. சொல் நயம், பொருள்

நயம், கற்பனைச் செறிவு, ஓசை யின்பம், உருவ அழகு, தாளக் கச்சிதம் எல்லாம் மிக்க இயல்பாய் இசைவு பெற்றுப் பொலியும் வண்ணம் பாட்டிசைப்பதில் இந்தக் கவிஞர் தேர்ந்தவர். இச் சிறு புத்தகத்தில் அடங்கியுள்ள பாடல்கள் சுவை யினத்தில் மிக்க ஆழமான துன்பச் சுவையை மிக மிக நன்ருய் உணர்த்துகின்றன. நாம் சொல்வது சரியா, தப்பா என்பதை நீங்களே யோகியார் பாடல்களைப் படித்துப் பார்த்துத் தேர்ந்து கொள்ளுங்கள்.

2. தமிழறிஞரின் முன்னுரை, 'பீ.ஏ.' வால் முளைத்த பதிப்பாசிரியரின் பதிப்புரை, பதிப்பாசிரியரின் பதிப்புரை மூலம் தாக்கீது விடும் ரசிக மணியின் சிபாரிசு, ஆசிரியரின் புகைப் படம், அழகழகான சித்திரங்கள் ஆகிய இத்தனையும் ஒருசேர நம்முன் காட்சியளிக்கும் இந்த 'இளவேனில்' முதலிய கவிதைகளில் அப்படி யொன்றும் நம்மைப் பிரமிக்க வைத்துவிடுகிற அளவுக்குக் கவிதை நயம் ஒளிரவில்லை. ஆனல், இவை மட்ட ரகமானவை யல்ல. சில பாடல்கள் அமைவான அழகும் சுவையும் கொண்டிருக்கின்றன. பலவற்றில் 'முதுவேனில்' வாடை வீசவே செய்கிறது. கவிஞர் இன்னும் சற்றுத் துணிவுடன் பாடி யிருக்கலாம்.

3. "சிந்திக்காதவன்—குறிக்கோள் இல்லாதவன் கவிஞனுக இருக்க முடியாது. இது அசைக்க முடியாத கருத்தாகும்."—"உளைச் சேற்றிலே"—"சாயலே் புலமைக்கு வேர்"—"இயற்கைக்கு ஏற்ற ஆனல் புரட்சிகரமான"—"எனக்கு ஒரு மகிழ்ச்சி... அவர்களைப் பாராட்ட வேண்டும்"—இவை, "அறிமுகம்" என்ற தலைப்பின் கீழ்க் காணப்படுகின்றன!!

சாவின் முத்தம்
தேம்பிய குறை
கரும்பில் கனல் எடு
தேன் கூரை
பிரேத ராஜ்யம்
சுடாத இரவு
கூதிரை யாமம்

—இந்தப் பொருளடக்கத்தைப் படித்ததும், சாவின் முத்தத்துக்கு ஆசைப்பட நமக்குத் தைரியம் வரவில்லை. மனத்தைத் தேற்றிக் கொண்டு, துணிந்து படிக்க ஆரம்பித்தோம் — விளங்க வில்லை! தோல்வியை ஒப்புக் கொள்கிருேம்.

**கந்தர்வ வாழ்க்கை:** ஆசிரியர்: கி. ரா. டெம்மி 1×8 276 பக்கம். விலை ரூ. 5. வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி.

பெரிய புத்தகம். நிறையப் பக்கங்கள். அற்புதமான சிறுகதைக் கட்டங்கள். அனைத்தையும் சேர்த்துப் பிடித்து அழகாக உருவப்படுத்தும் கதைக் கோள். அத்தியாயத்துக்கு அத்தியாயம் சலிப்புத்தட்டாமல், கதா சுவாரஸ்யம் தொய்வு காணுமல், பரபரவென்று செல்லும் உயர்ந்த நாவலைப் போல் வேக நடை போட்டு, இனிய முறையில் வந்து முடியும் உயர்ந்த நாவல். நயமான சரக்கு. மெருகு பற்ருது. நிறையப் பிழைகள் —எழுத்து, இலக்கணம், அமைப்பாண்மை எல்லாம்தான். திருஷ்டி பரிகாரமாக முகப்பு அட்டையில் போட்டிருக்கும் பொம்மை கன ஜோர்! இந்துப் பெண் ஒருத்தி, கிறிஸ்துவ நாகரிகத்தைத் தழுவி, கடைசியில் முஸ்லிம் மதத்தில் அடைக்கலம் புகலாமா என்ற பெரும் பிரச்னைக்கு ஆளாகி, சிந்தனைக் கதிர்கள்மூலம் 'ஜிவ்'வென்று வானத்தில் எழும்பி, பிறைச் சந்திரனின் ஒரு கோடியில் அபாயகரமான நிலைமையில் அமர்ந்துள்ள நிலையில் போட்டிருக்கும் படத்திற்கு, சினிமா விளம்பர ரீதியில் அமைந்த 'கந்தர்வ வாழ்க்கை' என்ற கொட்டை எழுத்துக்கள் முத்தாய்ப்பு வைத்து விடுகின்றன!

**குற்றவாளி யார்?:** சம்பூரத்ன தூபே ஹிந்தியில் எழுதியது. மொழி பெயர்ப்பு: அலமேலு தேவி. கிரௌன் 1×8. 194 பக்கம். விலை ரூ. 3. வெளியிட்டோர்: அன்னை நிலையம், ராயவரம், புதுக்கோட்டை.

தற்காலத்தில் பெண்கள் பெறும் கல்வியானது அவர்களை என்

னென்ன விதமான விபரீதங்களில் கொண்டுபோய் மாட்டி வைத்து விடுகின்றது என்பதைச் சுவை பெறச் சொல்லிச் செல்லுகிறது. நல்ல கதை. பெண்களுக்கென்று உரிய, நேரடியான, தெளிவான, சரள நடையில் மொழி பெயர்ப்பாளர் இதைத் தமிழில் கொண்டு வந்திருக்கிறார். "வந்தான் இங்கே அவன்" என்ற தோரணையில்தான் ஹிந்தி பாஷையிலுள்ளவற்றைத் தமிழில் கொண்டு வர முடியுமோ வென்ற சந்தேகம் வலுப்பெறத் தொடங்கியுள்ள இந்தக் காலத்தில், ஹிந்தி வக்ரங்கள் கூடுமான வரை இல்லாமல் வெளிவரும் மொழி பெயர்ப்புக்களை யாரும் ஆதரிக்கவே செய்வர்.

**கலாவல்லி:** ஆசிரியர்: ஆ. சண்முகவேலன். கிரௌன் 1×8. 170 பக்கம். விலை ரூ. 1-4-0. வெளியிட்டோர்: ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், சென்னை.

"ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள Twelfth Night என்னும் இன்ப நாடகத்தைத் தழுவி இஃது எழுதப்பட்டுள்ளது" என்கிறது ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் ஆங்கிலோ - இந்திய முகவுரை. இதனை மொழிபெயர்க்கவோ, வேறு வகையில் பயன்படுத்திக் கொள்ளவோ கூடாதென்று ஒரு குறிப்புச் சொல்லுகிறது. இது சொந்தமாய் எழுதிய தமிழ்ச் சமூகநாடகம் என்று ஆசிரியரின் ஐரோப்பியக் கோலப் படத்துக்குக் கீழே ஆங்கிலத்தில் அச்சடித்திருக்கிறது. மதிப்புரைகள், பதிப்புரை எல்லாம் இருக்கின்றன. இந்தக் கோலாகலங்களுக்கு இரையான முதல் எட்டுப் பக்கங்களைக் கடந்ததும், நமக்கு ஒரே எரிச்சலும் தலைவலியும் உண்டாகி விடுகின்றன. ஆனால், நாடகத்தைப் படிக்கத் தொடங்கியதும், நமக்கு மலைப்பு ஏற்படுகிறது. படிக்கப் படிக்க, இந்த மலைப்பு வியப்பாக மாறி, இறுதியில் மகிழ்ச்சியாகவே ஆகிவிடுகிறது. ஆசிரியரைப் பாராட்ட வேண்டுமென்கிற எண்ணம் கூட ஏற்பட்டு விடுகிறது. — முதல் எட்டுப் பக்கம் உஷார்!

**தமிழர் யார்?:** ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை. கிரௌன் 1×8. 48 பக்கம். விலை 8 அணா. வெளியிட்டோர்: முத்தமிழ் நிலையம், சென்னை.

கூர்ந்து சிந்தித்துப் படிக்க வேண்டிய அருமையான ஆராய்ச்சி நூல்.

**புதையுண்ட நாகரிகம்:** ஆசிரியர்: "சித்தன்." பூல்ஸ்கேப் 1×8. 28 பக்கம். விலை 6 அணா. வெளியிட்டோர்: மின்னல் பதிப்பகம், புதுச்சேரி.

இதுவும் அதுவே-சுருங்கிய வடிவில்.

**யார்க்கும் அன்பர் சீதக்காதி:** ஆசிரியர்: காயல்பட்டினம் M. முகம்மது ஹஸன். டெம்மி 1×8. 22 பக்கம். விலை 5 அணா. கிடைக்குமிடம்: ஹஸன் ஸ்டோர்ஸ், காயல் பட்டினம்.

"ஜாதி குலப் பிறப்பென்னும் சந்தேக"ங்களுக்கு அப்பாற்பட்ட தமிழ்க் கொடை வள்ளலின் உருக்கமான, நல்ல வரலாறு.

**நல்ல கல்வித் திட்டம்:** ஆக்கியோன்: ந. இராஜகோபாலன். டெம்மி 1×8. 8 பக்கம். விலை 2 அணா. வெளியீடு: நித்திய ஜீவிய சங்கம், ஆம்பூர்.

வெகு காரசாரமான பாஷையில், புண்பட்ட பட்டதாரியின் உள்ளத்தோடு, தற்காலக் கல்வித் திட்டத்தை ஒரே விளாசாக விளாசுகிறது. பெண் கல்வியின் முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறது. பயனுள்ள புதுத் திட்டம் வேண்டுமென்று, கடைசிப் பக்கத்தில், "எங்கும் நிறைந்த பரம்பொருளைப் பெரிதும் பிரார்த்திக்கின்"றது!!

—க. சு. அறிவோன்

✲

## சிருஷ்டி

ஒருவார வேலை முடிந்து, கடவுள் களைத்திருந்த சமயத்தில் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான்.

—மார்க் டிவெயின்

ஜுபிடரின்

# வால்மீகி

## டாக்கி பாட்டுகள்



மதுரகீதவாணி

## என். ஸி. வசந்தகோகிலம்

N. 18281 { புவி மீது
ஜெய ஜெய புவனபதே

N. 18284 { பொய் தவமும்
சுந்தரானந்தா



## ஸ்ரீ ஹொன்னப்பா பாகவதர்

N. 18282 { ஸ்ரீ வைகுண்டபதே
2 பாகங்கள்
(ராகமாலிகை)

N. 18283 { பகவான் அவதரிப்பார்
(கரஹரப்பிரியா)
ராம ஜெய
(புன்னாகவராளி)

## "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டுகள்

எல்லா கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

**தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்,**

டம் டம் — லாகூர் — டெல்லி — பம்பாய் — மதராஸ்




மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில், தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.




# லிப்டன்ஸ்

## வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

லிப்டன் தேனீர் அருந்துகையில்

ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்




அழகுக்கு அழகு செய்வது தங்கம், வைர நகை தான், கண்டசரம், காப்பு, தோடு, மூக்குத்தி, புது மோஸ்தரில் செய்து கொடுக்கிறோம்.

உத்தரவாதமுள்ள தங்கப், வைர நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள் :

**பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்**

கோயமுத்தூர்

தந்தி : 'ராஜுச' தபால் பெட்டி : 139 போன் : 218-A



நிர்வாக ஆசிரியர் : வை. கோவிந்தன் ஆசிரியர் : சுப. நாராயணன்

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., Madras 14

Regd. No. M. 4162



இந்திய சினிமா உலகில் ...
விளங்கும் கந்தர்வகானகுந்தன்லால்
ஸைகால் 1906-ம் ஆண்டில்
ஸ்ரீநகரில் பிறந்தார். கொஞ்ச கா
லம் இந்திய சர்க்காரிலும், வட
மேற்கு ரெயில்வேயிலும் வே
பார்த்தார். 1931-ல் நியூ தியேட்ட
ரில் சேர்ந்து அன்றுமுதல் தன
இனிய கானத்தால் மக்களை மன
மகிழச் செய்து வருகிறார். மொக
லாய சக்கரவர்த்தி அக்பர் சபை
லிருந்த பிரதான பா
"தான்ஸன்" ஜீவிய சரித்திரப்
தில் பிரதான பாகம் வகி
சனது சங்கீத நிபுணத்துவத்
கரையைக் கண்டதுபோல் வே
றெந்தப் படத்திலும் காணவில்
லையென்றே சொல்லலாம்.

# ஸைகால் பாடுகையில்..

உலகின் தலைசிறந்த நடிகர்கள டீ
அருந்துவதின் நன்மையை அறிந்தவர்கள்.
கலை சிருஷ்டியில் மனதைச் செலுத்த
டீயைப்போல உதவும் பானம் வே
றெதுவுமில்லை. இனிமையான குரல்
வேமுள்ள ஸைகால் எழுதுவதைப்
படியுங்கள்: "டீயை என் அவ்வளவாக
நான் விரும்புகிறேன் என்பதைச் சொல்லு
கிறேன். பாடவும், நடிக்கவும்—என் ஆனந்த
மடைய எதைச்செய்யவும் அது சக்தி
யளிக்கிறது. என்னைப் பாடச்
சொல்லுமுன் ஒருகப் டீ
கொடுங்கள்"

# கற்பனைசக் திக்கு..



# டீ

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்ப...